# பண்மகள்

நூ.ப. 9060

## கலாவல்லி மலர்

உலக மதங்கள்

மகளிர் கல்லூரி
பண்டத்தரிப்பு
1986

200
உலக
SLIPR


பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வரலாற்று ஏட்டிலே காவியம் படைத்த எங்கள் அன்னை, அதிபர் கலாவல்லி ஆறுமுகதாசன் அவர்களே!

கல்விக் களஞ்சியமாக, கலைக்கோயிலாக, எங்கள் கல்லூரியை உயர்த்திய பெருந்தகையே!

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தன்னலமற்ற சேவை செய்து "அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு" என்னும் புனித வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்ந்து வரும் எங்கள் தலைவியே!

தாங்கள் ஒய்வு பெற்று மணிவிழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் தங்கள் நல்லாசியை என்றும் நாடி நின்று எமது அன்புக் காணிக்கையாக இம் மலரினைத் தங்கள் உள்ளத் தாமரைக்குச் சமர்ப்பணஞ் செய்கிறோம்.

| | |
|---|---|
| | உப-அதிபர், ஆசிரியர் |
| *மகளிர் கல்லூரி* | மாணவர் — பெற்றோர் |
| *பண்டத்தரிப்பு* | பழைய மாணவர் |
| *22-07-1986* | நலன் விரும்பிகள், நண்பர்கள் |



# சமர்ப்பணம்



# உலக மதங்கள்

## பேரறிஞர்களின் கட்டுரைத் தொகுப்பு

வெளியீடு :

**திருமதி. கலாவல்லி ஆறுமுகதாசன்**
ஓய்வு பெறும் அதிபர் அவர்கள்
பணிநலம் பாராட்டு விழாச் சபை
மகளிர் கல்லூரி
பண்டத்தரிப்பு.

1986

# பொருளடக்கம்*


1. தோற்றுவாய்

2. ஆசியுரை :

   (i) நல்லை, ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்.

   (ii) கலாநிதி, மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள்.
   தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாண ஆதீன [அத்தியட்சகர்

3. அணிந்துரை : பேராசிரியர், கலாநிதி, சு. வித்தியானந்தன்
   துணை வேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

4. மக்களும் மதங்களும் — அறிமுகவுரை:
   பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
   தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

5. இந்து சமயம் — சில பொதுக் கருத்துக்கள் :
   திரு. வி. சிவசாமி, M. A.
   தலைவர், சம்ஸ்கிருதத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

6. சைவம் : புலவர் கா. வேல்முருகன் B. O. L.
   பகுதி முதல்வர், தமிழ்த்துறை, மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.

7. வைணவம் : திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) M. A.
   அதிபர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

8. பௌத்த மதம் : கலாநிதி சி. க. சிற்றம்பலம்
   தலைவர், வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9. கத்தோலிக்க மதம் : திரு. சாமுவேல் பெனடிக்ற் ஆசிரியர்

10. புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவம் :
    திரு. எஸ். ஜெபநேசன் M. A. B. D.
    துணை முதல்வர், யாழ்ப்பாணக் கல்லூரி.

11. இஸ்லாம் (சாந்தி வழி) :
    ஜனப். M. S. அப்துல் றஹீம் B. A. Dip - in - Ed.
    யாழ் / வைத்தீஸ்வர வித்தியாலயம்.

12, உலக மதங்களின் ஒருமைப்பாடு :
    கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன்
    தலைவர் இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

13. சமணம் : திரு. க. உமாமகேஸ்வரன்



அச்சுப்பதிவு : கு. வி. அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

# எங்கள் அதிபர்

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி



திருமதி

## கலாவல்லி ஆறுமுகதாசன்

அவர்கள்

1972-1986

# தோற்றுவாய்

கடவுட்பற்று சமய நம்பிக்கை என்பன பண்டு தொட்டே உலகளாவிய ரீதியில் வளர்ந்து வந்துள்ளன. நாகரிகம், பண்பாடு என்பன ஓங்கவும், மனித இயல் சிறப்படையவும் சமயங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. எனினும் அவற்றினிடையே போட்டிகளும் பூசல்களும் ஏற்பட்டன என்பது வரலாற்று உண்மையே. ஒரு காலத்திலேற்பட்ட மதப்பூசல்கள் மத்தியிலும் அவற்றினிடையே சம நோக்கை ஏற்படுத்தி சமரச ஒருமைப்பாட்டைக் கட்டி எழுப்பிய சமய சிந்தனையாளர் பலர் ஒவ்வொரு மதத்திலும் இருந்திருக்கின்றார்கள்.

'உள்ளது ஒருபொருள்; அதை அடையப் பல வழிகள் உண்டு, என்பர். பாதைகளின் மாறுபாடு பகைமையை வளர்க்க ஏதுவாயிற்று அன்றி மூலப் பொருளன்று. எல்லா மதக்கோட்பாடுகளும் மனம் வாக்குக் கடந்த அந்த உண்மைப் பொருளைப் பற்றிப் பேசுகின்றனவேயன்றி வேறில்லை. எந்த ஒரு மதமும் மற்றொன்றுடன் முட்டிமோதிப் போரிட வேண்டுமெனக் கூறுவதாக யாண்டுமில்லை. தமிழகத்தை, பல்வேறு மதங்களும் ஒருங்கிணைந்து வளரும் பன்மரச் சோலையாகவே தமிழ் மக்களுள் பெரும்பாலானோர் கருதினர். இதனை மணிமேகலையில் வரும் 'சமயக் கணக்கர் தம் திறம்கேட்ட காதை' என்னும் பகுதி வலியுறுத்தும். அவ்வழிகாட்டுதலில் உந்தப்பெற்ற நாம், பழம் பெரும் சமயங்களுள் முதன்மைய எனக் கருதும் சிலவற்றைத் தொகுத்து உலக மதங்கள் என்னும் தலைப்பில் ஒரு தனி நூலாக வெளியிட விரும்பினோம்.

இன்றைய சூழ்நிலையில் சமய வேறுபாடுகளைக் கடந்து இனவுணர்வு அடிப்படையில் ஒன்றுபட்டு வாழும் நிலையே வேண்டப்படுகின்றது. மற்றும் அமைதியை இழந்து தவிக்கும் நம் மக்களுக்கு ஒழுக்க நெறி புகட்டவல்ல சமய உண்மைகளும், நம்பிக்கைகளும், பத்தி நெறியும் தேவைப்படுகின்றன. இவற்றை விளக்கும் வகையில் சமயங்களின் தோற்றம், வளர்ச்சி, தத்துவங்கள் என்பவற்றை எல்லாம் எடுத்துரைக்கும் சுருக்க நூலாக இஃது அமைய வேண்டும் என விரும்பினோம். அத்துடன் இந்நூல் நம்மையெல்லாம் ஆளாக்கிய நம் கல்லூரி அதிபர், திருமதி. கல்லாவல்லி ஆறுமுகதாசன் அவர்கள் ஒய்வு பெறும் போது அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் எங்கள் அன்புக் காணிக்கை மலராக இருக்கவேண்டும் எனவும் விரும்பினோம்.

இம் முயற்சிக்கு அதிபர் திருமதி. மு. சுப்பிரமணியம் அவர்களும் மாணவர் ஒன்றியத்தினரும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். நம் விருப்பத்திற்கமைய பேரறிஞர்கள் பலர் உலகமதங்கள் பற்றிய கட்டுரைகளை நல்கினர். கட்டுரைகள் வழங்கிய அப்பெருந்தகையோர்க்கு எங்கள் உளமார்ந்த நன்றி உரித்தாகும்.

இந்நூல் சிறப்புற வாழ்த்துரை வழங்கிய அருளாளர், நல்லை ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கும் தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாணம் ஆதீன அத்தியட்சகர் மகாகனம் டேவிட் ஜெயரத்தினம் அம்பலவாணர் அவர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவிக்கின்றோம்.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலுக்குரிய அரிய முகவுரையை நல்கிய யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர் களுக்கு எங்கள் இதயம் கலந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

அச்சுத்தாள்களைக் குறைந்த விலையில் பெற்று உதவிய திரு. ந. கருணை ஆனந்தன் B. A. J.P, கட்டுரைகள் படி எடுத்து உதவிய செல்வி. சாந்தினி கந்தசாமி, பல சிரமங்கள் மத்தியில் அச்சுப்படிகளை ஒப்புநோக்கி உதவிய பண்டிதர் திரு. க. மயில்வாகனன், திரு. வ. தவராசா B. A. குரும்பசிட்டி இராசரத்தினம் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகும்.

வண்ண அட்டைப்பட ஓவியம் வரைந்துதவிய சுழிபுரம் சங்கீதபூஷணம் முத்துக்குமாரசாமி சர்மா அவர்களின் புதல்வன் செந்திற்குமரனுக்கும், பல்லாற்றானும் உதவிய திரு. சி. மணிவண்ணனுக்கும் நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் கு. வி அச்சக உரிமை யாளர் திரு. கு. வி. அமிர்தலிங்கதுரை அவர்களுக்கும் ஏனைய அச்சக உதவியாளர் களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் உவகை அடைகின்றோம். இலவசமாக அட்டைப்படத்தை அழகுற அச்சிட்டு உதவிய மெய்கண்டான் நிறுவனத்தினர்க்கும் எங்கள் இதயங்கலந்த நன்றி.

இங்ஙனம்
கா. வேல்முருகன் – சி. நடராசா
விழாச் சபையினர் சார்பில்

மகளிர் கல்லூரி
பண்டத்தரிப்பு.
1-10-86

உ

குருபாதம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்**

**வழங்கிய**

# ஆசியுரை

திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் அவர்கள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபராகப் பணியாற்றி அக்கல்லூரியைப் புகழ்மணக்கும் வகையில் கட்டி எழுப்பியுள்ளார். மாதர் கல்வி நலம் பேணிக்காத்து வந்துள்ளார். இவர்களது பணிநலம் பாராட்டு விழா நிகழவிருப்பதும் அதனோடு தொடர்பாக உலக மதங்கள் என்னும் கட்டுரைத்தொகுப்பு நூல் வெளிவருவதும் பாராட்டிற் குரியனவாகும். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பதற்கிணங்க இந்நிகழ்ச்சிகள் திருமதி கலாவல்லி அவர்கள்மேல் மக்கள் மனதில் பதிந்துறையும் பேரன்பைக் காட்டுகின்றன.

பெறுதற்கரிய மானிடப்பிறப்பை எடுத்த நாம் அடையவேண்டிய இறுதி நிலை முக்தியேயாகும். நதிகள் பலவாயினும் சங்கமமாவது சமுத்திரத்திலேதான். அதேபோல் மதக்கொள்கைகள் பலவாயினும் முக்தி இன்பம் பெறுவதே எல்லா மதங்களின் அடிப்படை இலட்சியம். நாம் எம் மதத்தைச் சார்ந்தவர் களாக இருந்தாலும் மற்றைய மதங்களின் உண்மைத் தத்துவங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

அப்பொழுது ஆன்மீக விசாரம் ஓரளவு பூரணமாகும். இதற்கமையச் சிறந்த கட்டுரைகளைக்கொண்டு 'உலக மதங்கள்' என்னும் நூல் வெளிவரு கிறது.

அன்பர்களின் இந்நற்பணியை மெச்சுகிறோம். இவ்விழா செவ்வனே நிறைவுற இறையருளைச் சிந்தித்து எமது உளமார்ந்த ஆசிகளை வழங்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்**

***நல்லூர்:***
***1-10-86***

**தென்னிந்திய திருச்சபை**
**யாழ்ப்பாண ஆதீன அத்தியட்சகர்**
**கலாநிதி மகாகனம் டேவிற் ஜெயரத்தினம் அம்பலவாணர் அவர்கள்**
**வழங்கிய**

# ஆசியுரை

உலகத்தில் தோன்றிய சகல நாகரிகங்களும் மதங்களின் அடிப்படையிலே தோன்றின என்பது வரலாறு தெளிவாக்கும் உண்மை. மத நம்பிக்கை, விசுவாசம், வழிபாட்டு முறை என்பன, மனிதனின் வாழ்க்கை முழுவதையும் ஆக்கி அமைப்பதற்கு காரணமாயிருக்கின்றன. ஒரு சாகியத்தை, சமூகத்தை அறிவதற்கு அவற்றின் மதங்களையும் கொள்கைகளையும் புரிந்துகொள்வது இன்றியமையாததாகும். இப்படியான சகல மத அறிவைப் பெருக்குவதற்கு எடுக்கப்படும் எல்லா எத்தனங்களும் மெச்சப்படவேண்டும்.

தமிழ் மக்களின் சரித்திரத்திலும் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் இந்து மதம், கிறிஸ்தவ மதம், பௌத்த மதம், இஸ்லாமிய மதம் யாவும் பெரும் பங்கை எடுத்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம். எனவே இம் மதங்களின் உட்பொருளையும் தனிச் சிறப்புகளையும் தமிழ் மக்களாகிய நாம் ஆராய்ந்து ஆழமாக அறிவது நங்கடமையாகும். இச்சிறு நூல் அப்படியான அறிவை வளர்க்க எத்தனிக்கின்றது. இப்போது காலத்துக் காலம் நடைபெறும் சகல சமய மாநாடுகள், பல்வேறு மதத்தலைவர்கள் ஒன்றுகூடல், அவர்களின் சமய சிந்தனை வெளிப்பாடுகள் எல்லாம் வேற்றுமையில் ஒற்றுமையைப் பெரிதும் ஏற்படுத்த உதவுகின்றன. அவ்வகையிலே இந்நூலும் அமைந்திருக்கின்றது. இம் முயற்சி இப்படியே மேலும் வளர்ந்து விரிவான சர்வ மத ஒப்பியல் ஆய்வு நூல்கள் பல, தமிழ் மொழியில் தோன்ற வேண்டும் என்பதே எங்கள் ஆவல்.

பல்வேறு நோக்கில் பயன்படும் 'உலக மதம்' என்னும் இந்நூல் தோன்றக் காரணமாய் இருப்பவர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் ஆவர்.. பல்லாண்டு காலம் அக் கல்லூரி மேன்மையுறப் பயன் கருதாது பணிபுரிந்த தூய்மை உள்ளம் கொண்ட தலைவியைப் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றோம்.

இனிய முறையில் பல அரிய கருத்துக்களைப் பிழிந்தெடுத்துக் கட்டுரை அமைப்பில் தந்த பேராசிரியர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும், நூலை வெளியிட்ட அதிபர் திருமதி. கலாவல்லி ஆறுமுகதாசன் பணிநலம் பாராட்டு விழாச் சபையினருக்கும் எம் பாராட்டும் வாழ்த்தும் உரித்தாகுக.

எல்லோரும் இன்புற்று நீடு வாழவும், நூல் சிறக்கவும் இறைவனின் நல்லாசியை வேண்டுவோமாக.

**டி. ஜே. அம்பலவாணர்**

பேராயர் இல்லம்,
வட்டுக்கோட்டை.
*1-10-86*

# அணிந்துரை

**பேராசிரியர், கலாநிதி. சு. வித்தியானந்தன்,**
*துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உலகச் சமயங்களிற் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்தவம் (ரேமன் கத்தோலிக்கம், புரொட்டஸ்தாந்தம்), இஸ்லாம் ஆகியன தமிழராற் பேணப் பட்டு வந்திருக்கின்றன. வைதிக சமயங்களாகிய சைவமும் வைணவமும் தமிழரின் மதங்களாக முதலிலிருந்து வந்தபோதும், சங்ககாலத்துக்குப்பின் சமணமும், பௌத்தமும் சில ஆண்டுகளாகத் தமிழகத்திற் செல்வாக்குப் பெற்றிருந்தன. சைவ நாயன்மாரின் தொண்டினாலும், ஆழ்வார்களின் பணிகளினாலும் இச்சமயங்களின் செல்வாக்கு பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் குறைந்து அருகிப் போனபோதும், அச்சமயத்தவர் தமிழிற் படைத்த இலக்கண நூல்களும் இலக்கியங்களும் தமிழர் வாழ்வில் அவை பெற்றிருந்த இடத்தை ஓரளவு வலியுறுத்துகின்றன. அச்சமயங்களின் சிறப்பியல்புகளை இந்துசமயம் தழுவிக் கொண்டமையும் அவற்றின் மறைவுக்கு ஒரு காரணமாகும். ஈழத்திலே தமிழர்களுள் ஒரு பகுதியினர் பலகாலமாகப் பௌத்தத்தைப் பின்பற்றி வந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள.

இஸ்லாமியர் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்ததிலிருந்து 'இஸ்லாமிய மதமும் தமிழரிடையே பரவியது. தமிழகத்திலும் ஈழத்திலும் இஸ்லாம் மதத்தைச் சார்ந்த தமிழ் மக்கள் பலர் உளர். அவர்களின் தாய்மொழி தமிழாகும். ஐரோப்பியர் வருகையினாலே கத்தோலிக்கம் புரொட்டஸ்தாந்தம் ஆகிய கிறித்தவமும் தமிழரிடையே பரவிற்று. தமிழ் பேசும் மக்கள் பலர் கிறிஸ்தவராக விளங்குவதோடு தமிழிற் பல இலக்கண இலக்கிய நூல்கள் படைத்துள்ளனர்.

இவ்வாறு தமிழர் பின்பற்றும் சமயங்கள் யாவும் பல அடிப்படைத் தத்துவங்களைப் போதிப்பதை அவதானிக்கலாம். கடவுளின் தன்மையை யாரிடத்திலும் எதனிடத்திலும் காணுதலே சமயம். இறைவன் உலகின் உயிர்களில் ஒன்றாய் இலங்கி இருந்து அதற்கு அப்பாலும் தனித்து நிற்கும் தன்மை உடையவன் என்பதை இந்துமதம் உணர்த்துகின்றது. உலகை இறைவனாகக் காண்பதாலும், உலகத்தொண்டே உற்றவன் தொண்டு என்று போற்றுவதும், அந்த மெய்ந்நெறியே உலகத்தைத் தன்னைப்போல ஒத்து அன்பால் நோக்கி அவ்வன்பிலே ஆண்டவனைக் காண்பதுவும்தான் சமயம்.

பிற சமயங்களும் இந்த அடிப்படையில் அமைக்கப்பட்டவையே! எல்லோரும் இன்புற்றிருப்பதையே எல்லாச்சமயங்களும் வற்புறுத்துகின்றன. இதற்காகவே பல சமயப் பெரியார்கள் தாம் துன்பமுற்றுப் பிறர் இன்பமுற வாழ்ந்தனர், அப்பரும் மாணிக்கவாசகரும் பிறரும் பெற்ற அல்லலே, அந்த அல்லலிடைப் பிறந்த அமைதியே, இன்று சைவத்தை வாழவைக்கின்றது. ஆழ்வாரிற் சிலர் அடைந்த துன்பமே இன்று வைணவத்தை வளர்க்கின்றது. மெக்காவும் மதினாவும் ஓடி ஆடி இடர்பட்டு அல்லலுற்ற முகமது (ஸல்) அவர்களின் மூச்சே இன்னும் இஸ்லாமிய மதத்தை வளர்க்கின்றது. சிலுவை ஏறிக் குருதி சிந்தி வதைபட்ட அந்த அன்பு நிலையே, யேசுவின் இரத்தமே, இன்று கிறிஸ்தவமாய் உருப்பெற்று ஓங்கி வருகின்றது. பெற்ற பெருஞ் செல்வத்தையும், உற்ற அரசையும், தங்கச் சிலைபோன்ற மங்கையையும் துறந்து, காடு சென்று துன்ப நீக்கத்திற்கு வழிகாண விழைந்த அந்தப் போதி நிழலில் பொன்னார் ஒளி, இன்று

பௌத்தத்தை வாழவைக்கின்றது. இப்படியே பிறசமயங்களும், இவ்வறப் பெரியோர்களது அன்பு வாழ்வே அச்சமயங்களை வாழவைக்கின்றது. தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் வாழ்வையே இச்சமயங்கள் வற்புறுத்தின.

.........''யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே''

என்ற பரிபாடற்பாட்டு இதனை உணர்த்துகின்றது. ஒன்றிய உணர்வு வாழ்க்கையையே சமயங்கள் வற்புறுத்துகின்றன. சைவசமயம் சமரசத்தை நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

''தென்னாடுடைய சிவனே போற்றி :
எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி !''

என்ற மணிமொழி உலகத்திற்கெல்லாம் இறைவனாயிருக்கின்ற அவனே தென்னாட்டிற் சிவனென வழங்கப்படுகிறானென்பதை விளக்குகின்றது. சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள், தாம் சமணத்தைச் சார்ந்தவராயிருந்த போதும், பிறசமயங்களைப் பற்றிக்கூறும்போதும், பிற சமயத் தெய்வங்களை வாழ்த்தும்போதும் அவ்வச்சமயத்தைச் சேர்ந்த சமய வாதியோ என்று எண்ணும்படி பாடுகின்றார்.

'நாராயணா என்னா நா என்ன நாவே' என்று பாடும்போது அவர் ஓர் ஆழ்வாரோ என எண்ண வேண்டியுள்ளது. குன்றக் குரவையைப் பார்க்கும்போது குமரன் அடியாரோ எனக் கருதவேண்டியுள்ளது 'பிறவாயாக்கைப் பெரியோன்' எனச் சிவனை ஏத்துகின்றார். இவ்வாறு சமரசம் காண்பதே சமயம். எல்லாவகையிலும் ஒன்றி வாழ்வதே சமரசம். 'தன்னைப் போலப் பிறரிடம் அன்பு கூர்க' என்ற யேசுவின் மொழி இதற்கு வழிகாட்டும். உன்னையும் மற்றவனையும் வேறு என்று கருதாது ஒத்து நோக்கின் அந்த உள்ளத்திற் சமரசம் அரும்பும். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற பழந்தமிழ்ப் பாட்டானது இதனை வலியுறுத்துகின்றது. 'எச் சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மை செயல்' என்பது ஔவையின் வாக்கு. எல்லாச் சமயங்களும் அன்பின் அடிப்படையில் அமைந்தன ; எல்லாச் சமயங்களும் ஒன்றே என்ற தத்துவ நெறியிலே தான் சமரசம் கால் கொள்ளும். தீது ஒழிய நன்மை செய் என்பதை சமயங்கள் எவ்வாறு வற்புறுத்துகின்றன ?

'பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்துள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கொத்த தேவர்பிரான்' என்று சுந்தரரும்,

'பொய்யனைத்தையும் விட்டவர் புத்தியுள் மெய்யனை' என்று அப்பரும் வாய்மையின் மேன்மையைக் கூறிச் சென்றனர்.

'வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற' என்று அப்பரும்,

''தன்னில் ஆசறு சித்தமு மின்றித்
தவமு யன்றுஅவ மாயின பேசிப்
பின்னல் ஆர்ச்சடைக் கட்டிஎன் பணித்தால்
பெரிதும் நீந்துவ தரிது...''

என்று சுந்தரரும் தூய உள்ளம் தேவை' என்பதை விளக்கியுள்ளார்கள்.

பாவை நோன்பாலே அரங்கனை அடைந்த ஆண்டாள், தம் தனி இன்பம் தலை சிறப்பதற்குக் காரணமாக அமைய வேண்டுவது உலகின்பம் என்று கண்டார். நாடு செழிக்க வேண்டுமென்று உணர்ந்தார் ; தீங்கு அகல வேண்டுமென்று செப்பினர்.

'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயல் உகள'

என்ற அவரின் பாடல் நாட்டை வாழ்விப்பன.

தீது ஒழிய நன்மை செய்வதைச் சமண ஆசிரியர் திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியிற் பின்வருமாறு கூறுகிறார்.

'தன்உயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனுய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயிராய்ப் பிறந்து உய்ந்து போகுமே'

மணிமேகலை சிறந்த பௌத்த நூல். அதன் ஆசிரியர்

'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' என்று கூறுகின்றார். தீதொழிந்து நன்மை செய்யும் நிலையில் நிற்பது இது. யேசுக்கிறிஸ்துவும் இவ்வுண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டினர். 'துயரப்படுகிறவர் பாக்கியவான்கள்' என்றார். 'உன்னைப்போலப் பிறரை நேசி' என்ற உயர்ந்த நோக்கை உடையதே கிறித்தவம். யேசுவின் வாழ்க்கை போன்று முகமது (ஸல்) அவர்களின் வாழ்வும் மக்கள் பொருட்டு வாடிய வாழ்வாகவே முடிகிறது. உலகம் உய்யவேண்டுமென்ற உண்மைக்கு உழைத்த முகமது (ஸல்) தீதொழிய நன்மை செய்ய வேண்டுமென்று வற்புறுத்திய முகமது (ஸல்) நாடுவிட்டு நாடு நடந்தார் ; ஊர்விட்டு ஊர் ஓடினர் - தமக்காக அல்ல - உலகம் உய்வதற்காக.

இத்தகைய உயரிய கொள்கைகளை - சமரசத்தை வளர்க்கும் வழிகளை - சகோதரத் துவத்தைப் பேணும் முறைகளை - எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலையை - அன்பின் வழி வாழ்க்கையைக் கொண்டவையே உலகத்துச் சமயங்கள். நாம் எம்மதத்தைச் சார்ந்த வர்களாக இருப்பினும், ஏனைய சமயங்களின் கொள்கைகளை, தத்துவங்களை, எல்லாச் சமயங்களுக்குமிடையே காணப்படும் ஒருமைப் பாட்டினை அறிந்து கொள்வது நல்வாழ்வு நடத்துவதற்கு உறுதுணையாகும். அந்த வகையில் 'உலக மதங்கள்' என்ற இந்நூல் பயன்படுமென எதிர்பார்க்கின்றோம். அத்தகைய நூலை வெளியிடுவோரையும், அந் நூலுக்கு அரிய கருத்துக்கள் செறிந்த கட்டுரைகள் வழங்கிய பெரியார்களையும் பாராட்டு கின்றோம்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''

15-9-86 க. வித்தியானந்தன்.

## மலர்க் குழு :

திருமதி. மு. சுப்பிரமணியம், B. A. Dip-in-Ed. (*தலைவர்*)
திருமதி. க. செல்வக்குணச்சந்திரன், B. A.
திரு. செ. சண்முகநாதன், B. Sc.
திரு. ந. கருணை ஆனந்தன், B.A., J. P.
திரு. நா. க. பத்மநாதன்
திருமதி. டொறின் அம்பிகாபதி
திருமதி. சுகிர்தம் முத்துராசா
திரு. சாமுவேல் பெனடிக்ற்
செல்வி. பிரதீபா சிவபாக்கியநாதன்

## மலர் ஆசிரியர் :

புலவர். திரு. கா. வேல்முருகன், B. O. L.
திரு. சி. நடராசா, B. A. Dip-in-Ed.

# மக்களும் மதங்களும்

## முகவுரை

**பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை**
*தலைவர் / தமிழ்த்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

மதம் எப்படித் தோன்றியது என்பதற்கு மக்கள் வெவ்வேறான விளக்கங்களை கொடுப்பார்கள். மதவாதிகள் உடனே தத்தம் மதத்தோற்றத்தைப் பற்றிய நம்பிக்கையையோ, ஐதிகத்தையோ வரலாற்றுச் செய்தியையோ எடுத்துக் கூறத்தொடங்கிவிடுவர். உலகிலே இன்று பிரசித்திபெற்று விளங்கும் மதங்களான கிறீத்தவம், இஸ்லாம், பௌத்தம், இந்து மதம் என்ற நான்கினையும் ஆராய்வதன் மூலம், மதத்தோற்றத்தை விளக்கிவிடலாமென்று வேறுசிலர் கருதுவர். பிரசித்தி பெற்ற மதம் என்று கூறும்போது, பெருந்தொகையான மக்கள் பின்பற்றும் மதமென்றே பொருள் கொள்ளவேண்டும். பெருந்தொகையான மக்கள் பின்பற்றுவதனால்மட்டும் ஒரு மதம் உயர்ந்ததோ, சிறந்ததோ ஆகிவிடாது. மதவுணர்ச்சியுள்ளவர்கள் தத்தம் மதமே உயர்ந்ததென்று பொதுவாகக்கருதுகிறார்கள். தீவிர மதவுணர்ச்சியுள்ளவர்கள் பிற சமயத்தவர்களைப் பொறுத்துக்கொள்ளவோ, மதிக்கவோ தயங்குகிறார்கள்.

உலகிலே தோன்றிய மதங்கள் எத்தனை என்பதற்கு எவரும் கணக்குக் காட்டவியலாது. மதம் என்ற சொல்லுக்குக் குறுகிய வரைவிலக்கணம் கொடுத்தால் மட்டுமே, மானிடவரலாற்றையும் மானிடவியலையும் தொல்லியலையும் ஆதாரமாகக் கொண்டு மதங்களைக் கணக்கிடலாம். இத்தனை மதங்கள் தோன்றிய நிலையிலே, நான்கு மதங்கள் மட்டும் உலக மதங்களாக மாறியமை வரலாற்றின் விசித்திரமென்றே கொள்ள வேண்டும். அழிந்து விட்ட மதங்களோடும் / அழிந்துகொண்டிருக்கும் மதங்களோடும் ஒப்பிடும்போது, இன்றும் செல்வாக்கோடு விளங்கும் மதங்கள் தாம் "உண்மையான மதங்கள்" என்று கூறிவிட முடியாது. காலரீதியிலும் இடரீதியிலும் மதமில்லாத மக்கள்குலம் என்று கூறத்தக்கதாக, ஒன்றும் இதுவரை தெரியவரவில்லை. ஒவ்வொரு மதமும் ஒருவராலோ, ஒருசிலராலோ தொடக்கப்பட்டதுதான். மக்களிடையே நிலவிய பிற மதங்களை அழித்தோ, இணைத்தோதான், மதங்கள் பரவத்தொடங்கின. மதங்களின் உண்மைகளை ஒப்பிட்டும் மதிப்பிட்டும் தாரதம்மியங்களை உணர்ந்ததனால் மட்டுமே, மக்கள் மதம் மாறினரெனக்கொள்ள முடியாது.

தமிழர்களின் சமயவரலாற்றை எடுத்துக்கொண்டால், அதை எங்கே தொடங்குவது என்ற வினா எழுகிறது. இந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த மக்கள் தென்னிந்தியர்களின் முன்னோர்களான திராவிடர் என்ற கருத்து இன்று பொதுவாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. இந்துவெளிச் சாசனங்கள் இன்னும் திருப்திகரமாக வாசிக்கப்படாமையால், இன்றும் சிறு கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சிவ வணக்கம் சக்தி வணக்கம் உட்பட இந்து சமயத்தின் சில கூறுகள் இந்துவெளி நாகரிக காலத்திலேயே உருப்பெற்று விட்டனவென்ற கருத்து தொல்லியலாளரால் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆரியர் படையெடுப்பினாலே இந்துநாகரிகம் அழிந்த பின்பு, இந்திய ஆரியரிடையே வேத இலக்கியங்கள் தோன்றுகின்றன. ஆரியர் வழிபாட்டு முறைகள் மட்டுமன்றி, இந்துவெளி வழிபாட்டு முறைகளும் வேத இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. வேத இலக்கியங்கள் தோன்றத் தொடங்கிய காலம் கி.மு. 1500 வரை என்பது இன்றைய ஆராய்ச்சியாளரின் முடிவு.

தென்னிந்தியாவிலுள்ள தமிழர்களின் மிகப்பழைய இலக்கியங்கள், சாசனங்கள்,

இலக்கணமென இன்று கிடைப்பவை கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவையென்பது இன்றைய ஆராய்ச்சியாளரின் துணிபு. தமிழர்களுக்குப் பிரத்தியேகமான சில தெய்வங்களும் சில வழிபாட்டுமுறைகளும் அத்தொடக்க காலத்திலேயே காணப்பட்டபோதும் வட இந்தியச் சமயங்கள் சில, தமிழ் நாட்டிலே கால்கொண்டுவிட்டமைக்கும் சான்றுகள் கிடைத்துள்ளன, தமிழ்நாட்டுக்கு முதலிலே வந்த வட இந்தியச் சமயங்கள் பௌத்தமும் சமணமுமாக இருக்கலாமென்பது அறிஞர் சிலர் கருத்து. வேதவேள்வியை அடிப்படை வழிபாடாகக் கொண்ட பிராமணர்களின் இந்துமதத்துக்கு எதிரான கிளர்ச்சி இயக்கங்களாகத் தோன்றியவை பௌத்தம், சமணம், ஆசீவகம் என்பனவாம். இம்மூன்று சமயங்களிலே, உலகமதமாக வளர்ந்தது பௌத்தம் மட்டுமே. கி.மு மூன்றாம் நூற்றாண்டிலே, அசோகச் சக்கரவர்த்தி பௌத்தசமயப் பிரசாரத்துக்காக' பௌத்த குருமாரைப் பல நாடுகளுக்கும் அனுப்பியதோடு பௌத்தம் உலகமதம் என்ற நிலைக்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது. ஏறத்தாழ அதே காலத்திலே, சமணசமயப் பிரசாரகர்களும் பத்திரபாகு தலைமையிலே கருநாடகத்துக்கு வந்துவிட்டதாகவும், அங்கிருந்து தமிழ்நாட்டுக்கும் புறப்பட்டதாகவும் தெரியவருகிறது. சங்ககாலத் தமிழ்மன்னர்களின் அரசவைகளிலும் நகரங்களிலும் பிராமணர் ஓரளவு செல்வாக்கோடு விளங்கியமைக்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன.

பெரிய போராட்டம் எதுவுமின்றி சில நூற்றாண்டுகள் காலம் நான்கு சமயங்களும் தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வந்திருக்கின்றன. பிராமணர் சமுதாயத்தில் உயர் மட்டத்தினரோடு தொடர்பு கொண்டு வேள்விகளை இயற்றி வந்தனர். தம்முடைய தெய்வங்கள் சிலவற்றையும் வழிபாட்டு முறைகள் சிலவற்றையும் தமிழ்நாட்டாருக்குப் பிரத்தியேகமான தெய்வங்களுடனும் வழிபாட்டு முறைகளோடும். இணைத்து, ''இணைப்பு', மூலம் புதிய இந்து மதத்தை வளர்த்து வந்தனர். அகிம்சையை முதல் அறமாகக் கொண்ட சைனர்கள் துறவிகள் என்று பொருள்படும் சமணர்கள் என்ற பெயராலேயே தமிழ்நாட்டிலே வழங்கப்பட்டனர். பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக் கூடாதென்ற நிலையிலே, தன்னை ஒறுத்துக் கொள்ளலாமென்பது சமணர் சித்தாந்தம். ஒருவர் அறியாத நிலையிலே கூட கண்ணுக்குத் தெரியாத உயிரினங்களுக்குத் தானும் துன்பம் இழைக்கக் கூடாதென்ற கருத்தினரான சமணர் தம் வாழ்க்கையிலே தீவிரமான கட்டுப் பாடுகளைக் கடைப் பிடித்தனர். புலாலுண்ணாமை சமண சமயத்தவர் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தொழுக வேண்டிய கட்டுப்பாடாக இருந்தது. சங்ககால இலக்கியங்களிலே புலாலுண்ணாமை போற்றப்பட்டதற்குச் சான்றில்லை சங்கமருவிய கால அறநூல்களிலே, சமண மதச் செல்வாக்கினாலே, புலாலுண்ணாமை திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது. கட்டுப்பாடான ஒழுக்கங்களாலே உயர்வடையலாமென்ற கருத்துடைய சமணம் தமிழர் சிந்தனை வரலாற்றிலே ''அறநெறிக் காலம்'' ஒன்று தோன்றுவதற்கு மிகவும் முக்கியமான உந்துசக்தியென்பதை மறுப்பதற்கில்லை.

சமணத் துறவிகளிலே சிலர் பெரியபடிப்பாளிகளாக இருந்துள்ளனர். இடைக்காலத் தமிழின் பல துறை வளர்ச்சிக்குச் சமணர் ஆற்றியஅளவு பங்களிப்பினை வேறு எச் சமயத்தவரும் ஆற்றவில்லையென்று துணிந்து கூறலாம். இலக்கணம் நிகண்டு என்னும் துறைகளிலே அவர்களின் பங்களிப்பு மொழியாராய்ச்சிப்புலத்திலே அவர்களுக்கிருந்த ஈடுபாட்டினைக் காட்டும். வடமொழி மரபைத்தழுவிக் காவியம் இயற்றியும் விருத்தப் பாவைக் காவிய நூலாக்கத்துக்குக் கையாண்டும் வழிகாட்டியவர்கள் சமணர்களே. ''சமணத் தமிழிலக்கிய வரலாறு'' என்னும் நூலிலே பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் சமண சமயத்தவர்களுடைய பல துறைப்பட்ட இலக்கியப் பணிகளை எடுத்து விளக்கியுள்ளார்.

ஆசீவக மதத்தைத் தோற்றுவித்த மற்கலி கோசர் சமணமதத் தாபகராகிய மகாவீரரோடு சமகாலத்தவரெனவும் சிலகாலம் மகாவீரரோடு உடனுறைந்தவரெனவும் கூறப்படுகிறது. விதி அல்லது ஊழின் வலி

மையை மீறவே முடியாதென்பது ஆசீவகத்தின்அடிப்படைச் சித்தாந்தம். சிவஞான சித்தியார் ஆசீவகமதத்தின் கொள்கையை எடுத்துக்கூறி மறுத்துள்ளது. இடைக்காலத் தமிழ்ச் சாசனங்களிலே காணப்படும் தொடர்களான 'ஆசீவகக் காசு' 'ஆசீவகக் காணிக்கை' என்பன அச்சமயத்தார் மீது விதிக்கப்பட்டிருந்த ஒருவகை வரியைச் சுட்டுவதாக விளக்கப்படுகிறது. ''விதியை வெல்லமுடியாது'' என்ற முதுமொழி ஆசீவகர் செல்வாக்கினாலேயே வந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது. சிலப்பதிகாரம் நிலைநாட்டவந்த மூன்று உண்மைகளுள் ஒன்றாக, ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்பதைச் சிலப்பதிகாரப் பதிகம் கூறிச் செல்கிறது, சிலப்பதிகாரக் கதையே ஆசீவக தத்துவத்துக்கேற்பப் புனையப்பட்டுள்ளதென கேரளப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர் க. சுப்பிரமணியம் 'பெருங்கதையின் சமயப்பின்னணி என்ற நூலிலே வாதிப்பது சிந்தனையைக் கிளறுகிறது.

உலகியல் வாழ்க்கைக்கும் தீவிர துறவுக்கும் இடைப்பட்ட '' நடு வழி '' யே பௌத்தத்தின் போதனையெனப்படுகிறது. உலகவாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாகக் காணும் பௌத்தம், துன்ப நிவிர்த்திக்கு வழிசொல்கிறது. தருமவழியிலே நிற்பதால் தீவினையொழியுமென்றும் தீவினையொழிந்தால், பிறவியற்றுப் போகுமென்றும், பிறவியற்றுப்போனால் விடுதலையென்று பொருள்படும் நிர்வாணநிலை கிடைக்குமென்றும் பௌத்தம் போதிக்கிறது. பிற உயிர்களின் துன்பத்தைக் குறைக்கும்சமூகசேவைகளிலே பௌத்த குருமாரும் குரத்திகளும் பெரும் ஈடுபாடு காட்டியதை மணிமேகலையிலிருந்து அறியலாம். சமணர், ஆசீவகர் என்போரின் வழிபாட்டிடங்களைப்போல பௌத்தர்களின் வழிபாட்டிடங்களும்'பள்ளி'என்றுபெயர்பெற்றன. மக்களைச்சீர்திருத்தவும் மதமாற்றம் செய்யவும் கல்வி அவசியமென்றுணர்ந்து, தங்கள் வழிபாட்டிடங்களை இந்த மூன்று சமயப்பிரிவினரும் பள்ளிக்கூடங்களாக்கினர். சமய தத்துவத்தையும் தருக்கத்தையும் சிறப்பாகப் பேணிவந்த பௌத்தர் ''பட்டிமன்றங்கள்'' அமைத்துப் பிற சமயத்தினரை வாதுக்கழைத்து, வெற்றிகொண்டு, தம்மதத்தைப் பரப்புவதிலே அக்கறைகாட்டினர். பௌத்த காவியங்களான மணிமேகலையும் குண்டலகேசியும் இப்போக்கினுக்குச் சான்றுகள். வீரசோழியம் பௌத்தர் இயற்றிய இலக்கணநூலாகும். தமிழ்நாட்டிலே பௌத்தம் சமணமளவு செல்வாக்குப் பெறாதபோதும் ஆசீவகத்திலும் கூடிய செல்வாக்குப் பெற்றிருந்தது. இலங்கையிலே தமிழர்களுள் ஒருசாரார் நீண்டகாலமாகப் பௌத்தத்தைப் பின்பற்றி வந்ததற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டிலே நிலவிய இந்தச் சமயங்கள் யாவும் ஒன்று திரண்ட நிலையிலேயே இன்றைய இந்துமதம் காணப்படுகிறதென ஒரு பார்வையிலே புலப்படுகிறது. இந்துமதம் என்பதை ஒருவரையறைக்குள் அடக்குவது மிகச்சிரமமானது. பிராமணீயம் என்றபேர் இந்துமதத்துக்கு ஒருகாலத்திலே வழங்கியதுண்டு. பௌராணிகம், வைதீகம் என்ற பேர்களும் வழங்கியதுண்டு. இன்று இந்துமதம் என்பது இவையாவற்றையும் கடந்தது.வேதத்தையும் பிராமணர்களையும் வருணச்சிரம தருமத்தையும் ஏற்றுக் கொள்ளாத வீரசைவர்களும் இந்துக்களாகவே கணிக்கப்படுகின்றனர். இந்திய மண்ணிலே தோன்றிய மதமே இந்துமதமெனக் கொண்டால், பௌத்தம், இந்துமதத்திலே ஒருகூறாகக் கணிக்கப்படுவதில்லையென்பதை அவதானிக்கவேண்டும். சீக்கிய மதம் இந்துமதத்திலே, ஒரு கூறாகக்கணிக்கப்படுவதைத் தாங்கிக் கொள்ள முடியாமையினாலேயே, ஆயுதம் ஏந்திப்போராடுவதாகச் சீக்கியத் தீவிரவாதிகள் கூறுகின்றனர்.

இடைக்காலத்துத் தமிழ் நாட்டிலே,, வைதீகநெறி சைவம், வைணவம் என்று இரு பிரிவுகளாக இயங்கியது. இவையொவ்வொன்றும் தனித்தனியே அவைதிக நெறிகளை எதிர்த்துப் போராடின. பௌத்தமும் ஆசீவகமும் தமிழ்நாட்டு மண்ணிலிருந்து முற்றாக மறைந்தன. சமணம் தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லமுடியாத அளவுக்கு ஏதோ வாழ்ந்துகொண்டிருக்கிறது. அவைதிக மதங்களைப் பின்பற்றியோர் மதம்மாறியபோது, தம்முடைய சமயக் கருத்துகள் அனைத்தையும் துறந்துவிடவில்லை. அவைதிக சமயத்தார் இயற்றிய

நூல்கள் யாவும் மறையவுமில்லை. அதனாலே தான் இன்றைய இந்து மதம் இந்திய அவைதிக சமயக் கருத்துக்களையும் தமிழருக்கே சிறப்பாக உரிய தெய்வங்கள், வழிபாட்டுமுறைகளையும் ஒருங்கு இணைத்து உருவானதாகக் காணப்படுகிறது. இத்தகைய வளர்ச்சியினாலே, ''இந்தவிடயத்திலே இந்து மதத்தின் நிலையென்ன'' என்று ஒருவர் கேட்டால், எல்லா இந்துக்களும் உடன் படக்கூடிய விடையாக எதுவும் கூறுவது சுலபமல்ல.

உலகமதங்களிலே இரண்டு இந்தியாவிலே தோன்ற, ஏனைய இரண்டும் மத்தியகிழக்கிலே தோன்றின. கிறீத்தவம், இஸ்லாம் என்ற இரண்டினுள் இஸ்லாமே தமிழ்நாட்டிற்கு முதலிலே வந்து சேர்ந்ததாகக் கொள்ளலாம். அராபிய வணிகர்கள் தமிழ் நாட்டோடு நீண்டகாலமாக வணிகம் செய்து வந்துள்ளனர். கி.பி. ஆறும் நூற்றுண்டிலே, இஸ்லாம் மதம் தோன்றியதும் அராபியர் வெகுவேகமாக முன்னேறினர். பேரரசு அமைத்துக்கொண்ட அராபியர் வணிகத்தை அதிகரித்துக்கொண்டனர். அராபிய வணிகர் தூர இடங்களுக்கு அராபியப் பெண்களைக் கூட்டிச் செல்லவில்லை. அவர்களுட்சிலர் அவ்வந்நாட்டுப் பெண்களை மணம் முடித்துக் குடும்பம் நடத்தினர். இத்தகைய குடும்பங்களே தொடக்ககாலத் தமிழ்நாட்டு இஸ்லாமியராக இருந்திருக்க வேண்டும். கி.பி. பதினான்காம் நூற்றுண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றுண்டுவரை, தமிழ்நாட்டிலே இடையிடையே இஸ்லாமியர் படையெடுப்புகளும் ஆட்சியும் ஏற்பட்டன. இந்துக்கள் பலமுறை பலவித இன்னல்களுக்காளாகினர். அச்சந்தர்ப்பங்களிலும் சிலர் இஸ்லாமைத் தழுவிக்கொண்டனர்.

இஸ்லாமின் அடிப்படைக்கொள்கை உலக சகோதரத்துவமாகும். மானிடர் யாவரும் ஒருகுலமென்பதை இஸ்லாமளவு வற்புறுத்தும் மதம் வேறு எதுவுமில்லை. இஸ்லாமை ஏற்றுக்கொண்டோர் யாவரும் ஓரினம் என்ற அடிப்படையிலேயே, இஸ்லாமியர் அல்லது முஸ்லிம்கள் என்பது ஓரினப் பெயராக விளங்குகிறது. இந்து சமூகத்திலே ஒடுக்கப்பட்டோராக இருந்தோர்களிலும் ஒரு பகுதியினர் இஸ்லாமைத் தழுவியிருக்கின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்து இஸ்லாமியர் இன்றும் ''இஸ்லாமானவர்கள்'' என்று குறிப்பிடப்படுகிறார்களென்று' அறியப்படுகிறது. கடந்த ஐந்நூறுண்டுகள் காலமாக, இஸ்லாமிய தமிழ் இலக்கியம் வளர்ந்துகொண்டு வருகிறது. இலங்கையிலே தமிழ்பேசுவோர்களிலே, காற்பங்குக்கும் அதிகமானோர் இஸ்லாமியராக உள்ளனர். தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தமிழ் உணர்ச்சி உள்ளோராகக் காணப்படுகின்றனர். இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பல நடந்துள்ளன. அம்மாநாடுகள், ''இஸ்லாம் எங்கள்வழி, தமிழ் எங்கள்மொழி'' என்ற பேரொலியை எழுப்பியுள்ளன.

ஐரோப்பியர் வருகையோடேயே, கிறீத்தவம் தமிழ் நாட்டிலே காலூன்றியதென்பது வரலாற்றாசிரியர்களின் பொதுவான கருத்து. கிறீத்தவம் அதன் தொடக்க காலத்திலேயே தென்னிந்தியாவுக்குத் ''தோமாஸ்'' என்றஞானியால் கொண்டுவரப்பட்டு விட்டதென்று சிலர் வாதிப்பர். கேரளத்திலே சீரியக்கிறீத்தவர் என்போர் மிக நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். ஐரோப்பியருடைய கிறீத்தவத்திலும் கத்தோலிக்கம் புரொட்டஸ்தாந்து மதம் என்று இரண்டு பெரும் பிரிவுகளுள் போர்த்துக்கேயர் தமிழ்நாட்டிலும்'இலங்கையிலும் கத்தோலிக்கத்தை அறிமுகஞ்செய்து வைத்தனர். போர்த்துக்கேயர் இலங்கைத் தமிழரின் பாரம்பரிய தமிழகத்தை ஆட்சி புரிந்தபோது இந்துக்கள் துன்புறுத்தல்களுக்குள்ளாகினர். தமிழ் நாட்டிலே போர்த்துக்கேயரின் ஆட்சி ஏற்படாத போதிலும் செல்வாக்கு இருந்தது. தமிழர்களிடையேகத்தோலிக்க மதபோதகர் பிரசாரம் மேற்கொண்டிருந்தனர். தமிழர்களுள் ஒருசாரார் கத்தோலிக் கத்தைத் தழுவினர். பரவர்கள் முஸ்லிம்களின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியபோது கத்தோலிக்கத்துக்கான மதமாற்றத்தை நிபந்தனையாகவைத்துப் போர்த்துக்கேயர் அபயகரம் நீட்டினர். தமிழ் நாட்டிலே கன்னியாகுமரி, திருநெல்வேலி

மாவட்டங்களின் கரையோரங்களில் வாழ்ந்தவர்களும் இலங்கையின் வடமேற்குக் கரையில் வாழ்ந்தவர்களுமான பரவர் சமூகம் கத்தோலிக்கத்தை ஏற்றுக்கொண்டது. இந்துசமூகத்திலே நலிவடைந்த பிரிவினராக இருந்தவர்களுள் ஒருசாராரும் கத்தோலிக்கத்தைத் தழுவினர். தமிழ் நாட்டின் சில பகுதிகளிலே ஆதிக்கம் செலுத்தி வந்த பிரெஞ்சுக்காரர் கத்தோலிக்கராக இருந்து வந்ததனுல், கத்தோலிக்கம் அப்பகுதிகளிலே ஓரளவு பரவியது. கிறீத்தவம் அன்பை அடிப்படையாகக் கொண்ட மதம். ஒவ்வொருவரும் தன்னைப் போலப் பிறரையும் நேசிக்கவேண்டும் என்பது கிறீத்தவத்தின் எதிர்பார்ப்பு. கத்தோலிக்கர் சமூகசேவைகளிலும் முன்னின்று உழைப்பது வழக்கம். கத்தோலிக்கம் பரவியதற்கு அதுவும் ஒரு காரணமாகும்.

கிறீத்தவம் என்பது சிறப்புப் பெயராக புரொட்டஸ்தாந்து மதப் பிரிவினரைக் குறிப்பதற்கும் வழங்குகிறது. இலங்கை ஆட்சியாளர்களிலே ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் புரொட்டஸ்தாந்து மதப்பிரிவினராவர். தமிழ் நாட்டிலும் ஆங்கிலேயர்ஆட்சி நிலவியது. ஆங்கிலேயர் சமயப்பொறுமையுடையோராக விளங்கியபோதும் கிறீத்தவருக்கு முன்னுரிமை வழங்கினர். அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலுமிருந்து பெருந்தொகையான மதபோதகர்கள் வந்து தமிழர்களிடையே கிறீத்தவப் பிரசாரஞ் செய்தனர். கல்வித் துறையிலே அவர்கள் விசேட கவனஞ்செலுத்தினர். அரச உத்தியோகம் பெறுவதற்கும் வாழ்க்கையிலே பொதுவாக முன்னேறுவதற்கும் ஆங்கிலக் கல்வி தேவைப்பட்டதனுல், அப்பாடசாலைகளைத் தாபித்து நடத்திய மத போதகர்கள் மதமாற்றத்துக்கு ஆங்கிலக் கல்வியை ஒருசாதனமாகப் பயன் படுத்தினர். இந்து மதத்தையும் கத்தோலிக்கத்தையும் கண்டித்து இவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டுக்கு அச்சியந்திரம் வந்து சேர்ந்து விட்டதனுல் மத கண்டனங்கள் துண்டுப் பிரசுரங்களாகவும் நூல் களாகவும் வெளிவந்தன. கத்தோலிக்கரும் இந்துமதத்தினரும் கண்டனங்களுக்குப் பதிலாகக் கண்டனங்கள் எழுதத் தொடங்கியதால், கண்டன இலக்கியம் தமிழிலே சிறப்பாக வளர்ந்தது. வைதிக மார்க்கத்தையும் பிராமணரையும் கண்டிக்கத்தொடங்கிய கத்தோலிக்கரும் கிறீத்தவரும் திராவிடருடைய தனித்துவத்தையும் தொன்மையையும் பண்பாட்டுச் சிறப்பையும் வலியுறுத்தும் அறிஞர்கள் சிலரைத் தந்துள்ளனர். ஆங்கிலக் கல்வியின் ஒரு கூறுக அறிவியற் கல்வியையும் வழங்கிய கிறீத்தவம் தமிழ் நாட்டிலே பகுத்தறிவு வாதம் வளர்வதற்கும் உதவியுள்ளது. திராவிட இனவாதம், பகுத்தறிவு வாதம் என்பன சனுதன தர்மமான இந்துமதத்தைத் தாக்கிவருவதால் தமிழ் நாட்டிலே கிறீத்தவ மதமாற்றம் இன்றும் ஓரளவு நிகழ்கிறது. சனத்தொகை எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும். தமிழ் நாட்டிலே கிறீத்தவம் இஸ்லாத்தை முந்தி நிற்கிறது.

இந்து மதத்தோடும் பௌத்தத்தோடும் ஒப்பிடும் போது, கிறீத்தவமும் இஸ்லாமும் ஒரு அடிப்படைவேறுபாடுடையன. இந்திய மதங்கள் அகிம்சையைப் பற்றிப் பேசும் போது, எல்லாவகை உயிர்களையும் சேர்த்தே நோக்குகின்றன. மானிடரையும் பிற உயிர்வர்க்கங்களையும் வேறு படுத்திப் பார்ப்பதில்லை. கிறீத்தவமும் இஸ்லாமும் மானிடத்துக்குத் தனிச்சிறப்பு வழங்குகின்றன. பிற உயிர் வர்க்கங்களும் உயிர்இல்லாதவைகளும் மானிடர்களுக்காகவே படைக்கப்பட்டுள்ளன வென்பது அச்சமயங்களின் நம்பிக்கை. இன்றைய உலகிலே உலகமதங்கள் நான்குக்கு மிடையிலான போட்டி அர்த்தமற்றதாகப் பலருக்குத் தோன்றுகிறது. பெரும்பாலோருக்குச் சமய ஈடுபாடு குறைந்து வருகிறது. மார்க்சீய சித்தாந்தம் பொருளியல் முதல்வாதத்தை வலியுறுத்திச் சமய நம்பிக்கையை வேரறுத்து வருகிறது. வலுவுள்ள, ஆழமான, வேகமாகப் பரவுகிற சித்தாந்தம் என்ற முறையிலே பார்க்கும் போது, இது ஒரு புதிய மதமாகக் கணிக் கப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

O—O

# இந்துசமயம் - சில பொதுக்கருத்துக்கள்

**திரு. வி. சிவசாமி, M. A.**
*தலைவர், சம்ஸ்கிருதத் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

உலகில் இன்று நிலவும் பல்வேறு சமயங்களிலே காலத்தால் முந்திய தொன்மையும், சிறப்பும் கொண்டிலங்குவது இந்து சமயமாகும். இதன் தோற்றம் வரலாற்றுக்கு முற்பட்டதாகும். அதன் சிறப்பியல்புகள் பலவற்றவை வரலாற்றுரீதியிலும் கூறமுடியும். ''முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியானுய் இலங்கும் இறைவன் போலவே இதுவும் திகழ்கின்றது.

இதன் பழையபெயர் சநாதனதர்மம். 'சநாதன' எனில் மிகப்பழைய, என்றுமுள்ள எனப் பொருள்படும். வேதங்களிலே வரும் பிரதான சொற்களின் வரலாற்றினை ஆய்ந்து கூறும் நிருக்த ஆசிரியரான, யாஷ்கர் என்பவர் ''சநாதன்'' எனில், என்றும் புதுமை வாய்ந்தது'' என்பர். எனவே இந்து சமயம் என்றும் புதுமையுடனும் புதுப்பொலிவுடனும் விளங்கும் மதம் என்பதில் ஐயமில்லை. ''தர்மம்'' என்ற சொல்லுக்குப் பலகருத்துக்கள் இருப்பினும், அதன் வேர்ச்சொற் கருத்து முக்கியமானது. இச் சொல் ''த்ரு'' (Thr) எனும் வினையடியாக வந்தது. 'இது நிலைபெறுதல்', 'தாங்குதல்' எனப்பல பொருள்படும். எல்லாவற்றையும் தாங்கி நெறிப்படுத்துவது என இதற்குப் பொருள் கொள்ளலாம். அதாவது, உலகனைத்தினையும் தொன்றுதொட்டுத் தாங்கி நின்று நெறிப்படுத்திவரும் மிகப்பழைய மார்க்கம் இது எனலாம்.

இந்து சமயம் என்ற பெயர் இதற்கு மேனுட்டார் இட்ட 'Hinduism' எனும் பதத்திலிருந்து வந்ததாகும். இந்து எனும் பெயர் சிந்து எனும் நதியின் பெயரிலிருந்து ஏற்பட்டதாகும். சிந்து எனும் பதம் பாரசீகம், கிரேக்கம் முதலிய மொழிகளிலே மாற்றமடைந்து ஆங்கிலத்திலே ஹிந்து (Hindu) எனவும், இதுள்ள நாட்டினை இந்தியா எனவும் வழங்கப்படலாயின. குறிப்பாக, வேதங்களை அடிப்படையாகக் கொண்ட இந்துசமயப் பிரிவுகள் யாவும் ''ஹிந்துயிஷம்'' என அழைக்கப்படலாயின. ஆனல், பரந்த கருத்திலே, இந்தியாவிலே நிலவுகின்ற எல்லாச் சமயங்களையும் குறிக்கும். இந்தியாவின் பழைய பெயர் பாரத வர்ஷம். அதுபோல இந்து சமயத்தின் பழைய பெயர் ''சநாதனதர்மம்''.

மேலும், வேதங்களையொட்டிய வைதிக மரபினை ஏற்றுக் கொண்டயாவரும் ஆஸ்திகர் எனப்படுவர். கடவுளில் நம்பிக்கையில்லாவிடினும் வாழையடி வாழையாக நிலவிவரும் மரபினை ஏற்றுக்கொள்ளுவோர் யாவரும் ஆஸ்திகரே. மாருக, இம்மரபினை ஏற்றுக் கொள்ளாதோர் நாஸ்திகர் எனக் கருதப்படுவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது.

வரலாற்று ரீதியிலே நோக்கும் போது இந்துசமய ஊற்றுக்கள் இந்தியாவின் பழைய கற்கால, புதிய கற்கால நாகரிகங்களிலும், அவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட இரும்புக்காலத்திலும் உருவாகியவை. குறிப்பாகச் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துசமவெளி நாகரிகமும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வேதகால நாகரிகமும் குறிப்பிடத்தக்கன. பிற்கால இந்துசமயத்திலே நிலவிவந்துள்ள அடிப்படை அமிசங்கள் இவற்றிலே ஏற்கனவே ஏதோ வடிவில் வந்துவிட்டன. எவ்வாருயினும், இவ்விரு பெரும்நாகரிகங்களின் அடிப்படையிலும், பிற்கால இந்து சமயம் வளர்ச்சியடைந்தது.

பழமைமிக்க இந்து மதம் ஒருபெரிய ஆலமரம் அல்லது ஆறுபோன்றது. தன் னகத்தே பல கிளைகளையும் பலரக அளவிலே கொண்டுள்ளது. யாவருக்கும் நன்மை யளிப்பது. என்றும் வளர்ந்து கொண்டிருப் பது. மனித சுதந்திரத்திற்கு முதன்மையளிப் பது. எவரையும் கட்டாயப்படுத்துவதில்லை. எனவே காலம் தோறும் இதன்பால் பல பிரிவுகள்ஏற்பட்டு இதனை வளம்படுத்தி வந் துள்ளன. எனினும் அடிப்படையிலே பிரிவு களனைத்திற்குமிடையில் ஒற்றுமை யுண்டு. காலத்தால் முந்திய இருக்கு வேதம் இக்கருத் தினை "ஏகம் சத் விப்ரா பஹீதா வதந்தி" அதாவது உண்மைப் பொருள் ஒன்றே ஞானிகள் இதனைப் பலவாறு கூறுவர் எனப்பகரும். இதற்குப் பிந்தியகால சாந் தோக்கிய உபநிடதமும் உண்மைப் பொருள் (பரம்பொருள்) இரண்டன்று ஒன்றே ஒன்று,, எனவலியுறுத்தும். இது போன்ற கருத்துத் தொடர்ந்து பிற்காலத்து நூல்கள் பல வற்றிலும் வந்துள்ளது. இன்றும் நடை முறையில் மக்கள் பல தெய்வங்களை வழிப் பாட்டாலும், அவர்களனைவருக்கும் ஒரே தெய்வம் என்ற கருத்தே முன்வைக்கப்படு கின்றது. இதற்கேற்ப ஒருபுறத்திலே உயர்ந்த சமய, தத்துவக்கருத்துக்கள், வேதங்கள், ஆகமங்கள், தந்திரங்கள் முதலியவற்றின் அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகின்றன. அதே வேளையில் சாதாரண வழிபாட்டு முறைகளும் மரபு வழியாக மக்கள்மத்தி யில் நிலவுவதைக் காணலாம். இந்து சம யத்தின் உண்மை நிலையினை நன்கு புரிந்து கொள்ளாத மேனாட்டறிஞரும், அவர்களைப் பின்பற்றும் கீழ்நாட்டறிஞரும் கூறுவது போல, இந்துசமயத்திலே பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, என்றவகை யில் வழிபாடோ, தெய்வங்களோ இருப் பதாகக் கொள்ளுவதற்குத்தக்க சான்றுகள் இல்லை. வேதாகம முறைப்படி சிவபிரான், சக்தி, பிள்ளையார், முருகன், திருமால் முதலிய தெய்வங்களை வழிபடுவோருக்கும் கிராமங்களிலே, சூலம், வேல் போன்ற புனித குறியீடுகளையோ, சிலைகளையோ வைத்து முற்குறிப்பிட்ட தெய்வங்களையன்றி பைரவர், வீரபத்திரர், அநுமார், ஐயனர் போன்ற தெய்வங்களை வழிபடுவோருக்கு மிடையிலே கடவுள் - வழிபடுவோன் என்ற நிலையிலே வேறுபாடில்லை. முற்குறிப்பிட்ட வர்களுக்குக் குறிப்பிட்ட தெய்வங்கள் எவ் வாறு முழுமுதற் கடவுளோ, அவ்வாறே பிற் குறிப்பிட்டவர்களுக்கும், குறிப்பிட்ட தெய்வங்கள் பெருந்தெய்வங்களே. மேலும் குறிப்பிட்ட தெய்வங்களைத் தத்தம் இஷ்ட தெய்வங்களாகக் கொள்ளுவோர் மற்றைய தெய்வங்களையும் பொதுவாக வழிபடும் மரபு உண்டு. எனவே பெரியதெய்வம், சிறிய தெய்வம் என்ற பாகுபாடு நடைமுறை யிலுள்ள வழிபாட்டில் இல்லை என்பது உறுதி. வேதகாலம் தொட்டு நிலவி வரும் பிரதான ஓர் அமிசம் யாதெனில், குறிப்பிட்ட நேரத்திலே குறிப்பிட்ட தெய்வம் பிரபல்யமாகக் கொள்ளப்படு தலாகும். மேலும், இஷ்ட தெய்வவழிபாடு ஒரு சிறப்பியல்பாகும். ஒவ்வொருவரும் தத் தம் ஆத்மீக அநுபவத்திற்கும், விருப்பத் திற்குமேற்றவாறு வசதிப்படி, விரும்பும் தெய்வத்தினை வணங்கலாம். வழிபாட்டு முறையிலே கட்டாயப்படுத்தல் இல்லை. எனவே, எவரும் விரும்பியவாறு வழி படலாம்.

இறைவனைப் பெரிய கோவில்களில் வழிபடலாம்; சிறிய கோவில்களில் வழி படலாம்; சிறு கொட்டிலமைத்து வழி படலாம்; மரத்தடியிலே சூலம் போன்ற இலச்சினையொன்றை வைத்து வழிபடலாம்; வீட்டிலே வழிபடலாம்; மலர் தூவி வழி படலாம்; தூபதீபம் காட்டி வழிபடலாம்; வேள்வி மூலம் வழிபடலாம்; இறைவனின் திருநாமங்களையும், தோத்திரங்களையும் பாடிவழிபடலாம்; அங்கப் பிரதிட்டை, கரகம், காவடி முதலியவற்றின் மூலம் வழிபடலாம்; பல திருப்பணிகள் மூலம் வழிபடலாம்; மேலாக, உள்ளமே கோயி லாக உள்நிற்கும் இறைவனை உள்ளத்திலே தியானித்து ஏத்தலாம். இவ்வாறு இறை வனைப் பலவாறு, பல்வேறு நிலைகளிலே வழிபடலாம்; அவரவர் பாவனைகளுக்கும், மனநிலைகளுக்கும் ஏற்ப வழிபடலாம். இத் தகைய முறைகளிலே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை நெறி களும் வருவது கண்கூடு.

இந்துசமயக் கட்டுக்கோப்பினுள் அல்லது உள்வட்டத்திலே வழிபாட்டு முறைச் சுதந்திரம் நிலவுவது போலவே, மற்றைய சமயங்களைப் பொறுத்தவரையிலும் சமய சகிப்புத்தன்மை மேலான இடம் பெற்றுள்ளது. ''மனிதர்கள் என்னை எவ்வெவ் வழிகளில் நின்று வழிபட்டாலும், அவர்கள் என்னையே வணங்குகிறுர்கள்'' எனவும், மற்றைய தெய்வங்களை வழிபடுவோரும் என்னையே வழிபடுகிறுர்கள்'' எனவும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையிலும், ''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனுர் தாம்வருவார்'' எனச் சிவஞானசித்தியாரும் கூறியிருப்பவை மனங்கொளற்பாலன. இத்தகைய பரந்த அடிப்படையிலான சமய சமரசம், இந்தியாவில் எழுந்த ஏனையசமயங்களைப் பொறுத்தமட்டிலுமன்றி வெளிநாடுகளிலே தோன்றிய சமயங்களைப் பொறுத்த மட்டிலும் பின்பற்றப்பட்டன. மேலும், அவதாரக் கோட்பாடு இக்கருத்தினை நன்கு வெளிப்படுத்துகின்றது. ''ஒரே இறைவன் உலகின் நன்மைக்காகக் காலந் தோறும் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு பெயர்களில் அவதரிக்கிறுர்'' என்ற பரந்த கருத்தில் எச்சமயமும் அடங்கிவிடுகின்றதன்றே? எத்தகைய சமயப் பூசலுக்குமிங்கு இடமில்லை.

இவ்வாறு பல்வேறுபட்டசமயக் கருத்துக்களுக்கும் மதிப்பளித்துச் சர்வசமய சமரசம் பேசும் இந்து சமயம், இவற்றிலுள்ள நல்ல அமிசங்களைத் தன்னகத்தே கொள்ளவும் தவறவில்லை. ''நல்ல சிந்தனைகள் எமக்கு எத்திசையிலிருந்தும் வருவதாக'' என இருக்கு வேதம் கூறும் கருத்து இன்றுவரை இந்து சமயத்தில் இடம் பெற்றுவருவதைக் காணலாம். இந்து சமயத்தின் நீண்டகால வரலாற்றில் இக் கருத்துக்குப் பல எடுத்துக்காட்டுக்கள் உள. ஒருவன் தனது கருத்துக்களுக்குப் போலவே மற்றவர்களுடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டுமென்பது இந்து சமயத்தின் அடிப்படை அமிசமொன்ருகும்.

இந்துசமயத்துக்கெனத் தனியான ஸ்தாபகரோ, நிறுவனங்களோ பரந்த அடிப்படையிலே பொதுவாக இருக்கவில்லை. ஞானிகள், அறிஞர்கள் அநுபூதிமான்கள் முதலியோர் கூறியுள்ள கருத்துக்களின் தொகுப்பே இந்துசமயத்திற் பெரிய அளவிற்காணப்படுகிறது. இதிற்கூறப்படும் கடவுள் பற்றிய கருத்துக்களும், மறைஞானமும், ஆத்மாநுபவமும், பிறவும் மரபுவழியாக நீண்டகாலமாகப் போற்றிப்பேணி வளர்க்கப்பட்டு வந்துள்ளன. இம்மரபிற்கு அல்லது பாரம்பரியத்துக்குப் பங்கம் அல்லது இடையூறு ஏற்பட்டகாலங்களில் மஹாத்மாக்களும், ஆன்மீக வீரரும் தோன்றிக் காலத்தின் நெருக்கடிகளைத் தீர்த்துச் சநாதன மரபுதொடர்ந்து நிலவச் செய்துள்ளனர். இந்த வரிசையிலே வேதகால இருஷிகள், உபநிடத சிந்தனையாளர், வியாசர், வான்மீகி, சிறீகிருஷ்ணர், சைவநாயன்மார், வைஷ்ணவ ஆழ்வார்கள், சங்கரர், ராமானுஜர், இடைக்கால வடஇந்திய ஞானிகளான ஞானேஸ்வரர், துகாராம், சைதன்யர், துளசிதாசர் போன்ருேர், தற்காலத்திய ராஜாராம்மோகன்ராய், சுவாமி தயானந்த சரஸ்வதி, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், அரவிந்தர், ரமணமகர்ஷி, மகாத்மாகாந்தியடிகள் போன்ருேரும் வேறுபலரும் இடம்பெறுவர். உலகிலுள்ள பிறசமயங்களிலே மதகுருமார் செய்து வந்த திருப்பணிகளை இங்கு சமய ஞானிகளும், துறவிகளுமே கூடுதலாகச் செய்துவந்துள்ளனர். இவர்கள் மறைஞான ரீதியில் ஆத்மீக அநுபவம் பெற்றிருந்தனர். சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் மத்தியில் மட்டுமன்றிக் கீழ்மட்டத்தில் உள்ளவர் மத்தியிலும் இவர்கள் நடமாடி இந்துமதம் மக்கள்மதம் என்பதை எடுத்துக்காட்டி வந்துள்ளனர். இங்கு சமயக்கருத்துக்கள் எவர்மீதும் திணிக்கப்படவில்லை. ஞானிகளைப் பின்பற்றியே மக்கள் தத்தம் அநுபவநிலைக்கேற்பச் சமயாநுஷ்டானங்களைப் பொதுவாகக் கைக்கொண்டனர்.

இந்து சமூக நெறி பற்றிய விளக்கத்தினை வர்ணுஸ்ரம தர்மத்திலே பார்க்கலாம்.

இதன்படி மக்கள் முதலிலே தொழிலின் அடிப்படையிலும், நிற அடிப்படையிலும் பிராமணர், சத்திரியர், வைஷ்யர், சூத்திரர் என நான்கு பிரிவாக வகுக்கப்பட்டனர். ஆனல் பின் சத்துவம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்களின் அடிப்படையில் இவற்றிற்கு விளக்கம் பகவத்கீதை போன்ற நூல்களில் அளிக்கப்பட்டது. இது போலவே, தனிமனிதன் வாழ்வும், பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் எனநான்கு பிரிவுகளாக ஒன்றன் பின் ஒன்று பின்பற்றப்படுவனவாகப் படிமுறையில் வகுக்கப்பட்டது. ஆகவே, சமூகத்திலே வாழும் மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாளில் செய்யவேண்டிய கடமைகள் வரையறை செய்யப்பட்டன. இம்முறையிலே சில குறைகளிருப்பினும் ஒரு காலகட்டத்திலே மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இது உதவிற்று. இன்று காலத்திற்கு ஏற்றவாறு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

இந்து சமய வரலாற்றினை நோக்கும் போது மக்கள் பின்பற்ற வேண்டிய இலட்சியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்காக வலியுறுத்தப் பட்டன. முதலில் அறம், பொருள், இன்பம் என மூன்றும் திரிவர்க்கம், முப்பால் என வலியுறுத்தப் பட்டன. இக்கருத்தினை வேதங்கள், தர்ம சாஸ்திரங்களில் மட்டுமன்றித் திருக்குறளிலும் காணலாம். மனிதன் இவ்வுலக வாழ்விலே செய்ய வேண்டிய, தேட வேண்டிய இலட்சியங்களும், மறுவுலக நன்மைக்கான இலட்சியங்களு மிதில் அடங்கி யிருப்பதைக் காணலாம்.

மேலும் இந்து மதமும், தத்துவமும் ஒன்றிணைந்து ஒன்றிற்கு ஒன்று உறுதுணையாகவும், ஒன்றையொன்று பூரணப்படுத்தி வந்தமையினையும் குறிப் பிடலாம். மேலை நாட்டிலே சமயம் தத்துவம் வேறு வேருக வளர்ந்தன. ஆனல் இந்தியாவில் அப்படியன்று வேதங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அகச்சமயங்களான, காணபத்தியம், சைவம், சாக்தம், கௌமாரம், வைஷ்ணவம், சௌரம் ஆகிய ஆறும் சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சம், வேதாந்தம் ஆகிய ஆறு தர்சனங்களும் குறிப்பிடற்பாலன. இடைக்காலத்திலே தோன்றிய பெரிய தத்துவ மேதையும், சமய ஞானியுமாகிய சங்கராச்சாரியார் மேற்குறிப்பிட்ட ஆறு சமயப்பிரிவுகளுக்கும் புதுமெருகூட்டி 'ஷண்மதஸ்தாபகர்' எனச் சிறப்புப் பெற்ருர். வேதாந்தத்தை நிலைநாட்டினர். தமது கருத்துக்களை நிலைநாட்டுவதற்கு இந்தியா அடங்கலும் திக்கு விஜயம் செய்து எதிரிகளை வென்று இந்தியாவின் ஐந்து கோணங்களிலும் ஐந்து மடங்களை நிறுவினர். அவை இன்றும் தொடர்ந்து நிலவுகின்றன. எடுத்துக்காட்டாகக் காஞ்சியிலுள்ள காமகோடி பீடத்தினைக் குறிப்பிடலாம். இவருக்குப்பின் ராமாநுஜர் விசிட்டாத் துவைத தத்துவத்தினையும், மத்துவர் துவைதத்தினையும் நிலைநாட்டினர். மெய்கண்டார், அருள்நந்தி சிவாச்சாரியர் போன்ருேர் சைவ சித்தாந்தினை உருவாக்கி வளர்த்தனர்.

ஆகவே பொதுவாக நோக்கும் போது இந்துசமயம் அநாதியானது. கால தேசவர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்ட சநாததர்மமாகும். அதன் நீண்டகால வரலாற்றிலே பல்வேறு பேராபத்துக்களையும் துணிச்சலுடன் வெற்றிகரமாகத் தாண்டி இன்றும்சிறப்புடன் இயங்குகிறது. இதன் பலமும் பலவீனமும் நிறுவனரீதியி லிது இயங்காமையிலே தங்கியுள்ள தெனக்கருதப்படுகிறது.

— O —

# சைவம்

**புலவர். கா. வேல்முருகன், B. O. L.**
பகுதி முதல்வர், தமிழ்த்துறை,
மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.

**சிவம் — சைவம்**

'சைவம்' சிவ சம்பந்தமுடையது. இஃது இந்து சமயம் என்னும் பெரும் பரப்பின் ஒரு பகுதியாகவும், அறுவகை (சண்) மதங்களுள் முதலாவதாகவும் விளங்குகிறது. சிவமே சைவத்தின் முதற் பரம்பொருள் ஆவார்.

'சிவம் என்னும் சொல், செம்மை என்னும் பண்படியாகப் பிறந்தது. 'செம்மை' என்பதற்கு அன்பு, மங்கலம், சிறப்பு, உயர்வு என்ற பல பொருள்களுண்டு.

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்
பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''
(மெய்யுணர்தல் - 8)

என்பது வள்ளுவர் வாக்கு.

இத்திருக்குறள் சிவத்தோடு சைவத்திற்குள்ள தொடர்பைச்சுட்டுவதாக மட்டுமன்றி சிவனின் ஒப்பற்ற இயல்பையும் எடுத்துக் கூறுகிறது. ''செம்பொருள் காண்பது அறிவு என்பதற்கு, ''வீட்டிற்கு (ஆன்மாவின் இறுதி இலட்சியமாகிய முத்திப்பேறு) நிமித்த காரணமாய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய் உணர்வாவது'' எனப் பரிமேலழகர் பொருள் கண்டார். மேலும் தம் சிறப்புரையில், ''தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தியமாய், நோன்மையாய், தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூய் தாய்த், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற் பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி அதனைச் செம்பொருள்'' என்றார் எனக் குறிப்பிடுவது செம்மேனிப் பெம்மானின் எண்குணங்களை உள்ளடக்கிய விளக்கமே என்பது தெற்றெனப்புலப்படும். ''செம்மையே. ஆய சிவபதம் அளித்த செல்வமே'' என்பது மாணிக்கவாசகர் வாக்கு. செம்மையைச் சிவப்பு என்போம். 'முகம் கோபத்தால் சிவந்தது, என்று சிவப்பு நிறத்தைக் கோபத்திற்குக் கூறுவோம். தொல்காப்பியரும், 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' எனச் சூத்திரம் செய்தார். இதற்கொப்ப 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும்', வேதம் கூறும் உருத்திரனும் காணப்படுவர். உருத்திரம் - கோபம், செம்மையே சிவமாய், அச்சிவமே சைவமாய்த் திகழும் பெற்றியை ஈண்டுக் கூறியவற்றால் அறியலாம்.

**சைவத்தின் தொன்மை**

உலக மதங்களுள் தொன்மை மிக்க ஒன்றாகத் திகழ்வது சைவம். சக்தியைப் பரம்பொருளாகக் கொள்ளும் சாக்தமும், கணபதியை முதற் பொருளாகக் கொள்ளும் காணபத்தியமும், குன்றெறிந்த குமரனுக்குரிய கௌமாரமும் சூரியனுக்குரிய சௌரமும், இன்று பெருமளவில் சைவத்துடன் ஒன்றி இணைந்து விட்டன. வைணவம் சைவத்துடன் அடிப்படையில் வேறுபட்டும் ஒன்றுபட்டும் விளங்குகிறது.

மத ஆய்வாளர் சைவத்தின் ஆதி அறிவரிய வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மை நிலையை ஒப்புக்கொள்வர். அஃது ஆரியர் வருகைக்கு முற்பட்டது. மொகஞ்சதாரோ சிந்து வெளி அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற இலிங்கங்கள், நடராசர் சிலை, தாய்த்தெய்வ உருவம், யோகியின் முத்திரை முதலான பல பொருள்கள் சைவத்தின் மிகப்பழைய செல்வாக்கு நிலையை எடுத்துக் காட்டும். பாரதத்தின் பல பாகங்களிலும் சைவ நெறியாளர் மிகுதியும் காணப்படுவர். சிவனுக்குரிய பழம்பெரும் திருக்

கோயில்கள், மேற்கு இமாலயப் பகுதியிலிருந்து அமர்நாத், கேதாரிநாத், நேபாளத்தில் பசுபதிநாத் முதலாகத் தொடங்கி காசி, அவந்திகை, உஜ்ஜயினி, சோமநாத், ஸ்ரீசைலம் என வடக்கிலிருந்து வந்து தெற்கே காஞ்சி, சிதம்பரம், மதுரை, இராமேசுவரம், கன்னியாகுமரி முதலாகப் பல நூற்றுக் கணக்கில் ஆங்காங்கு காணப்படுகின்றன. இவை மட்டுமன்றி இலங்கை முதலாம் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றுள்ளும் எண்ணற்ற சிவாலயங்கள் இருக்கக் காண்கிறோம். காலத்துக்குக் காலம் கண்டெடுக்கப் பட்ட அகழ்வுச் சான்றுகளும், புராதன பேராலயங்களும், கால வெள்ளத்தால் அழியாத கலைப்பொக்கிஷங்களும், மக்களின் சமய மரபு நெறிகளும், சைவத்தின் பழைமையைப் பறைசாற்ற வல்லன. இதற்குத் துணையாக இலக்கியச் சான்றுகளும் ஏராளம் உண்டு.

வேதம், ஆகமம் என்னும் இரண்டு திருநூல்களையுமே சைவம் முதற் பிரமாண நூலாகக் கொண்டுள்ளது. இவை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய மக்கள் கைக்கொண்ட சமய வாழ்வைச் சீராக்கி உயர்நிலைப்படுத்திக் கூறும் சமய இலக்கியங்கள் என்பதைவிட ''புனித சமயத்திரு நூல்கள்'' என்று கொள்வதையே வைதீகச் சைவர் பெரிதும் விரும்புவர். இவை சைவத்திற்குப் போலவே ஏனைய இந்து சமயங்களுக்கும் உரியவை. இவை சிந்துவெளிப் பண்பாட்டுக்கு முற்பட்டவை எனவும், பிற்பட்டவை எனவும் கூறுவர். கி. மு. 1500 க்குப் பிற்பட்டவை அல்ல என்பது அறிஞர் கருத்து. ஆனால் வேதங்கள் மனிதரால் ஆக்கப்படாதவை என்ற பொருளில் அவை 'அபௌருஷேயம்' என்றும், சிவனால் அருளப்பட்டவை என்றும், கால ஆய்விற்கு அப்பாற்பட்டவை என்றும் தீவிர சைவர் கூறுவர்.

வேதங்களிற் காணப்படும் மந்திரங்களும் கிரியைகளும் ஏனைய வைதீக சமயங்களுக்கு அடிப்படையாக இருத்தல் போலவே சைவத்துக்கும் இருக்கின்றன. வேதம் கூறும் உருத்திரனே சிவன் எனப் பெயர் பெற்றான் என்பர். இருக்கு வேத காலத்து ஞானிகள் உருத்திரனை ''பிஷக்தமன்'' (வைத்திய நாதன்) எனப் போற்றினர். 'ருத்திரன்' என்ற சொல் 'பாவத்தையும் துன்பத்தையும் ஓட்டுபவன்' என்ற பொருளுடைய சொல்லில் இருந்து பிறந்ததெனச் 'சாயனர்' என்னும் வேத விமரிசகர் கூறுவர். யசுர்வேதத்தில் 'பசூனாம்பதி' என்ற தொடர் உயிர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கும் சிவனையே குறிக்கும். பவன், சர்வன், பசுபதி, சம்பு, சங்கரன், சிவன், சிவதரன் எனும் சொற்கள் யசுர் வேதத்தில் காணப்படும். ருத்திரனே ஒரே கடவுள் என்றும், அவனே ஐந்தொழில் முதலாம் அனைத்தையும் செய்து, தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் இருப்பிடமாகின்றான் என்றும் சுவேதாஸ்வர உபநிடதம் உரைக்கும். வேத காலத்தை அடுத்துவரும் புராண இதிகாசகாலம் சைவத்தின் தொன்மையை எடுத்துக்காட்டும் அடுத்தசான்றாகும். இராமாயணத்தில் வரும் சிவதனுசு, இராமனின் இலிங்கப்பிரதிஷ்டை, சிவபூசை பற்றிய செய்திகள் முக்கியமானவை. மகாபாரதத்தில் உபமன்யு முனிவரால் கிருஷ்ணன் சிவயோகம் பற்றி உபதேசிக்கப்படுகின்றான். அருச்சுனன் சிவனை நோக்கித் தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெறுகின்றான். இவை இதிகாச காலச் சிவவழிபாட்டை உணர்த்தும். இவற்றுடன் புராணங்களுள் பெரும்பாலன சிவ சம்பந்தமுடையனவாகும்.

வடமொழி நூல்களுக்கு இணையாகத் தமிழில் விளங்குவன தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களுமாம். தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சிவனின் சக்தியாக விளங்கும் கொற்றவையும், அவன் திருக்குமரனாகிய முருகனும், ஏனைய வேதக் கடவுளரான வருணன் இந்திரன் முதலியோரும் குறிப்பிடப்படுகின்றனர். சங்க நூல்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டுக்களில் ''நீல மணி மிடற்று ஒருவன்,'' பிறவா யாக்கைப் பெரியோன்', 'நுதல் விழிநாட்டத் திறைவன்' என்ற பல பெயர்களாற் சிவன் குறிப்பிடப்படுகிறான். திருக்குறள் முதலாம் நூல்களிலும், சங்கம் மருவிய காலத்தினவாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் மணிமேகலை

முதலாம் காவியங்களிலும் சிவனைச் சுட்டும் பெயர்களும், சில புராண நிகழ்ச்சிகளும் காணப்படுகின்றன. 'அஷ்ட மூர்த்தி' பற்றி காளிதாசனும், சீத்தலைச் சாத்தனாரும் கூறியுள்ளனர். கி.பி. 3ஆம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி ''சைவ சித்தாந்தம்'' என்ற பகுதியில் அறியப் படும்.

இதுவரை கூறியவற்றாலும், கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் தமது பாஷ்யத்தில் சிவன், ஸ்கந்தன், விசாகன் ஆதியோர் பூசிக்கப்பட்டனர் என்ற செய்தியைக் கூறுவதிலிருந்தும், சிந்து வெளி காலத்தி லிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டுவரை, 'சைவம்' வட நாட்டிலும், டெக்கானிலும், தென்னாட்டிலும் சிறப்புற்றிருந்த வகையினை வரலாற்று ரீதியாகப் பேரறிஞர் பண்டர்கர் போன்றோர் வெளிப்படுத்துவதிலிருந்தும் சைவத்தின் பழம் பெரும் தொன்மையை உணரலாம்.

இத்தகு பெருமை வாய்ந்த சைவம் ஈழத்திற் காணப்படுவது போல, வேறு பாடற்ற ஒன்று எனச் சிலர் எண்ணுவ துண்டு ஆனால் பாரத நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியாலும், தத்துவ ஞானிகளின் வேறுபட்ட சிந்தனைகளாலும், அரசியல் சமூக பொருளாதாரப் பின்னணிகளாலும் சைவத்தில் சில உட்பிரிவுகள் தோன்ற லாயின. அவை 'சைவ சித்தாந்தம்,' காஷ் மீர சைவம், வீர சைவம் என்பனவாம். அவை அடிப்படையில் சிறிது வேறு படினும் சிவ பரத்துவத்தை ஏற்றுக் கொள்வனவே.

**வீர சைவம்**

**வீர சைவம்** என்பது வீரர்களுடைய சைவம், அல்லது வீரத்தன்மை உடைய சைவம் என்று பொருள்படும். மிகப்பழங் காலத்திலே தோன்றிய இச்சமயம் கி.பி 12ஆம் நூற்றாண்டுக்குரியவர் எனக் கருதப் படும் **பசவர்** என்பவரால் கன்னடப்பகுதி யிற் பரப்பப்பட்டு அங்கிருந்து ஆந்திரம் தமிழ்நாடு முதலிய இடங்களுக்குப் பரவி யது என்பர். வீர சைவ வணக்கத்தில் இலிங்கமே முதலிடம் பெறும். இவர்கள் தமது மேனியில் இலிங்கத்தை அணிந்திருப் பர். இதன் காரணமாக இதற்கு **இலிங் காயதம்** என்ற மற்றொரு பெயருமுண்டு.

வீர சைவத் துறையில் நான்கு **துணை கள்** கொடுக்கப் பெறுகின்றன. அவை ஞானம், செயல், பக்தி, பாவனை என்பன. இந்நான்கும் ஒன்றோடு ஒன்று இணைந்தும், ஈடு செய்தும், நிறைவு செய்தும் துணை புரிகின்றன. வீரசைவம் வேதங்களைவிட ஆகமத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின் றது. மற்றும் புராணங்களை இஃது ஏற்றுக் கொள்வதுடன், கன்னடத்து ஞானிகளின் உபதேசங்களையும், தமிழ்ச் சிவனடியார் களின் கோட்பாடுகளையும் ஒப்புக்கொள் ளும். திருமந்திரத்தில் வீர சைவம் பற்றிய விளக்கங்கள் காணப்படும். பிரபு லிங்க லீலை தமிழில் வீர சைவம் பற்றிய தலைசிறந்த நூல் என்பர்.

இதன் தத்துவம் **சக்தி விசிஷ்டாத்து வைதம்** என அழைக்கப்படும். இது சக்தி யினதும், சிவனதும் ஒன்றுபட்ட தன்மை யைக் குறிக்கும். இறைவனும், ஆன்மாவும் பிரிக்கமுடியாத ஒருமைப்பாடு உடையன என்பது இதன் கொள்கை. பரமசிவனே உலகத் தோற்றத்திற்குக் காரணன். படைத்தற்றொழிலால் அவன் எம்மாற்ற மும் பெறுவதில்லை. இதற்குக் காரணம் அவனுடன் பின்னமின்றிக் கலந்த சக்தியின் தொழிற்பாடே. இதனாலேயே படைப்பு நிகழ்கின்றது. அதுபோல ஆன்மாவும் சிவனின் ஒருபகுதி. அது சிவனிலிருந்து வெளிப்பட்டு மீண்டும் அவனிடமே ஐக்கியம் அடைகின்றது என இது கொள் ளும். இதன் கண் சைவ சித்தாந்தம் போல நிறைந்த தத்துவ இயல்புகள் உண்டு என்பதைப் பேராசிரியர் திரு. **வை. இரத்தின சபாபதி** அவர்கள் தம் **வீர சைவம்** என்ற ஆய்வு நூலில் விளக்கியுள் ளார்.

வீரசைவத்திற் ''குரு, சங்கம, லிங்க'' வழிபாடு சிறப்பிடம் பெறும். குரு, ஆன் மீக விடுதலைக்கு வழிவகுப்பவன். சங்கமம் அவன் அருள் பெற்ற அடியார் கூட்டம், இலிங்கம் - சிவம்' ஆன்மாவின் இலட்சியம்,

சிவத்துடன் இரண்டறக் கலந்து அத்துவித நிலையில் வீடு பேறு அடைதல் என்பதே இதன் தலையாய கோட்பாடு. இச் சமயத்தார் **அஷ்டவர்ணம்** எனப்படும் எட்டு விதிகளைக் கைக்கொள்ளுவர். இவற்றுள் குரு லிங்க சங்கமத்தை ஏற்றல், திருநீறு உருத்திராட்சம் அணிதல், சிவனடியார் பூசை பஞ்சாட்சர மந்திர செபம் என்பன அடங்கும். இவற்றின் மூலம் ஆன்ம ஈடேற்றம் உண்டு என்பது இவர்களது நம்பிக்கை.

## காச்மீர சைவம்

இந்தியாவின் வடபால் விளங்கும் காச்மீரத்தைத் தாயகமாகக் கொண்டதே காச்மீர சைவம். இது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த **வசுகுப்தர்** பேணி வளர்த்த மதமாகும். கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முன்பு காச்மீரத்தில் சைவமும் பௌத்தமும் பின்பற்றப்பட்டு வந்தன. எனினும் பண்டு தொட்டு பல தெய்வ வழிபாடு இருந்ததெனவும், அர்த்தநாரீஸ்வரரான சிவனே அவ்வழிபாடுகளில் முதன்மை பெற்றார் எனவும் அறியவருகின்றது. **குமாரிலபட்டர்** போன்றவர்களின் செயலால் எட்டாம் நூற்றாண்டிற் பௌத்தம் அங்கு நிலைகுலையத் தொடங்க **ஆதிசங்கரர்** காஷ்மீரப்பகுதிக்கு விஜயம் செய்து சைவத்துக்கு ஆங்கு ஒரு புதுத் திருப்பத்தைத் தந்தார் எனப் பேராசிரியர் **பெ. திருஞானசம்பந்தன்** கூறுவர்.

**த்ரிக சாஸ்திரம்** என்பதே இத்தத்துவக் கொள்கைக்குரிய பெயராகும். **த்ரிகம்** என்பது மூன்று எனப்பொருள்படும். அவை 'சிவன், சக்தி, அணு, (உயிர்) அல்லது பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் அல்லது பரை, அபரை, பராபரை என்ற சக்திகள் அல்லது அபேதம், பேதாபேதம், பேதம் என்ற நிலைகள் பற்றியவை எனப்பலவாறு விளக்கம் கூறப்படுகின்றது.

சைவ சித்தாந்தத்துக்குத் திருக்கையிலாயம் ஆரம்ப நிலையாவது போலவே இங்கும் அமைகிறது. சிவபிரான் கைலாசத்திலே **துர்வாசரை** அழைத்துச் சைவ சாத்திரங்களைப் பரப்புமாறு பணிக்க அம்முனிவர் மானசிகமாக மூன்று புத்திரர்களைத் தோற்றுவித்தார் எனவும், அவர்களுள் **திரியம்பகர்** அபேத சைவ சாத்திரத்தையும், **ஆமர்த்தகர்** பேத சைவ சாத்திரத்தையும், **ஸ்ரீநாதர்** பேதாபேத சைவ சாத்திரத்தையும் பரப்பும்படி பணிக்கப்பட்டனர் எனவும் ஒரு வரலாறு உண்டு. இவற்றுள் **திரியம்பகர்** பரப்பிய அபேத சைவமே **த்ரிகம்** எனப்படும் **அத்வைத சைவம்** என்று கூறப்படுகின்றது.

**ஆகம** சாஸ்திரம், **ஸ்பந்த** சாஸ்திரம், **பிரத்ய பிஜ்ஞா** சாஸ்திரம் என்னும் நூல்கள் இத் தரிசனத்தை விளக்குவனவாம். இவற்றையடுத்து **சிவசூத்திரம்** என்னும் முதனூலை சிவபிரான் **வசுகுப்தருக்கு** அருளினர் என்பர். வசுகுப்தர் எழுதியதெனவும், **கல்லடர்** எழுதியதென்வும் இரு வேறு கருத்துக்களுக்கு இடந்தரும் **ஸ்பந்த சூத்திரங்கள்** இத்தத்துவ நெறியை விளக்குவது குறிப்பிடத்தக்கது. இவையன்றி இத்தத்துவங்களை விளக்கும் தோத்திர நூல்களும் உள்ளன. அவற்றுள் **உத்பலர்** ஆக்கிய **சிவ ஸ்தோத்திராவளீ,** சிறப்புடையது. சைவத்தின் எல்லா அமிசங்களையும் கொண்ட முறையில் **அபிநவகுப்தர்** எழுதிய **தந்திரலோகம், பரமார்த்தசாரம், க்ஷேமராஜர்** தந்த **பிரத்ய பிஜ்ஞாஹிருதயம்** என்பன விளங்குகின்றன.

**காஷ்மீர சைவதத்துவம்** சிவன், சக்தி, உயிர், பிரபஞ்சம் என்பவற்றைக் கொண்டுள்ளது. சிவன் சக்தியிலிருந்து பிரிக்கப்படாதவன். அவன் ''காத்தும் படைத்தும், கரந்தும்'' விளையாடுகின்றான். அவன் சக்தியால் தோன்றிய உலகு அவனின்றும் வேறுபட்டதன்று. மாயையினால் இந்த அண்ட சராசரங்கள் அவனின்றும் வேறாகக் காட்சி தருகின்றன. அவனுடைய பிரிவே எல்லாத் தத்துவங்களும்.

''சிவனும் அவனது சக்திகளும், கதிரவனும் அவனது கதிர்களும் போல்வன'', ''எப்படி ஒரே வண்ணமற்ற படிகக்கல் அந்தந்த வண்ணத்தை உடையதாகத் தோன்றி

னாலும் அம்மாற்றம் அவ்வுபாதிகளையே சார்ந்தன......'', "சந்திரன், ஓடுகின்ற **புனித** 'கங்கையில் ஓடுவது போலவும், **தேங்கி** நிற்கின்ற அழுக்கு நிறைந்த **குட்டையில்** நிலைத்திருப்பது போலவும் **தோன்றினாலும்**, சந்திரனுக்கு இயல்பான **ஸ்வரூபத்தில்** எந்தவித மாறுபாடும் **இல்லை''** இவை போன்ற பல விளக்கங்கள் **சிவன்** பற்றிக் கூறும். இவை போலவே **சக்தி,** சீவாத்மா, பந்தம், மோட்சம் பற்றிய பல்லாய்வுக்குரிய தத்துவ சிந்தனைகளைக் காச்மீர சைவத்தில் காணலாம்.

## தென்னாட்டுச் சைவம் - சைவ சித்தாந்தம்

தென்னாட்டில் நிலவும் சைவம், **சைவ சித்தாந்தம்** எனப்படும். இது தமிழகத்திலும் ஈழத்திலும் ஏனைய உலக நாடுகள் சிலவற்றிலும் பல கோடிக்கணக்கான மக்களால் பின்பற்றப்படுகிறது. **சைவத்தின்** உட்பிரிவுகளில் இஃது மிக **ஏற்றம்** பெற்று விளங்குகிறது.

சிவனே பரம் பொருள் என்பது சைவ சித்தாந்தத்தின் **உயிரான** கொள்கை. வேதங்களும் **ஆகமங்களும்** இதன் பிரமாண நூல்கள். **வேதம்** பொது எனவும் ஆகமம் சிறப்பு **எனவும்** கொள்ளப்படும். இறைவன் அருள் பெற்ற மெய்யடியாரால் பாடப்பெற்ற திருமுறைகள் பன்னிரண்டும், சைவ சித்தாந்தத்தை நெறிப்படுத்தும் மெய்கண்டசாத்திர நூல்கள் பதினான்கும் சைவசித்தாந்தத்தின் இரு கண்கள் போல விளங்கும். தமிழில் எழுந்த புராணங்களிற் கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தப்புராணம் சிறப்பிடம் பெறும். தத்துவ உலகிற் செழிப்புற்றுத் தளர்வின்றித் தழைத்து நிற்பது இதுவே. ஆழமானவையும் மிக நுண்ணியனவுமாகிய உலகளாவிய கோட்பாடுகளைக் கொண்டு விளங்குவதும் இதுவே. இதனாலன்றோ பல்லவப் பேரரசின் மாமன்னவருள் ஒருவனாகிய இராஜசிம்மன் தன்னைச் **'சைவசித்தாந்தி'** எனப் பிரகடனஞ் செய்தான். மேனாட்டிலிருந்து வேற்று மதம் பரப்ப வந்தோரும் தம்மைச் சைவசித்தாந்தத்துடன் பின்னிப் பிணைத்தனர். இவர்களுட் **கனம்போப், கௌடி** என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். சைவசித்தாந்தம், இந்தியச் சிந்தனைகளதும் உணர்வினதும் சிகரம் என்பர் கௌடி. இத்தகு சைவசித்தாந்தம் கூறும் உட்பொருளைச் சிறிது நோக்குவோம்.

சங்ககாலத்துக்கு முற்பட்டே தமிழகத்தில் சைவம் வேரூன்றி வளர்ந்த வரலாற்றை முன்பு கண்டோம். அக்காலம் தொட்டே இச்சித்தாந்த சைவம் பாலினுள் வெண்ணெய் போல சுடர்விட ஆரம்பித்தது. தமிழ் மக்கள் வேத ஆகமங்களைப் பண்டு தொட்டுப் போற்றி வந்தனர். அதனாலேயே திருமூலர் **''வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்''** என விரித்தார். இதனை வழி மொழிதல் போல

**'' வேதநூல் சைவநூல் என்றிரண் டே**
**நூல்கள்.**
வேறுரைக்கும் நூல்இவற்றின் விரித்த
நூல்கள்
ஆதி நூல் அநாதிஅமலன் தருநூல்
இரண்டும்
ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு
நூலாம்''

சித்தியார் - 8:2:5

என அருணந்தி சிவம் அழுத்திக் கூறியுள்ளார். வேதம் சிவபிரான் செய்த நூல் என்பது சைவத்தின் நம்பிக்கை, **'வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி, வேத நாயகனே போற்றி, மறையின் பொருளானவனே ---, அண்டர் தமக்கு ஆகம மொழியும் எம் மாதியை, ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்''** என வரூஉம் சமய குரவர்களின் திருவாக்குக்கள் வேத ஆகமங்களின் தூய்மையையும், அவை இறைவனால் அருளப்பட்டவை என்பதையும், வலியுறுத்தும்.

சித்தாந்தத்தின் தோற்றத்திற்கு ஆகமம் பெரும் பங்களிப்பு நல்குவதாலேயே அதனைச் சிறப்பு நூல் என்றனர். வேதம் வேதாந்தத்திற்கு சிறப்பங்கமாக அமைவது போல் என்க. தென்னக சித்தாந்த வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவன பன்னிரண்டு திருமுறைகள் பதினான்கு மெய்கண்டசாத்திரங்கள், என்பன.

மெய்கண்ட சாத்திரத்தில், **சிவஞான போதம் சிவஞான சித்தியார்** (சுபக்கம் பரபக்கம்) **சித்தாந்த அட்டகம்** திருமுறைகளுள் **திருமந்திரம்** என்பன விசேடமாகக் குறிப்பிடத் தக்கன. சைவசித்தாந்த தத்துவம் தோற்றியது திருக்கைலாயத்தில் எனக் கூறப்படுகின்றது.

**ஸ்ரீ கண்ட உருத்திரர்** திருக்கைலேயில் திருநந்தி தேவர் என்பாருக்கு முதன் முதல் உபதேசித்தார் என்றும், அவர் வழியே அகச் சந்தான முறையில் சத்தியஞான தரிசனி மாணவர் பரஞ்சோதியார் சுவேத வனப் பெருமாளுக்கு உபதேசித்துத் தம் குருவின் பெயரைத் தூய தமிழில், **மெய் கண்டார்** என அமைத்து அவருக்குத் திருநாமமாக இட்டார் என்றும், அவர் வழியே **அருணந்தியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம்** எனச் சந்தான பரம்பரை தோன்றிச் சைவ சித்தாந்த தத்துவத்தை வளர்த்தது என்றும், அதனூடாகத் திருவாடுதுறை முதலிய ஆதீனங்களும் பிறவும் வளர்த்து வருகின்றன என்றும் கூறுவர்.

## சித்தாந்தம் கூறும் முப்பொருள்

சைவ சித்தாந்தத்தின் தோற்றமும் விரிவுமாக அமைவன "பதி, பசு, பாசம்" எனும் சொற்களே. இவற்றைச் சுருக்கமாக "முப்பொருள்" என்ற வார்த்தையில் அடக்கிவிடுவர். பதி இறைவன்; பசு ஆன்மா; பாசம் - தளை அல்லது கட்டு எனப்படும்.

### பதி :

சிவன் இவனே பரம்பொருள், எழுத்துக்களுக்கு "அ" கரம் முதலாவதாகி, ஒலிஇயல் அடிப்படையில் ஏனைய எழுத்துக்களுடன் கலந்து இருப்பது போல இவன் முதல்வனுகி ஒன்ருய் உடனுய் வேருகி அண்ட சராசரங்கள் அனைத்திலும் பிரிந்தும் பிரிப்பின்றியும் இருக்கின்ருன். எண்குணத்தான்,அருவம், உருவம், அருவுருவம் எனும் பல மூர்த்த பேதங்கள் உடையவன். எரியுறு நீர் போலச் சக்தியிலிருந்து வேறுபடாதவன். ஐந்தொழிலைச் செய்பவன் ஆன்மாக்களுக்கு சுகத்தை அளிப்பவன். இவனில் இருந்தே முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றி அவனுள் அடங்கும்.

### பசு :

ஆன்மா அல்லது உயிர்கள். இவை எண்ணில்லாதவை. அாநதியானவை, மலங்களால் கட்டுப்பட்டவை, சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என முத்திறப் பட்டவை.

### பாசம் :

இது தளை அல்லது கட்டு பந்தம் எனப்படும். ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களும் இதிலடங்கும். மலம் ஆன்மாவைப் பற்றியுள்ளது. பிறவிப் பிணிக்குக் காரணமாய் ஞானத்தை தடுத்து நிற்பது. ஒவ்வொரு மலமும் தனி விளக்கம் பெறும்.

### ஆணவம் :

இருளிலும், கொடியது அநாதியானது, நெல்லின் உமிபோல ஆன்மாவுடன் பற்றி நிற்பது. நான் எனதுஎன்னும் செருக்கையும் அறியாமையையும் ஆன்மாவுக்கு நல்கி சிவத்தை மறைத்து உலகியல் இன்பத்தைக் காட்டுவது.

### கன்மம் :

இது வினை அல்லது செயல் எனப்படும். நல்வினை, தீவினை, பற்றற்றவினை, வெறுவினை எனப் பகுக்கப்படும். கன்மமே மறு பிறப்புக்குக் காரணம், இதன் பயன் புண்ணியம், பாவம் எனப்படும்.

### மாயை :

**மாயை:** இதுவே பிரபஞ்ச உற்பத்திக்கு முதற்காரணம். இது அறியும் தோற்ற மற்றது. பொறி புலன்களுக்கு எட்டாதது. அழிவற்றதாய் என்றுமுள்ளது. இதிலிருந்தே முப்பத்தாறு தத்துவங்களும் வெளி வருகின்றன. இது சுத்தமாயை, அசுத்த மாயை சுத்தாசுத்த மாயை என மூன்று வகைப்படும். தனு கரண புவன போகங்களை இறைவன் இம்மாமையிலிருந்தே தோற்றுவிக்கின்ருன்.

சித்தாந்தம், திரோதான சக்தி, திருவருட் சக்தி, குரு, எண்வகைத் தீட்சை

வகைகள், திருவைந்தெழுத்து, இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், பேரின்ப முத்தி என்றெல்லாம் மிகவிரிவாக எடுத்துக் கூறும். பேரின்ப முத்தி பெறும் ஆன்மா ஒன்றென்றும் இரண்டென்றும் சொல்ல முடியாத நிலையில் சிவத்துடன் ஒன்றுபட்டு அத்துவித ஆனந்த வெள் ளத்தில் மூழ்கும் என்பது சைவ சித்தாந் தத்தின் இறுதி நிலை.

ஆகம அடிப்படையில் சைவசித்தாந்தம் ஆன்மாவின் இறுதி இலட்சியமான முத்திப் பேற்றுக்கு நான்கு வழிகள் அல்லது படி முறைகளை விதிக்கும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்கள். அவற்றைச்சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என ஒன்றை நான்காக்கிக் பதினு றுகவும் கூறுவர்.

சரியை : என்பது சரீரத்தால் செய்யும் சிவதொண்டுகள், ஆலயம் தூய்மை செய் தல், திருநந்தவனம் அமைத்தல், முதலாம் பணிகள் இதிலடங்கும். ஆண்டான், அடிமை உறவிலிருந்து செய்யப்படுதலின் தாசமார்க் கம் எனப்படும். இதன் முத்திப்பேறு இறை வன் உலகத்தில் இருத்தலாய சாலோகம், இதற்கு உவமானம். அரும்பு. திருநாவுக் கரசர் இவ்வழி நின்று பேறு பெற்றவர்.

கிரியை : திருஞான சம்பந்தர் பேறு பெற்ற இந்நெறி சற்புத்திர மார்க்கம் எனப்படும். மகன், தந்தை உறவில் நின்று விசேட தீக்கை பெற்று, இறைவனுக்கு மணமலர், தூபம், தீபம், மஞ்சனம் அமுது முதலியன கொண்டு நிகழ்த்தும் பூசை வகைகள் இதிலடங்கும். இறைவன் அருகில் அணுகுதல் என்னும் சிவசாமீப் பியமுத்தி இதன் பேருகும். மலர் இதற்கு உவமையாகும்.

யோகம் : தோழமை உறவில் நின்று சகமார்க்க வழியில் செய்யும் தொண்டு. சுந்தரமூர்த்தி நாயனுர் இவ்வழி நின்றவர். இதன்பயன் இறைவனின் வடிவம் பெறுத லாம். இது இறைதியானத்தையும் இறை வனை அகத்தில் வழிபடுதலையும் குறிக்கும். அட்டாங்க யோக நிலைகளைத் தொடர்பு றுத்தலுமுண்டு. காய் இதற்குவமை.

ஞானம் : சன்மார்க்க நெறியில் நாயகன் - நாயகி உறவில் நின்று செய்யும் தொண்டு. முதல் மூன்று படிகளாலும் பெறும் முதிர்ந்த நிலையே ஞானம் அல்லது அறிவு நெறி ஆகும். இவ்வழி நின்றவர் மாணிக்க வாசகர். கனி இதற்குவமை யாகும். இறைவனோடு ஒன்றுபடும் சாயுச் சியமுத்தி ஆன்மாவின் இறுதி நிலையாகும். அதாவது ஆன்மா சிவத்தன்மை பெற்றுச் சிவமாகிவிடும் அத்துவிதக் கலப்பு.

சைவம் கூறும் குரு, லிங்க, சங்கம வழி பாடும் நோக்கற்பாலது. குருவையும், இலிங் கத்தையும், அடியவர்களையும் வழிபட்டு முத்திப் பேறுபெற்ற மூவகைச் சிவனடி யார் சரிதைகளையே பெரியபுராணம் செப்பும். எடுத்துக் காட்டாக குருவருளால் முத்தி பெற்றவர் அப்பூதியடிகணுயனுர். சிவலிங்க வழிபாட்டில் முத்திபெற்றவர் கண்ணப்பநாயனுர். சங்கம வழிபாட்டால் முத்தி பெற்றவர் சிறுத்தொண்டர் என லாம்.

இதுவரை சைவ சமயம் என்ற பிரிவுள் அதன் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, உட்பிரிவுகள், அவை உணர்த் தும் தத்துவக் கோட்பாடுகள் என்பன் மிகமிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சைவ சமய தத்துவ நெறி, விரிவும், சிறப்பும், திட்பமும் நுட்பமும் வாய்ந்தது. வானிலும் உயர்ந்தது; நீரிலும் ஆழ்ந்தது; அதன் ஆற்றலை அளவிட்டுக் கூற முடி யாது. உயர்ந்த மதம் என்ற அடிப் படையில் அது மனித குலத்துக்கு சமய, சமூகபொருளாதார ரீதியாக அளித்த பங் களிப்பினை மிகச் சுருக்கமாக ஆராய்வது அவசியம்.

## வாழ்வியல் வழியில் சைவத்தின் பங்களிப்பு :

மனித சமுதாயத்தின் பண்பட்ட வாழ்க்கைக்கு ஏனைய மதங்கள் என்ன பங்களிப்பினை நல்கினவோ. அவற்றுக்குக்

ஒன்றுதவகையில் சைவமும் வழங்கியுள்ளது. மனிதனின் பண்பு உயர்வதற்குத் திருக்கோயில் வழிபாடும், சமயச் சடங்குகளும், விரதங்களும் உதவுகின்றன. இவற்றுளே திருக்கோயிலே, ஆன்மிக ஒருமைப்பாட்டினதும், சமுதாய வளர்ச்சியினதும் இதயமாக விளங்குகின்றது. இதனுலேயே, திருக்கோயில் இல்லாத ஊர், ஊரல்ல அடவி காடே என்றும், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும் அடியார்களும், ஆன்றோர்களும் கூறிப்போயினர்.

திருக்கோயில்கள் மனித உடலுறுப் படிப்படையில் ஆகம விதிக் கேற்ப அமைகின்றன. 'ஊனுடம்பாலயம்' என்பர் திருமூலர். கருவறைமுதல் கோபுர வாசல் வரை அமையும் மண்டபங்கள் கட்டடக் கலையின் உயர்வைக் காட்டும். திருக்கோயில் கட்டடத் தளவரிசைகள், தூண்கள் சுவர்கள், விமானங்கள், கோபுரங்கள் எங்கணும் பொலிகின்ற சிற்பங்களும், சுவர்களிலும் மண்டப விதானங்களிலும் காணப்படும் ஓவியங்களும் ஆலயத்தைக் கலைக் கூடமாக மாற்றுகின்றன. சிற்பங்களும் ஓவியங்களும் இறைவனின் மூர்த்தங்களையும், இதிகாச புராணக் கதைகளையும், மெய்யடியார்களின் அற்புதங்கள் வாழ்க்கை வரலாறுகளையும், சித்திரிப்பதன் மூலம் அமைதியற்ற மனித உள்ளங்களை அமைதிப்படுத்தி இறையுணர்வில் ஈடுபடுத்துகின்றன. மேலும் ஆலயங்கள் விக்கிரக இயலை வளர்க்கவும். இறைவனின் பேரருட்திறன் முதலாம் சமயக் கோட்பாடுகளை சாதாரண மக்களும் அறிந்து பக்தி நெறிப்படவும் வழிவகுக்கின்றன.

நித்திய நைமித்திய, காமிய நிஷ்காமிய பூசைகள், விழாக்கள் என்பன சிவபரம் பொருளை மக்கள் சென்று வழிபட உதவும். இலிங்கம், நந்தி, பலிபீடம், கொடிமரம், கொடிச்சீலை, தருப்பைக்கயிறு என்பன முப்பொருளைத் தத்துவார்த்த ரீதியில் உணர்த்தும். அமைதியற்ற புலன்கள் ஆலயத்து மணி, மேளம், தாளம், நாதசுரம், சங்கு, தாரை, தம்பட்டம் முதலாம் வாத்தியங்களால் ஒருமைப்பட்டு இறை உணர்வோடு ஒன்றும். இதன் மூலம் விக்கிர வழிபாடு, யந்திர வழிபாடு, மந்திர வழிபாடு என்பன சிறப்படைகின்றன. இவை சிறப்படைவதன் மூலம் வான் முகில் வழாது பெய்ய, மலிவளம் சுரக்க மன்னன், கோன் முறை அரசு செய்ய, குறைவிலாது உயிர்கள் வாழுமெனச் சமய நம்பிக்கை மிக்க சைவர் நம்புகின்றனர். இதனுலே சமூகத்தில் அமைதியான போக்கும், அதற்குரிய சூழ்நிலையும் உருவாகிறது.

சைவக் கோயிலில் கொடியேற்ற விழா முதல் தீர்த்தோற்சவ விழா வரை நடைபெறும் விழாக்கள் இறைவனின் பஞ்ச கிருத்தியங்களை வெளிப்படுத்துமென எனத் தத்துவம் கூறினும் மக்கள் அவ்விழாக்களில் ஒன்றுபடுதல் மூலம் உடன்பிறப்பு, தோழமை, முதலாம் சமரச உறவுகள் தோன்றிச் சமூகத்தை வளம்படுத்தலையும் காண்கின்றோம்.

சிவாலயங்கள் பக்தி வழிபாட்டு நெறிக்கும், சிற்பம், இசை, நடனம், ஓவியம் முதலிய நுண்கலைத் துறைகளும் வளர்ச்சி அடைதற்கும் உரிய இடமாக மட்டும் விளங்கவில்லை. சுந்தரர் மீது சிவனுல் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரிக்க எழுந்த நீதி மன்று போலவும், சமயவாதம் நிகழ்த்தும் பட்டிமன்று போலவும், சேக்கிழார், பெரியபுராணம் சிதம்பரத்தில் அரங்கேற்றிய புலவர் பெருமக்களின் பேரவை போலவும், இசை நடன வல்லாரின் இனிய நிகழ்ச்சிகளை நயக்கும் நடுவண் இடங்களாகவும், மற்றும் மன்னனையும், மக்களையும் இணைக்கும் பேரிடமாகவும், போர், அறஞ் செயல் முதலாம் அரசரின் மெய்க்கீர்த்திகளைக் கல்வெட்டு உருவில் உரைக்கும் வரலாற்று மேடையாகவும், இன்னும் பற்பல ஆக்கப் பணிகளுக்குரிய இடமாகவும் விளங்கின. இதனுலன்றோ பல்லவ, சோழ, பாண்டிய நாயக்க மன்னர்கள் பார்போற்றும் சிவப்பேராலயங்களைத் தமிழ் நாட்டில் அமைத்தனர். புறநாட்டினரையும் கவரும் கலைத் தெய்வமாக விளங்கும் நடராசர், தக்ஷணமூர்த்தி பிக்ஷாடனர் முதலாம் மூர்த்தங்களையும், திருவிளையாடல்களுக்குரியஅட்ட மூர்த்தங்களையும் அமைத்தனர்.

குரு வழிபாடும், அடியார் வழிபாடும் சமூகத்தில் ஒழுக்க இயலை ஏற்படுத்தின. **குருவே பரம்பிரமம்** என்னும் கருத்தும் வழிபாடும் குரு சீடபரம்பரையை உயர்த்துவது மட்டுமன்றி கல்வி உலகில் நற்சிந்தனையை வளர்க்கவும் உதவுகின்றன. இதே போல அடியாரைப் போற்றும் சங்கம வழிபாடு பெரியாரைத் துணைகொள்ளல் சான்றோர் வழி நிற்றல் என்னும் இன்றைய இளம் தலைமுறைக்கு வேண்டிய பண்பட்ட சூழ்நிலையை உருவாக்க உதவுகின்றது.

## கிராமிய வழிபாடு :

சைவத்தினூடாக, **வைரவர்** வழிபாடு ஈழத்தில் சிறப்புற்று வருவது குறிப்பிடத்தக்கது. **பெரியதம்பிரான், வீரபத்திரர் பேச்சியம்மன்**, கண்ணகை வழிபாடுகளும் குறிப்பிடத்தக்கன. இங்கு மிருக பலியிடுதல், புலால்உணவு படைத்தல் போன்ற சைவத்திற்கு முரண்பட்ட மூடநம்பிக்கை உள்ள செயல்கள் உள்ளன. ஆனால் அவை இன்று இல்லை, என்னும் படியாக அருகிவருவது சைவமக்களின் சாதனை என்றே கூற வேண்டும்.

## சமய விழாக்களின் பயன் :

வேத ஆகம நெறி நின்று இந்து சமயம் கூறும் சமயச்சடங்குகள், சைவ மக்களின் இல்லத்தையே சமயச் சார்புடைய ஒன்றாக மாற்ற வல்லன. தொட்டிலிருந்து சுடுகாடு மட்டும் மனித வாழ்வில் நடைபெறும் ஆசௌசம் கழித்தல், குழந்தையைத் தொட்டிலில் இடுதல், பொன் பூணுதல், பூப்புநீராட்டல், திருமணவிழா முதலிய எல்லா மங்கல நிகழ்ச்சிகளும், அபரக் கிரியைகளான பிற சடங்குகளும் சைவத்தின் பேரால் மக்களை மன நிறைவு அடையச் செய்கின்றன. மக்கள் சுற்றஞ்சூழ இருத்தலையும், ஊர்மக்களை ஒன்றுபடுத்துதலையும், பகைமையைப் போக்குதலையும், பிரிந்தவரைக் கூட்டுதலையும், சமூக வளர்ச்சித் திட்டங்கள் போலச் செயற்படுத்த வல்லனவாக இச்சமயச் சடங்குகள் விளங்குகின்றன.

''தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்று ஐம் புலத்தாறு
ஓம்பல் தலை''

என்ற வள்ளுவர் கூற்று, இல்லறத்தார் ஓம்பும் சடங்குகளையும் அவற்றை ஓம்புதல் இன்றியமையாதது என்பதனையும் வலியுறுத்தக் காண்கிறோம். குடும்ப சமுதாயம் ஒன்றுபட்டு வாழ்கின்றது. மனிதஇயல் சைவத்தின் மூலம் மேம்படுகிறது.

சைவ மதம் கூறும் சிவ விரதங்கள் உடலை ஓம்பவும் உள்ளத்தை உறுதிபெறச் செய்யவும் உதவுகின்றன. கன்மம் மறுபிறப்பு என்ற சைவத்தின் கோட்பாட்டினால் மக்களிடையே பாவம், புண்ணியம், நரகம், மோட்சம் என்ற உணர்வு தலைப்படலால் அஃதும் அறவாழ்வுக்கு வழி வகுக்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக விளங்குவது சைவசமய இலக்கியங்களே. அவை, தத்துவம், தோத்திரம் என்ற இரு பிரிவில் அடங்குவன. இயற்கை எழில் வழியாகவும், புராணக் கருத்துக்கள் ஊடாகவும் அவை எல்லாம் சிவ பரத்துவத்தையும் சைவத்தின் உயிராய அன்பு - அருள் மார்க்கங்களையும், வலியுறுத்தும். தேவார திருவாசகத் திருமுறைகள் இசையமுதமாய் பெருக்கெடுப்பதுடன் நாயகன் - நாயகி உறவு முறையில் சிவத்தையும், ஆன்மாவையும் அகப்பொருள் துறையில் இணைக்கவும் காண்கின்றோம். இந்த அன்பு நிலை நம்முள்ளத்தை தொடுவதாகும் திருமந்திரம் தந்த திருமூலர்.

''அன்பு சிவம் இரண்டென்பர்
அறிவிலார்

அன்பே சிவமாவதாரும் அறிகிலார்',

என அன்பையும், சிவத்தையும் ஒன்றுபடுத்திச் சிவத்துக்கு அன்பை இடமாக்கும் திறனே திறன். அன்புக்கு எதிரான கொலையையும், புலால் உட்கொள்வதையும், சைவம் ஒன்றே முற்றாக மறுக்கும் வகையில் அமைந்திருப்பதை, மரக்கறி உணவைச் சைவ உணவென்றும், புலால்

உண்ணுதவரைச் சைவர் என்றும் கூறும் மரபொன்றுற் காண்கிறோமல்லவா?

**உலக ஒருமைப்பாடு :**

நாயன்மார்களும் அருளாளர்களும் உயர்வு, தாழ்வு எனும் சாதிபேதங்களைச் சாடினர். பஞ்சம் நீக்கி மக்கள் பசி போக்கினர். இறையுணர்வாம் மெய்யுணர்வை எல்லாத்துறைகளிலும் புகுத்தினர். மக்கள் பயன் பெறவல்ல அருளமுதச் சொல்லோவியங்களை ஆக்கினர். அவை வற்றாத வளமூட்டும் பக்தி ஆறாக நாடெங்கும் பாய்ந்தோட வழிவகுத்தனர். இத் தெய்வத் திருமுறைகள் உலகத்துக்கு அளித்த ஒப்பற்ற கொடை தெய்வீக ஒருமைப்பாடே.

இன்று நிலை குலைந்து தடுமாறும் அனைத்தும் உலகப்பிரச்சனைகளுக்கும் **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்ற சங்கத் தமிழ்ச் சான்றோன் பூங்குன்றன் நெறிநின்று **ஒருமை** என்னும் வழிகாட்டும் அடியார் சிறப்பே சிறப்பு. **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்னும் திருமூலர் வாக்கும் **உலகம் உவப்ப** என்னும் நக்கீரரின் **கூற்றும் தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி** என்னும் மாணிக்க வாசகரின் திருவாசகமும் **உலகெல்லாம் உணர்ந்தோதற் கரியவன்** என்னும் சேக்கிழாரின் செஞ்சொல்லும், சைவம் காட்டும் உலக ஒருமைப்பாட்டின் சிகரங்களாம்.

**மும்மையும் தரும் சைவம் :**

**''மண்ணுலகத்தினிற் பிறவி மாசற எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுற''** என்பது புராணவாக்கு. பிறப்பெடுத்ததன் நோக்கம் இறைவனை அடைதலே என நாவலர் கூறிய கருத்தின் நிறைவைச் சைவம் நமக்கு வழங்கக் காண்கிறோம்.

**மண்ணுலகத்தினிற் பிறவி மாசற** என்பதால் மறுமைக்குரிய இன்பத்தையும், **எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுற என்பதால்**, இம்மைக்குரிய இன்பத்தையும், வீட்டின்பத்தையும் ஒருங்கு சேர அளிக்கும் பான்மையை சைவத்தே அன்றி வேறு எங்கே காணமுடியும்?

சைவ சித்தாந்தத்தின் உயர்தனிச் செம்மை இலக்கியமாக விளங்குவது கந்த புராண காவியம். இதனை அருளிய கச்சியப்ப சிவாச்சாரியார்,

இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித் தோது வோரே

என்று கூறிய திருவருட் பாடல் உள்ளம் தொறும் உவகை அளிக்கவல்லது. இவ்வுலகிலேயே ஒவ்வொரு மனிதனும் இந்திரனாகி எல்லா இன்பமும் பெற்று, மறுமைக்குரிய சிவகதியும் அடைவார் என அவர் அறுதியிட்டுக் கூறுவது சைவத்தின் செம்மையையும் உயர்த்த கோட்பாடு தத்துவ நெறிகளையும், விண்முகட்டில் விளங்க வைத்தல் போலாம்.

---


**ஆதாரம் :**

1. **இந்திய சமய தத்துவம் :** டாக்டர். T. M. P. மகாதேவன், தமிழ் நாடு அரசு பாட நூல் நிறுவன வெளியீடு.
2. **வீர சைவம் :** பேராசிரியர். வை. இரத்தினசபாபதி, பொன்விழா வெளியீடு. டாக்டர். S. இராதாகிருஷ்ணன், மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம் — சென்னைப் பல்கலைக்கழகம்.
3. **காச்மீர சைவம் :** பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தன் முன்னைய நிறுவன வெளியீடு.
4. **சைவசமயம் :** (ஓர் அறிமுகம்) டாக்டர். ப. அருணசலம்.

# வைணவம்

**திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) M. A.**
*(அதிபர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)*

**வி**ட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயமே வைணவம் எனப் பெயர் பெறும். வேதங்களில் இடம் பெற்ற முதன்மையான தெய்வங்களுள் விட்டுணுவும் ஒருவன். விட்டுணு என்ற பெயர் எங்கும் யாவிலும் நிறைந்தவன் எனப் பொருள்படும். நாராயணன் என்ற பெயரே வேதபாசுரங்களிலே பெரும்பாலும் வழங்கியது.* நாரா + அயனன் என்ற இருசொற்களின் சேர்க்கையே 'நாராயணன்' என்ற பதமாகும். 'நாரா' என்பதற்குத் தோன்றுதல் எனவும் 'அயனன்' என்பதற்கு அமர்ந்திருப்பவன் எனவும் பொருள் கொள்வர். 'ஐம்பூதங்களாலான சேதன அசேதனப் பொருள்களைத் தோற்றுவித்து, அவற்றினுள்ளே அந்தர்யாமியாய் அமர்ந்திருப்பவன்' என்பதே இதற்குப் பொருள். உபநிடதங்களிலே 'பிரமம்' என்றும் 'ஆன்மன் என்றும் குறிக்கப்படும் பரம்பொருள் விட்டுணுவே என வைணவர் கொள்வர்.

## சண்மதங்களிலே வைணவத்தின் இடம்

சநாதனமானதும் தத்துவம், வழிபாடு, ஒழுக்கம் ஆகிய மூன்று அமிசங்களையும் குறைவறத் தன்னுள் அடக்கியதும் வேதங்களை முதனூல்களாக ஏற்றுக் கொண்டதுமான இந்துசமயம் 'ஒன்றே உள்ள பொருள் அறிவாளர்கள் அதனைப் பல பெயர்களால் வழங்குவர்' என்ற இருக்குவேத மகாவாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு, பரம் பொருளை அழைத்து வழிபடும் பெயர்களுக்கேற்பச் சிறப்பாக ஆறுகூறுகளாய்ப் பிரிந்துள்ளது. இதனால் வைதிக சமயங்களைச் சண்மதங்கள் (சட் என்ற சொல்லின் திரிபாகிய சண் என்பதற்குப் பொருள் ஆறு என்பதாகும்.) எனவும் அழைப்பதுண்டு. சிவனே பரம்பொருள் எனக்கொள்ளும் சைவம், விட்டுணுவைப் பரம் பொருளாகக் கருதும் வைணவம், சத்தியை முழுமுதலாக வணங்கும் சாக்தம், கணபதியை முழுமுதலாய் வரிக்கும் காணபத்தியம், குமரனைப் பரம்பொருளாய் வழுத்தும் கௌமாரம், சூரியனுக்கு முதன்மை வழங்கும் 'சௌரம்' ஆகிய ஆறுமே சண்மதங்கள் எனப்படும். கி. பி. எட்டாம் நூற்றாண்டிலே வாழ்ந்தவராகக் கொள்ளப்படும் ஸ்ரீசங்கராச்சாரியரே இச்சண்மதங்களை மீட்டும் நிறுவியவர் (பிரதிஸ்தாபகர்) என்று அறிகின்றோம்.

இவற்றுள்ளே சாக்தமும் காணபத்தியமும் கௌமாரமும் சௌரமும் இந்தியாவின் பிரதேச மதங்களாகவே பெரும்பாலும் விளங்குகின்றன. அன்றியும் சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன சைவத்தினுள்ளே அடக்கப்பட்டும் விட்டன. சௌரமாகிய சூரிய வழிபாடு வைணவத்திலும் இடம் பெறுகின்றது. ஆக, இந்தியாவிற்குரிய தேசிய மதங்களாகவும் உலகளாவிய பிரசித்தி வாய்ந்தவையாகவும் சைவமும் வைணவமுமே இன்று நிலவி வருகின்றன, என்று கொள்வதிலே தவறில்லை.

---

* நாராயணன் என்ற பதத்திற்கு 'நீரில் கிடப்போன்' எனவும் பொருள் கொள்வதுண்டு. ஆதியில் சிருட்டிப் பொருள்கள் யாவும் நீர்போல ஒன்றாய் அடையாள வேறுபாடு இன்றிக் கிடந்தனவென்றும் அவற்றை இயக்கியும் வேறாக்கியும் சிருட்டிகளை விட்டுணு தொடக்கினன் எனவும் அதனால் அவன் நாராயணன் எனப்பட்டான் எனவும் கூறுவர்.

## சைவமும் வைணவமும்

சிவனும் விட்டுணுவும் மைத்துன உறவினர் எனப் புராணங்கள் வாயிலாகவும் சிவனுடைய சத்தியே விட்டுணு எனச் சைவ தத்துவ வாயிலாகவும் தெரியவருகின்றன. ஒரு காலத்திலே சைவமும் வைணவமும் ஒன்றுபட்டு இணைந்தும், இன்னொரு காலத்திலே ஒன்றுடன் ஒன்று முரணியும் நிலவியமைக்குச் சான்றுகள் உண்டு. எனினும் விட்டுணுவின் லீலைகளைப் பலபட விரித்துரைக்கும் இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் சைவர், வைணவர் என்ற வேறுபாடின்றி இருசாராராலும் இன்றுவரை உவந்து ஏற்றுச் சுவைக்கப்பட்டு வருகின்றமையை நாம் மறந்துவிடலாகாது.

## தமிழர் போற்றிய திருமால்

'திருமால்' என்றும் 'மாயோன்' என்றும் பெயர் வழங்கிப் பழந்தமிழர் போற்றிய தெய்வம் விட்டுணுவே. 'திருமால் என்பது தெய்வத்தன்மை பொருந்திய பெரியோன்' என்றோ, 'திருவாகிய இலக்குமியோடு கூடிய பெரியோன்' என்றோ பொருள்படும். மாயோன் என்பதற்கு மாமைநிறம் (மாநிறம்) அமைந்தவன் என்பது பொருள். தமிழர் வகுத்த நான்கு நிலங்களுள் ஒன்றாகிய காடும் காடுசார்ந்ததுமாகிய முல்லை நிலத்துத் தெய்வமாக மாயோன் கொள்ளப்பட்டான்.

**மாயோன் மேய காடுறை உலகமும்**

என்பது தொல்காப்பியம். அகநானூறு என்ற சங்கநூலிலே "சிவனும் திருமாலும் ஓருருவமாய் இணைந்து கோலங்காட்டுவது போலச் செக்கர் வானமும் நீலக்கடலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து விளங்குகின்றன" என்று புலவர் ஒருவர் வருணித்தல் காணலாம். இவ்வருணனை விட்டுணுவுக்கும் சிவனுக்கும் இடையே சமத்துவம் காண மேற்கொண்ட முயற்சி போலும் (அகநானூறு 300). புறநானூற்றில் "ஆலமர் கடவுள்" (புறம் - 198) எனத் திருமால் குறிக்கப்படுவான். "பிறரை வருத்தி அச்சம் தருவோராகிய அரக்கர்கள் ஒருகால் சூரியனைக் கவர்ந்து சென்று ஒளித்த பொழுது, உலகினை இருள் மூடிக்கொண்டது. மக்கள் துயருற்றனர். அவர்களின் துயர் போக்க, வலிமையும் அஞ்சன நிறமும் கொண்ட கண்ணன் (விட்டுணு) அரக்கரை அழித்துச் சூரியனை விடுவித்து உலகின் இருளைப் போக்கினான்" என்ற செய்தி காணப்படுகிறது. (புறம் 198) பெரும்பாணாற்றுப் படையிலே "பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்" என விட்டுணு குறிக்கப்படுகின்றான். கலித்தொகையிலே "பாம்பை அணையாகவும் சக்கரத்தை ஆயுதமாகவும் கொண்டவன்" என அவனைப் போற்றுவர். பரிபாடலில் எட்டுப்பாடல்கள் திருமாலைப் பரவுவனவாய் அமைந்தவை. திருமாலின் லீலைகள் அருட்செயல்கள், அவனைப் பரவுவார் அடையும் பயன், பாடியோரின் வேண்டுதல்கள் என்பன அமைந்துள்ளதோடு, சிவனுடனும் முருகனுடனும் ஒன்றுபட்டவனாகத் திருமாலைக் கருதி வழிபடுவனவாயும் இப்பாடல்கள் விளங்குகின்றன.

**ஐந்தலை உயரிய அணங்குடை**
**அருந்திறல்**
**மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ**

"ஐந்துதலைகளை உடையவனும் தெய்வத் தன்மையும் அரியதிறலும் திண்மையும் கொண்டவனுமாகிய ஒப்பற்ற சிவனும் அவன் மைந்தனாகிய அரியேறு ஒத்த முருகனும் நீயே" என்பது இதன்பொருள்.

ஆனால் இந்தச் சமத்துவநோக்குக் காலப் போக்கில் கைவிடப்பட்டுச் சைவர் சிவபெருமானை ஏற்றியும் விட்டுணுவைத் தாழ்த்தியும், வைணவர் இதற்கு மாறாக விட்டுணுவை ஏற்றியும் சிவனைத் தாழ்த்தியும் தம்முள்ளே முரண்பட்டமைக்குச் சமய குரவர்களின் தேவார திருவாசகங்களிலும் ஆழ்வார்களின் திருப்பாசுரங்களிலும் பெருமளவு சான்றுகள் உள்ளன. சிவாலயங்களிலே விட்டுணுவைப் பரிவார தெய்வங்களுள் அடக்கி வழிபாடு செய்யும் வழக்கத்தினைக் காணலாம். விட்டுணு ஆலயங்களில் சிவனுக்கோ மற்றைக் கடவுளர்க்கோ இடம்

இல்லை.* 'அரியும் சிவனும் ஒண்ணு அறியாதவர் வாயில் மண்ணு' என்னும் பழமொழி, சைவ வைணவ ஒற்றுமைக்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் வெளிப்பாடு என்றே கொள்ளக் கிடக்கிறது. சிவனுக்கும் விட்டுணுவுக்கும் ஒரே ஆலயத்தில் சந்நிதிகள் அமைத்தமையும் இவ்வொருமைப்பாட்டு முயற்சியின் மற்றொரு வெளிப்பாடே. கச்சியேகம்பம் (நிலாத்துண்டப்பெருமாள்), சிதம்பரம் (கோவிந்தராசப் பெருமாள்), திருநெல்வேலி (நெல்லைக்கோவிந்தர்), திருச்செந்தூர் (அரங்கநாதன்), திருப்புத்தூர் (இலட்சுமி நாராயணன்), பழனம் (வேணுகோபாலர்), திருநாவலூர் (வரதராசர்), பவானி (ஆதிகேசவப் பெருமாள்) என்பன இக்கூற்றிற்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

## விட்டுணுவின் திருநாமங்களும் அவைகுறிக்கும் தத்துவப் பொருளும்

ஆதிதேவன், ஆதிமூலம் என்ற திருநாமங்கள் எல்லாத் தேவர்களுக்கும் முதலும் முதன்மையுமான தேவன் எனவும் எல்லாவற்றிற்கும் மூலமாயுள்ள பரம்பொருள் எனவும் பொருள் தருகின்றன. பத்மநாபன் என்ற திருநாமம் தாமரை மலர் போன்ற கொப்பூழை உடையவன் எனப்பொருள்படும். சிருட்டிதேவனாகிய பிரமன் இந்த நாபிக் கமலத்திலே தோன்றி, யாவற்றையும் படைத்தான் என்னும் பொழுது ''மூலமாய் நின்றதாமோர் மூர்த்தி'' விட்டுணுவே என்ற பொருள் தானாகவே பெறப்படுகின்றது. ஜகம் என்பது உலகம். இதற்கு அரங்கம் என்ற வேறொரு பெயரும் உண்டு. ஆகவே ''ஜகந்நாதன்'' ''அரங்கநாதன்'' என்பன உலகின் மூலப்பொருள், தலைவன் என்ற கருத்தினைத் தருவனவாகும். இவ்வாறு விட்டுணுவுக்கு அமைந்த ஒவ்வொரு திருநாமமும் அவனது மூலமாம் தன்மையையும் பரம்பொருட்டன்மையையும் புலப்படுத்தவே அமைத்துக் கொள்ளப்பட்டவை என்பது தெரிகின்றது. சிவ சகஸ்ரநாமம்போன்றே விஷ்ணுசகஸ்ர நாமமும் விட்டுணுவுக்கு 1008 நாமங்கள் கூறிவழிபட அமைந்ததாகும்.

அகவுயிர்க்கு அமுதே போற்றி, மாயச்
சகடம் உதைத்தாய் போற்றி, ஞானச்
சுடரே போற்றி, சொல்லுளாய் போற்றி,
உடையாய் போற்றி, உத்தமா போற்றி
அதிர்குரல் சங்கத்(து) அழகா போற்றி,
கதியே போற்றி, கரியாய் போற்றி,
குறளாய் போற்றி, குருமணி போற்றி,
மறையாய் போற்றி, மாதவா போற்றி,
அந்தணர் வணங்கும் தன்மைய போற்றி,
சிந்தனைக்(கு) இனியாய் போற்றி...

என விட்டுணுவை விளித்தழைக்கும் நாமம் ஒவ்வொன்றும் அவனது பெருங்குண இயல்புகளைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

## விட்டுணுவின் மூர்த்தங்கள்

விட்டுணு கோயில்களில் அவனின் கோலங்கள் நிற்பன, இருப்பன, கிடப்பன ஆகிய மூவகையாக அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இவை யோக, போக, வீர, ஆபிசாரிக என நான்கு வகை மூர்த்தங்களாக வகை செய்யப்படும். யோக மூர்த்தம் யோகிகளுக்கும், போக மூர்த்தம் போகிகளுக்கும், வீர மூர்த்தம் வீரர்களுக்கும், ஆபிசாரிக மூர்த்தம் அரசர்களுக்கும் வணங்குவதற்கு என அமைந்தவையாகும். வேறுவகையிற் சொல்வதானால் வாழ்க்கையின் எந்த நிலையில் நிற்பவர்களுக்கும் அவரவர் விருப்பிற்கு ஏற்ப வழிபடற்கென இவை அமைக்கப்பட்டுள்ளன.

## விட்டுணுவின் திருமேனிகள்

''நாராயணனே முடிவான பரம்பொருள், அவனே மிக்குயர்ந்த பேருண்மை'' எனவும், ''எல்லாத் தெய்வங்களுக்கும் தலைவனும், கடவுளர்க்கெல்லாம் மேலான கடவுளும் ஆகிய அவனை வணங்குவோம்'' எனவும்வேதங்களிலே புகழப்படும் விட்டுணு,

---

* இப்பொது முடிவிற்கு விதிவிலக்குக்களாக அன்பில், வித்துவக்கோடு என்னும் விட்டுணு தலங்களிலே சிவபெருமானுக்கும் சந்நிதிகள் உள்ளன.

நிர்க்குணப்பிர மமாக (குணங்கடந்த, குணங் களற்ற நிலை) வும், தன்னை வணங்கும் அடியவர்களுக்காகச் சகுணப் பிரமமாகவும் விளங்குகின்றான்.

நிர்க்குணப் பிரம நிலையில் அவனைத் தரிசிக்கவோ, அவன் அருளை அநுபவிக்கவோ இயலாது. எனவே ஞானிகள் உட்பட வைணவ அடியார்கள் அனைவரும் சகுணப் பிரம நிலையிலே அவனை வழிபட்டுப் பேரானந்தமடைதலையே விழைகின்றனர். சகுணப் பிரமநிலை ஐந்து வகையான திருமேனிகளாக வகுக்கப்படும். அவையாவன:

1. **பரம்:** யாவையும் கடந்த நிலையில் வைகுண்டத்திலே ஸ்ரீதேவி, பூதேவி, நீலதேவி தனக்குப் பணிவிடை புரிய அமர்ந்தருளும் பேரானந்தத் திருமேனி.

2. **வியூகம்:** பாற்கடலிலே அனந்தனாகிய ஆதிசேடனிலே பள்ளிகொண்டு படைத்தல், காத்தல், அழித்தல், சம்சார பந்தத்திலிருந்து கரையேற்றல் ஆகிய நான்கு தொழில்களையும் முறையே பிரத்தியும்னன், அநிருத்தன், சங்கர்ஷனன், வாசுதேவன் ஆகிய நால்வகைத் திருமேனிகள் கொண்டு நடாத்துதல்.

3. **விபாவம்:** அவதாரத் திருமேனிகள் இதனுள் அடங்கும்.

4. **அந்தர்யாமி:** படைக்கப்பட்ட சீவராசிகள் யாவினுள்ளும் தோன்றாத் துணையாய் நின்று அருள்பாலிக்கும் திருமேனி.

5. **அர்ச்சம்:** ஆலயங்களில் விக்கிரக வடிவில் எழுந்தருளி அருள்பாலிக்கும் திருமேனிகள்.

## விட்டுணுவின் திருக்கோலத் தத்துவம்

(i) **நீலவண்ண நெடிய திருமேனி:** நிறமில்லாத (நிர்க்குண) நீர், கடலாக விரியுமிடத்து நீலமாகக் காட்சி தரும். காண முடியாத பரவெளி ஆகாயமாய் விரிகையிலும் அதன் நிறம் நீலமே. எனவே யாவையும் கடந்து எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளாகிய விட்டுணுவும் நெடியோனாகவும் நீல நிறமுடையோனாகவும் சித்திரிக்கப் படுகின்றான்.

(ii) **இடது திருக்கரத்தில் ஏந்திய சங்கு:** சங்கினை ஊதுகையில் எழும் ஓசை பிரணவமாகிய ஓங்காரமாகும். இயற்கை முழுவதும் இயங்குவதால் உண்டாகும் ஓசையே ஓங்காரம். சங்கை இயக்குவதால் ஓங்கார ஓசை உண்டாக உலகம் இயங்குகிறது. எனவே விட்டுணு ஓங்கார வடிவினன் என்பது சங்கின் மூலம் புலனாகிறது.

(iii) **வலது திருக்கரத்தில் ஏந்திய சக்கரம்:** சக்கரம் ஏந்திய கையனாதலால் சக்கரபாணி எனத் திருநாமம் பெற்ற விட்டுணு, தருமத்தின் அறிகுறியான அந்தக் கருவியைக்கொண்டு அண்டசராசரங்களின் தருமத்திற்கெல்லாம் தான் காவலன் என்பதையும், தருமம் தவறி அதருமம் மேலோங்குகையில் தருமமே அதனை அழிக்கும் என்பதையும் உணர்த்துகின்றான்.

(iv) **மற்றிரு கரங்களும் ஏந்திய கதாயுதமும், தாமரை மலரும்:** உயிர்களைத் தனது அருளினாலே வீடுபேற்றிற்குப் பக்குவப்படுத்தும் விட்டுணு, அவ்வாறு அவை பக்குவம் அடைவதற்காய் வல்லியல்பு, மெல்லியல்பு என்ற இருவகை இயல்புகளையும் கொள்கின்றான்; வல்லியல்பு காரணமாக உயிர்களைப் பேதித்து வளர்த்தெடுக்கக் கதாயுதமும், போதித்தும் அருள் பாலித்தும் வளர்த்தெடுக்கத் தாமரையும் குறிகளாகக் கொள்கின்றான்.

(v) **திருமேனியிற் பொலியும் பேரழகு:** என்றும் மாறாததும் ஒரே நிலையானதும் பற்றறுத்ததுமான பரம்பொருள் அழியாத தெய்வப்பேரழகு வாய்ந்தும் பொலியும் என்பதைக் காட்ட, விட்டுணு பேரழகனாக அழியா அழகுடையவனாகக் காட்சி தருகின்றான். புன்முறுவல் மாறாத பவள வாயும் தாமரை விழிகளும் சிவந்த திருக்கரங்களும் திருப்பாதங்களும் விட்டுணுவின் தெய்விகப் பேரழகினைப் புலப்படுத்த அமைந்தனவாகும். பட்டுப் பீதாம்பர தாரியாய், சர்வாபரண பூஷிதனாய்க் கௌத்துவமணி அணிந்து செல்வநாயகனாய் அவன் விளங்கித் தோன்றுவான்.

(vi) **திருவாழ்மார்பன்:** விட்டுணு உயிர்களைக் காக்கும் கடவுள். உயிர்களுக்கு உறுதியளிப்பன அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குமாகும். இந்நான்கையும் விட்டுணுவின் இதயக்கமலத்தில் எழுந்தருளியிருக்கும் 'மலரின் மேவு திரு' வாகிய சத்தி வழங்குவதையே இலட்சுமி சமேதனாக விளங்கித் தோன்றுவது புலப்படுத்துகிறது.

## வைணவத்தின் தத்துவ நோக்கு

'அது நீ ஆகின்றாய்' 'ஒன்றே உள்ள பொருள்', 'நான் பிரமம் ஆகின்றேன்', 'அது நீ' (தத்துவம் அஸி, ஏகம் சத், அஹம் பிரமாஸ்மி, தத் சத்) என்பன வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிடதங்களில் வரும் மகாவாக்கியங்களாகும். இவற்றின் விரிவான விளக்கங்கள் கருத்தளவில் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையான சிந்தனைகள் தோன்றக் காரணமாயின. இச்சிந்தனைகளைத் தொகுத்து ஒருமைவாத அடிப்படையில் விளக்கம் தரமுற்பட்ட தத்துவநூல் வாதராயனர் எழுதிய பிரம சூத்திரமாகும். இதற்கு விரிவான வியாக்கியானம் செய்து பேருரைகள் (மஹா பாஷ்யங்கள்) எழுதியோருட் ஸ்ரீசங்கராச்சாரியர், ஸ்ரீராமானுஜர், மத்துவர், நீலகண்ட சிவாசாரியர் ஆகியோர் முதன்மையானவர்.

ஸ்ரீசங்கராச்சாரியர் 'உள்ளது ஒன்றே அது பிரமமே' என்ற அடிப்படையில் தமது ஆய்வினை மேற்கொண்டார். நிர்க்குணப்பிரமம் மாயை காரணமாக ஈசுவரன் என்ற சகுணப் பிரமநிலைக்கு இறங்குகின்றது என்றும், அவித்தை காரணமாகப் பலவாகிய உயிர்களாய்த் தோற்றுகின்றது என்றும், மாயையும் அவித்தையும் மறைய ஏகமாகிய பிரமம் மட்டுமே தோன்றும் என்றும், இரண்டற்ற ஒருமை நிலையாகிய 'கேவலாத்துவிதம்' - உயர்நிலை - அதுவே என்றும் பல்வேறு எடுத்துக்காட்டுக்கள், அநுமானங்கள் வாயிலாக அவர் நிறுவியுள்ளார். சங்கர வேதாந்தம் என்றும் ஏகான்மவாதம் என்றும் மாயாவாதம் என்றும் இத்தத்துவ நோக்கு அழைக்கப்படுகின்றது. ஒன்று வேறொன்றாகத் தோற்றுவதாகிய விவர்த்தவாதமே இவரின் விளக்கத்திற்கு அடிப்படை. சண்மத பிரதித்தாபகர் எனினும் சங்கரரின் வேதாந்த தத்துவம் சைவத்தையே அடிநிலையாகக் கொண்டது.

சங்கரருக்கு இரண்டு நூற்றாண்டுகள் பிற்பட்டவர் எனக் கொள்ளப்படும் (கி. பி. 1000) ஸ்ரீராமானுஜர் வைணவர். இவர் பிரமத்தை விட்டுணு எனவே கொள்கின்றார். சங்கரர் பிரமத்தை மட்டும், உள்பொருள் எனக் கொள்ள, ஸ்ரீராமனுஜர் பிரமம், உயிர், உலகம் மூன்றும் உள்பொருள்கள் என நிறுவ முற்படுகின்றார். பிரமம் உயிர். ஜீவன்களும் உலகமும் அதன் உடல். அஃதாவது பிரமம் சரீரியாகவும் ஜீவன்களும் உலகமும் சரீரமாகவும் உள்ளன. ஒன்றை ஒன்று பிரிந்து இயங்குவதில்லை. இவ்வகையில் இராமானுஜர் பரிணாமவாதியாவர். இவரின் கருத்துப்படி உலகையும் உயிர்களையும் அந்தர்யாமியாய் நின்று இயக்குபவன் விட்டுணுவாகிய பிரமம். உடலை உயிர் இயக்க உயிருள் உயிராய் நின்று உயிரை இயக்குவது பிரமம் என்பது இராமானுஜரின் முடிவு. 'உள்ள பொருள் ஒன்றே' என்பதற்கு இவர் கொண்ட பொருள் 'சுதந்திரமாய் உள்ள பொருள் பிரமம் ஒன்றே. அதற்குக் கட்டுண்டு அதனால் இயக்கப்படுவன பலவாகிய உயிர்கள், உலகம்' என்பதே. எனினும் சரீர சரீரி சம்பந்தத்தால் இவை இரண்டாகவோ பலவாகவோ வேறுபட்டு நின்று இயங்காது ஒன்றால் இயக்கப்பட்டு ஒன்றாகவே இயங்குகின்றன. என்பதும் இராமானுஜரின் முடிவு. உலகும் உயிர்களும் விசேடணங்கள். இவ் விசேடணங்களைத் தன்னகத்தே கொண்ட விசேடியமே பிரமம். ஆக விசேடணங்களும் விசேடியமும் ஒன்றிணைந்து பிரிக்கமுடியாதவாறு ஒன்று போல விளங்குவதே (அப்பிரதக்சித்தி), ஸ்ரீராமானுஜரின் ஒருமைக் கோட்பாடு. இதனை விசிட்டாத்துவிதம் என்பர். இவ்வாறு பிரமத்தை உயர்த்தி உயிரின் இயக்கத்திற்கு அதனை இன்றியமையாததாய் ஆக்கியதன் மூலம், இராமானுஜர் தமது தத்துவத்திலே பத்திக்கும்

தாராளமாக இடம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஸ்ரீராமானுஜர் பிரம சூத்திரத்துக்கு எழுதிய பேருரை ஸ்ரீபாஷ்யம் என வழங்கும்.

இராமானுஜருக்குப் பின்வந்த மத்துவர் இராமானுஜரைப்போல இறைவனுக்கும் உயிர் உலகிற்கும் பிரிக்கமுடியாத உறவைக் கற்பிக்கவில்லை. அவை இரண்டும் என்றும் வேறு வேறானவையே என்பது மத்துவரின் முடிவு. இவை மட்டுமல்ல, சடமாகிய உலகமும் இவற்றிலும் வேறானதே எனவும் அவர் கொள்வார். பொருள்கள் வேறு வேறு எனப் பிரிக்கப்படுவதற்கு அவற்றினிடையே உள்ள வித்தியாசங்கள் எடுத்துக் காட்டப்படல் வேண்டும். மத்துவர் இம் மூன்றற்கும் உள்ள வித்தியாசங்களை ஐந்து வகைப் பேதங்களாக வகுத்துக் காட்டுவர். ஈசுவரனுக்கும் சீவனுக்குமுள்ள பேதம் முதலாவதாகும். இது 'சீவேசுவர பேதம்' எனப்படும். அடுத்தது சீவன்களுக்கிடையிலே காணப்படும் பேதம். இது 'சீவபரஸ்பர பேதம்'. மூன்றாவதாகச் சீவன்களுக்கும் சடமாகிய உலகிற்குமுள்ள பேதம். இது 'சீவசட பேதம்' ஆகும். நான்காவதாகச் சடங்களுக்கிடையிலே காணப்படும் பேதம். இது 'சடபரஸ்பர பேதம்'. ஐந்தாவது ஈசுவரனுக்கும் சடத்துக்கும் இடையேயான 'சடேஸ்வர பேதம்'.

இவ்வாறு பேதங்கற்பித்த மத்துவர், வாயு புத்திரனாகிய அனுமான் மூலம் உயிர்கள் ஈசுவரனைச் சென்று அடைவதே முத்தியென்றும் ஆனால் இந்த முத்தி சகல ஆன்மாக்களுக்கும் கிட்டாது என்றும் சில ஆன்மாக்கள் எக்காலத்திலுமே முத்தி அடையா என்றும் கூறுவர். இவரின் வேதாந்த தத்துவம் துவிதம் (இரண்டாந் தன்மை) எனப்படும். மத்துவரும் வைணவராதலின் இவர் குறிக்கும் ஈசுவரனும் விட்டுணுவேயாவன். இராமானுஜருடைய தத்துவத்திலே பத்திக் கலப்புக் காணப்படுவதுபோல மத்துவரின் தத்துவத்திலும் பத்திக்கு இடமுண்டாயினும், சில ஆன்மாக்கள் முத்தி அடையா என்ற இவரின் கருத்து, பத்தி வைராக்கியத்திலே தளர்ச்சியுண்டாக்கக் கூடியதாகும். இம்முடிவுக்கு இவர் வரக் கிறிஸ்தவ சமயச் செல்வாக்குக் காரணம் எனக் கூறப்படுவதுமுண்டு.

நீலகண்ட சிவாசாரியார் சைவ சித்தாந்த நோக்கிலே பிரம சூத்திரத்திற்கு மகாபாடியம் எழுதியவராவர். சில வகைகளிலே ஸ்ரீராமானுஜருடைய தத்துவக் கோட்பாடு, சைவ சித்தாந்தத்தோடு ஒத்துச்செல்வது உண்மையே. (இறை, உலகு, உயிர் என்ற முப்பொருள்களும் உண்மை எனக்கொள்வதிலும் காட்சி, கருதல், நூல் ஆகிய முப்பிரமாணங்களை ஏற்பதிலும், வேத உபநிடதங்களோடு புராணங்கள் ஆகமங்களைப் பிரமாண நூல்களாகக் கொள்வதிலும் இறைவனையே முழுமுதற் பொருளாகக் கொள்வதிலும் ஒற்றுமையுண்டு.) ஆனால் அத்துவித முத்திநிலையில் இருசாராருக்கும் மிகப்பெரிய முரண்பாடு காணப்படுகின்றது. இராமானுஜருக்குப் பின்வந்த தெலுங்கரான நிம்பர்க்கர் அத்துவிதத்தையும் துவிதத்தையும் இணைத்து 'அத்துவித துவித' தத்துவத்தை உருவாக்கினர்.

## வைணவத்தின் பிரமாண நூல்கள்.

சைவம் முதலிய மற்றைச் சமயங்கள் போலவே வைணவமும் வேதங்களையும் உபநிடதங்களையும் முதனூல்களாகக் கொண்டிருப்பது முன்னரே கூறப்பட்டது. சைவத்திற்கு இருபத்தெட்டு ஆகமங்கள் உள்ளதுபோல வைணவதிற்கு இரண்டு ஆகமங்கள் பிரமாண நூல்களாக உள்ளன. முனிவர்கள் பலர் ஐந்து இராத்திரிகளிலே உபதேசித்த பாஞ்சராத்திர ஆகமமும் விகனசர் என்பவர் உபதேசித்த வைகானச ஆகமமுமே அவை. சமய தத்துவம், வழிபாட்டு முறைமை, கிரியைகள், கோயில் அமைப்பு, விக்கிரக அமைப்பு என்ற யாவும் இவ்வாகமங்களிலே விரிவாகப் பேசப்படும்.

விட்டுணுவின் மகத்துவங்களையும் அவர் அடியார்களுக்கு அருளிய திறங்களையும் அடியார் பெருமைகளையும் எடுத்துரைப்பன, பிரமாண நூல்களாய்க் கொள்ளப்படாத போதிலும், இவையும் வைணவ சமய வளர்ச்சிக்கு உதவியன என்ற வகையில் வியாசர் யாத்த புராணங்களும் குறிப்பிடத்

தக்கனவே. பதினெண் புராணங்களில் கருடம், வராகம், நாரதீயம், வைணவம், பாகவதம், வாமனம் ஆகிய ஆறும் விட்டுணு புராணங்களாகும்.

தத்துவ நூலாகவும் வாழ்க்கை நெறியை வகுத்துக் கூறுவதாகவும், கர்ம யோகத்தை முதன்மைப்படுத்திச் செயல் புரியத் தூண்டுவதாகவும் விளங்கும் பகவத் கீதை வைணவர்க்கே சிறப்பு நூலாயினும் எல்லா மதத்தவரும் பொது நூலாகக் கொண்டு படித்துப் பெரும்பயன் அடைய உதவுவதுமாகும். இது மகாபாரதத்தில் வீட்டும பர்வத்தில் பதினெட்டு அத்தியாயங் களில் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

## வைணவத்தின் உட்பிரிவுகள்.

வைணவ சமயத்தின் உட்பிரிவுகள் மூன்று. கிருஷ்ண சைதன்யம், நிம்பர்க்க வைணவம், வல்லபம் என்பனவே அவை. சைதன்யர், நிம்பர்க்கர், வல்லபர் என்ற வைணவ அருளாளர்களின் பெயர்களால் இவை அழைக்கப்படுகின்றன. இவற்றை விடத் தமிழ் நாட்டில் வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகளும் காணப்படுகின்றன. வடகலை என்பது வடமொழி வேதசாத் திரங்களையே பிரமாணங்களாகக் கொண்டு ஒழுகுபவர்களைக் கொண்ட பிரிவு. தென்கலை என்பது தமிழ் நாட்டு ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்களைப் போற்றி அவற்றின் வழிநடப்போரைக் கொண்ட பிரிவு. விட் டுணுவின் திருவடிகள் இரண்டையும் தவிர உயிர்கட்கு வேறு கதியில்லை என்பதைக் குறியீடாகக் காட்ட அவனின் திருவடிகளைப் போல இடும் நாமத்திலும் வடகலையார் தென்கலையார்களுக்கிடையே வேறுபாடு காணப்படும்.

## வைணவ பத்தி நெறி

''நான்'' ''எனது'' என்னும் அகப் பற்று (அகங்காரம்), புறப்பற்றுக்களை (மமகாரம்) ஒழித்து, தனது வலியில்லா நிலையினை உணர்ந்து இறைவனின் பாதார விந்தங்களைச் சரணுகதி அடையும் தன்னி ழப்பு நிலையே பத்திக்கு வித்தாகும். அதுவே முத்திக்கு வழியுமாகும். தன்னை மறந்து தலைவன்தாள் பற்றி அவனிலேயே பித்துக் கொள்ளும் இன்ப அன்பினை வைணவர் ''பிரபத்தி'' என அழைப்பர்.

இவ்வாறு அவனிலே பிரபத்தி பண்ணு வோரை மூவகையாகப் பிரிக்கலாம்.

1. **சாமானிய மக்கள்** - சடசம்பந்தத் தால் அறியாமைமிக்கு, சத்தியற்றவர்க ளாய், இறையினை அடையும் சாதனைகளில் பழகமுடியாது இறைவனிடம் தம் பாரத்தை ஒப்புவிப்பவர்கள்.

2. **ஆசாரியர்கள்** - ஆன்மாவின் உண் மைநிலை இறைவனுக்கு வசமாயிருத்தலே என உணர்ந்தும், ஞானத்தைப் பெறும் முயற்சியில் சாதனைத்திறன் பெற்றிருந்தும், இறைவனின் திருவுருவ தரிசனத்திலே மாறுக்காதல் பூண்டு வேறு கதியின்றி இறை வனிடம் தம்மை ஒப்புவிப்பவர்கள்.

3. **ஆழ்வார்கள்** - பகவானை நினைந்த உடனேயே பேரன்புமிக்கவர்களாய் அப்பே ரன்பால் உணர்ச்சி மிகுதியாக, யோகசாத னைகளில் ஈடுபடமுடியாத அசத்திநிலையில் அவனைத் தஞ்சமாகப் பற்றிக் கிடப்பவர் கள்.

இம்மூவகையாரதும் பொதுத்தன்மை யாதெனில் ''நான் செய்கிறேன்'' என்ற தன்னுணர்வின்றி எப்பொழுதும் ''நான்'' என்பதை ஒழிக்க முயலும் முயற்சியே. இவ் வாறு முயல்கையில் இத்தகையோருக் காக எளியனாகிக் கீழிறங்கிவந்து தன்முயற் சியால் பகவான் இவர்களைத் தன் அடிக ளிலே சேர்த்துக் கொள்கிறுன். அஃதாவது முத்திக்குச் சாதனம் இறைவனேயாக வேறுசாதனம் வேண்டாத நிலையே பிரபத் தியாகும்.

பிரபத்தி பற்றிய பின்வரும் கூற்று உளங்கொள்ளத்தக்கது. ''பிரபத்தியில் உபாயமும் (வழியும்) அதனுல் அடையப் படும் உபேயமும் (முடிவும்) ஒன்றுகின்றன. வேறு சாதனங்களைக் கொண்டு இறைவனை உபேயமாகப் பற்றுவார் சிலர். இறைவனை உபாயமாகக் கொண்டும் தமக்குவேண்டும் உலக இன்பம் முதலாக முத்தியின்பம் ஈறு

கவுள்ள பலவகை இஷ்டங்களையும் உபேயங்களாகக் கொண்டும் அவற்றைப் பெறுவார் சிலருளர். ஆனால் பிரபன்னரோ (பிரபத்தி செய்பவர்களோ) இறைவனையே உபாயமாகப் பெறுவர். இப்பிரபத்தி நெறியில் முயற்சி செய்பவனும் இறைவன். முயற்சியின் பயனை அடைபவனும் அவனே. இறைவன் தனக்கும் ஜீவனுக்குமுள்ள உறவை நினைந்து, தனது உடைமையாகிய ஜீவன் பிறவிப் பெருங்கடலில் அமிழ்ந்து கிடப்பதைப் பொறுது தானே முயன்று அவற்றை வெளியேற்றித் தானே இன்புறுகிறான்; ஜீவன் தன்னைக் கருவியாகவே நினைக்கின்றான்; இறைவனால் ஆட்டுவிக்கப்படும் ஒரு கருவியாயினும் தான் அறிவுடையவனாதலில், ஆட்டுவிக்கப்படுவதை உணர்ந்து இறைவனது மகிழ்ச்சிக்கென்றே தன்னை அமைத்துக் கொண்டு இன்பமடைகிறான். (இவ்விடத்தில் சைவசித்தாந்தம் குறிக்கும் மர்க்கட சம்பந்தம் (குரங்கு - குட்டி தொடர்பு) மார்ச்சார சம்பந்தம் (பூனை-குட்டி சம்பந்தம்) என்பவற்றை ஒப்புநோக்கலாம். (அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' —மாணிக்கவாசகசுவாமிகள்)

பத்தியின் முதிர்ச்சியிலேயே பிரபத்தி உண்டாகும் என்பது வைணவத்தின் முடிவு. இந்தப் பிரபத்திநிலையிலே ஒருவன் செய்ய வேண்டுவன பின்வருமாறு :-

i. **சிரவணம் :** பத்திசிரத்தையோடு புராணம் முதலியவற்றைக் கேட்டல்.

ii. **கீர்த்தனம் :** பத்தி ததும்பப் பகவானைப் பாடுதலும், புகழ் கூறுதலும்.

iii. **ஸ்மரணம் :** இறைவன் நாமத்தை ஓதுதலும், அவனது ரூபத்தையும் குணங்களையும் இடைவிடாது நினைத்தலும்.

iv. **பாதஸேவனம் -** குருவின் பாதங்களில் தொண்டு பூணல்.

v. **அர்ச்சனம் -** இறைவனது திருவடிவங்களுக்குப் பூசை செய்தல்.

vi. **வந்தனம் -** தெய்வங்கள், குரு, சாதுக்கள், அடியார்கள் (பாகவதர்கள்), நல்லோர் ஆகியோரை வணங்குதல்.

vii. **ஆத்ம நிவேதனம் -** ஆத்மாவை இறைவனிடம் ஒப்புவித்தல்.

இவற்றோடு கூடிப் பாடுதலாகிய பஜனையும் மந்திரம் செபித்தலாகிய உபாசனையும் (''ஓம் நாமோ நாராயணாய - அட்டாட்சரமந்திரம்) செய்தலும் பத்தர்களின் இடைவிடாப் பணிகளாகும்.

பகவானை ஆண்டானாகவும் தன்னை அடியவனாகவும் பாவனைபண்ணும் தாஸ்ய பாவம், அவனைத் தந்தை அல்லது மகனாகப் பாவிக்கும் வாத்ஸல்யபாவம், நண்பனாகக் கொள்ளும் ஸக்ய பாவம், அவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கற்பிக்கும் மதுரபாவம் என்னும் பாவனைகளும் பத்தி முதிர்ச்சியின் வெளிப்பாடுகளே.

இவ்வாறு பத்திநெறியிலே அதிதீவிர பக்குவம் அடைந்த பாகவதனில் (அடியவனில்) பின்வரும் குணவியல்புகள் காணப்படும்:

1. உலகியலில் லாப நட்டங்களைப் பொருட்படுத்தாமை.
2. உலகியலிலே காலத்தைப் போக்காது எந்நேரமும் சாதனையில் ஈடுபடல்.
3. உலகப் பற்றின்மை.
4. புகழ்ப்பற்றின்மையும் தன்னைத் தாழ்த்தலும்.
5. பகவான் கருணைபுரிவான் என்பதில் உறுதியான நம்பிக்கை.
6. இறைவனோடு கலப்பதில் பெருவேட்கை.
7. இறைநாமத்தை ஓதுவதில் பேரவா.
8. அவனது கல்யாண குணங்களை எடுத்துரைத்தலில் பெருவிருப்பு.
9. இறைவனது லீலைகள் நடந்த புனிதத் தலங்களில் தானும் வாழ்வதிற் பேராசை.

## அவதாரக் கோட்பாடு

''நல்லோரைக் காக்கவும் கொடியோரை அழிக்கவும் தருமத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்''

என்பது, பகவான் பகவத்கீதையிலே கூறியதோர் கூற்று. அவதாரம் என்பது கீழிறங்கல் எனப் பொருள்படும். உயிர்கள் மீது கொண்ட பேரருள் காரணமாக விட்டுணு உலகிலே அவதரிக்கின்முன் என்பது வைணவரின் உறுதியான நம்பிக்கை. அவனின் அவதாரங்கள் எல்லாமாகப் பத்து என்பதும் அவற்றுள் ஒன்பது அவதாரங்கள் நிகழ்ந்து முடிந்தன என்பதும் இறுதி அவதாரம் நிகழவுள்ளது என்பதும் வைணவர் கொண்ட கருத்தாகும். மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), நரசிம்மம் (உடல் மனிதஉரு, தலை சிங்கஉரு), வாமனன் (குள்ளன்), பரசுராமன், பலராமன், இராமன், கிருஷ்ணன் என்பன இதுவரை விட்டுணு எடுத்த அவதாரங்களாகும். "கல்கி" என்னும் அவதாரம் இனி எடுக்கவுள்ள அவதாரம். நீர்வாழ் உயிரியிலிருந்து தொடங்கிப் படிப்படியான வளர்ச்சிநிலையில் தெய்வ நிலைவரை இந்த அவதாரங்கள் பரிணமம் அடைந்து செல்வது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வோர் அவதாரமும் தேவர்கள் மானிடர் ஆகியோரின் இடர்களைப் போக்கவே எழுந்தவை எனப் புலப்படுத்த வரலாறுகளும் உள்ளன. இவற்றுள் இராமாவதாரமும் கிருஷ்ணவதாரமுமே அடியார்களின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தவையாகும். ஆலயங்களில் இவ்விரு அவதாரத் திருமேனிகளும் முதன்மை பெற்று வழிபாட்டிற்கு உரியனவாய் விளங்குவதோடு இராமாயணம், பாரதம் ஆகிய பேரிதிகாசங்களும் தோன்ற வழிவகுத்தன. பல்லாயிரக்கணக்கான தோத்திரப் பாசுரங்களும் பாடல்களும் இராமனையும் கிருஷ்ணனையும் துதிப்பனவாக, இந்தியாவின் எல்லா மொழிகளிலும் தோன்றியுள்ளமையும் தோன்றிக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கன.

இங்கு அவதாரங்கள் பத்து எனக்குறிக்கப்பட்ட போதிலும் புராண மரபுப்படி அவை கணக்கில் அடங்காத பல என்ற கருத்தும் நிலவுகின்றது. இருடிகள், மனுக்கள், தேவர்கள், மனுவின் புத்திரர்கள் யாவரும் விட்டுணுவின் அம்சங்களே என்று கொள்ளும் பொழுது அவதாரங்கள் அளவிறந்தனவாகின்றன.

இவ்வகையில் அவதாரங்களை மூவகையாகப் பிரித்தும் நோக்கலாம். அவதாரம், ஆவேசம், அம்சம் என்பனவே அவை. கடவுளின் முழு வல்லமையுடனும் தோற்றுவன அவதாரங்களாகும். தற்காலிகமாகத் தன் சத்தியினை இறைவன் ஓர் உருவிலே புகுத்தி நோக்கம் முடிந்ததும் மீட்டுக் கொள்வது ஆவேசமாகும். நரசிம்மம், வாமனன் முதலியன ஆவேசத்துள் அடங்கும். கடவுளின் கருவிகளாய் உள்ளதும் அவ்வப்போது தோன்றித் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனம் செய்வதும் அம்சமாகும். சங்கு, சக்கரம் என்பவற்றின் தோற்றமே "அம்சம்" எனப்படும்.

## விட்டுணுவின் ஆலயங்கள்

தமிழகத்தில் விட்டுணுவின் ஆலயங்களுக்குப் பொதுப் பெயர் "விண்ணகரங்கள்" என்பது. சமயகுரவர்கள் பாடியதாலே "பாடல்பெற்ற தலங்கள்" எனப்போற்றப்படும் சிவாலயங்கள் போல, ஆழ்வார்கள் பன்னிருவராலும் பாடப்பட்ட விட்டுணுத் தலங்கள் எழுபதாகும். இவற்றை "மங்களா சாசனம் பெற்ற பதிகள்" என அழைப்பது வைணவமரபு. சோழநாட்டில் நாற்பதும், பாண்டிநாட்டில் பதினெட்டும் சேர நாட்டில் பதின்மூன்றும், தொண்டைநாட்டில் பதினுன்கும், வடநாட்டில் பன்னிரண்டும் நடுநாட்டில் இரண்டுமாக அமைந்துள்ள நூற்றெட்டு வைணவத் தலங்களிலே முப்பத்தெட்டே மங்களா சாசனம் பெருதவை.

இலங்கையிலே வைணவர் என்று குறித்துச் சொல்லக்கூடிய நிலை இல்லாவிடினும், வைணவம், சைவம் போன்று தனித்ததோர் சமயமாகக் கடைப்பிடிக்கப் படாவிடினும் விட்டுணு ஆலயங்கள் சில இருப்பதும் சைவர்களும் அங்குச் சென்று வழிபடுவதும் சிறப்பித்துச் சொல்ல வேண்டியனவாகும். யாழ்ப்பாணத்தில் வண்ணுர் பண்ணையிலுள்ள ஸ்ரீவேங்கடேசவரதராசப் பெருமாள் கோயில், வல்லிபுரத்தில் அமைந்த, வல்லிபுர ஆழ்வார் கோயில், பொன்னுலையிலே திகழ்கின்ற வரதராசப் பெருமாள் கோயில் என்பன குறிப்பிடத்

தக்கவை. இவற்றைவிடக் கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் சிறுச்சிறு விட்டுணு ஆலயங்கள் உள்ளன. சில சிவாலயங்களிலும் சில முருகனாலயங்களிலும் விட்டுணு பரிவாரதெய்வமாக எழுந்தருளியிருப்பதும் இலங்கையிலே காணத்தக்கது. இங்குச் சைவ வைணவ வேறுபாடு கவனத்திற்குள்ளாவதில்லை.

## வைணவ பத்தி இயக்கம்

திருமாலின் பத்தியிலே ஆழ்பவர்களை ஆழ்வார்கள் என்ற சிறப்புப் பெயரால் தமிழில் அழைப்பதும் பகவான் மீது பத்திப் பித்துக் கொண்டு பாடித்திரியும் தொண்டர்களை 'பாகவதர்கள்' என்று வடமொழியில் குறிப்பதும் வழக்கம். திருமாலின்மீது பத்தியானது வெள்ளமாகப் பெருகி ஓடிய காலம் பல்லவர்காலமாகும். சங்ககாலத்திலேயே (கி. பி 100 - 300) திருமாலை மாயோன் என்ற பெயரில் வழிபட்டமையை முன்னர்க்கண்டோம். சங்கமருவிய காலத்தின் (கி. பி. 300 - 600) இறுதிப் பகுதியில் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய மூவாழ்வார்கள் தோன்றித் திருமால்மீது அந்தாதியாகிய பிரபந்தம் பாடி அவன் மீது பத்தி கொள்ளத் தமிழ்மக்களைத் தூண்டிவிட்டனர். இத்தூண்டுதலின் உச்சகட்டத்தினை நாம் பல்லவர் காலத்திலே (கி. பி 600 - 900) தெளிவாகக் காண்கின்றோம். பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய ஒன்பதின்மர் தோன்றித் தமது பத்திப்பாசுரங்களின் உணர்ச்சிப் பிரவாகத்திலே தமிழ்நாட்டின் வைணவ மக்களைத் திளைக்கவைத்தனர். சைவசமய குரவர்கள் போலவே பரசமய கண்டனம் வாயிலாகவும், ஆலயவழிபாடு, அடியார் வழிபாடு வாயிலாகவும் வைணவபத்தி நெறியைப் பத்தி இயக்கமாக வளர்த்தனர்; தமிழுக்கு வளத்தையும் தமிழிசைக்கு வனப்பையும், தமிழ்க் கலைகளுக்கு உயிரையும் ஊட்டினர். தமிழின் பத்தி இலக்கியத்திற்கு ஆழ்வார்களின் பங்களிப்பு, சமானியமானதன்று. நம்பியாண்டார்நம்பி தேவார திருவாசகங்கள் முதலியவற்றைத் திருமுறைகளாகத் தொகுத்துத் தந்தது போல, நாதமுனிகள் என்ற வைணவப் பெரியார் ஆழ்வார்களின் பாசுரங்களை 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்ற பெயரில் தொகுத்துத் தந்துள்ளார்.

விசிட்டாத்துவித தத்துவத்தை உருவாக்கிய ஸ்ரீராமானுஜர், வடநாடு சென்று தம் தத்துவத்தோடு பத்தி நெறியையும் அங்குப் பரப்பித் தம் வழியிலே ஒரு பாகவத பரம்பரையினை உருவாக்கிய காலத்திலிருந்து, வடநாட்டிலே பத்தி இயக்கம் வீறு கொண்டு எழுவதாயிற்று. இராமாநந்தர், கபீர்தாசர், சைதன்னியர், ஜெயதேவர், துளசிதாசர், துக்காராம், மீராபாய் முதலான பரம பாகவதர்கள் வட நாட்டின் பல பகுதிகளிலும் தோன்றிச் சமஸ்கிருதத்திலும், தமது தாய்மொழிகளிலும் விட்டுணுமீது பத்திப்பாடல்களைப் பெருந்தொகையாய் இயற்றியும் பத்தி மார்க்கத்தை மக்களிடையே தமது தூய அன்பு வாழ்க்கை முறையினால் பரப்பியும் பெரும்பணி புரிந்தனர். இதனை விபுலாநந்த அடிகள் 'தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வட நாட்டிற் பரவிய வரன்முறை' என்ற தமது கட்டுரையிலே மிக விரிவாக விளக்கியுள்ளார். வடநாட்டுப் பத்தி இயக்கத்தைப் பாகவத இயக்கம் எனவும் இவ்வியக்கத்தின் முன்னணியில் நின்றோரின் பாடல்களைப் பாகவத இலக்கியம் எனவும் அழைப்பது மரபு.

இவ்வாறு பழைமையும், தத்துவச் செழுமையும், பத்திப் பிரவாகமும் கவர்ச்சியும் பொருந்தி இந்து சமயத்தின் உயிர்த்துடிப்பு வாய்ந்த கூறுகளுள் ஒன்றாக வைணவம் நிலைத்து வாழ்கின்றது.

## ஆதார நூல்கள்


1. SANKARA AND SHANMATA — 1969 M. L. J. Press, Private Ltd, Madras.
2. இந்திய தத்துவ ஞானம் — (முதற்பதிப்பு) 1960 கி. லக்ஷ்மணன் M. A.
3. இலக்கியக் கட்டுரைகள் — 1973 (கல்வி வெளியீட்டுத் திணைக்களம்) உயர்திரு. விபுலாநந்த அடிகள்.
4. பரிபாடல் சொற்பொழிவுகள் — Reprint 1961, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. திரு அருள் மொழி — 1969 ஸ்ரீராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை.
6. The Vedanta Kesari — 1961 Sri Ramakrishna Math, Mylapore, Madras.
7. புகழ் மணக்கும் வைணவத் தலங்கள், புலவர் சி. முத்துப்பிள்ளை, பைலட் பப்ளிக் கேஷன்ஸ், சென்னை.
8. ஆழ்கடலான் — சிங்கை ஆழியான் - 1983, சுன்னுகம், வேலழகன் வெளியீடு.


O-O-O

---

## கீதைப் பேருரைகளிலிருந்து.....

கர்மயோகியின் காரியத்தினுல் இன்னும் ஒரு சிறந்த பயனும் விளைகிறது. சமூகத்திற்கு அது ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது. சமூகத்திலிருந்து டம்பமும் மோசடியும் நீங்க உதவுகிறது. ஞானி எதுவும் செய்யாது உட்கார்ந்துவிட்டால் அவனைப் பார்த்து பிறரும் கைகட்டிச் சும்மாவிருக்கத் தொடங்குவர். இத்தகைய நிலை கொடிது. இதனுல் வேஷமும் ஆடம்பரமும் வளரும். மகாபாரத யுத்தத்தில் பொழுது சாய்ந்ததும் எல்லோரும் மாலை வழிபாடு செய்யப் போய்விடவும், கிருஷ்ணபகவான் ரதத்தின் குதிரைகளை அவிழ்த்துவிட்டு, அவைகளுக்குத் தண்ணீர் காட்டி, கொள்ளு வைத்து, உடலைத் தேய்த்து, உடலிலுள்ள உண்ணிகளை அகற்றுகிறுன். கர்மயோகியாம் கண்ணன் உலகிற்கு காட்டும் வழி இது.

கர்மயோகி தன் காரியத்தைப் பிறரைவிடச் சிறப்பாகச் செய்வான். ஏனெனில், காரியமே அவனது கடவுள் வழிபாடும் பூஜை நியமங்களுமாகும். கர்மயோகிகளின் கடவுள் குதிரைகளுக்கு உடம்பைத் தேய்த்துவிட்டுத் தீனி வைக்கிருர். ராஜசூய யாகத்தில் எச்சில் இலைகளை அள்ளுகிருர்; காட்டில் மாடு மேய்க்கப் போகிருர்! கர்மயோகியாம் இக்கடவுளைப் பின்பற்றி ஒருவர் தோட்டவேலை செய்பவராகவும், ஒருவர் நெல் குற்று பவராகவும், ஒருவர் வியாபாரியாகவும், ஒருவர் நாவிதராகவும், இன்னொருவர் சக்கிலி யாகவும் காரியம் செய்துகொண்டே முக்தி பெற்றிருக்கிருர்கள்.

# பௌத்த மதம்

**கலாநிதி. சி. க. சிற்றம்பலம்**
*தலைவர் - வரலாற்றுத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

கி. மு. 6 ஆம் நூற்றுண்டு உலக வரலாற்றில் கலாசாரத் துறையில் ஒருவித விழிப்புணர்ச்சி அலை மோதிய காலமாக அமைகின்றது. கிரேக்கத்தில் சோக்கிரற்றீசும், சீனுவில் கொன்பியூசசும், இந்தியாவில் மகாவீரர், புத்தர் போன்ற மகான்களும் தோன்றி அன்றைய சமூகத்தில் புதிய சிந்தனைச் சுடர்களைப் பரப்பினர். இந்தியாவில் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் (கி. மு 566 இல்) தோன்றிய புத்தரின் போதனைகள் அன்றைய சமுதாயத்திற்கு மட்டுமின்றி இன்றைய காலகட்டத்திற்கும். மிகமிகப் பொருத்தமான தொன்ருகவே காணப்படுகின்றது எனலாம். புத்தர் இந்துக் குடும்பத்தில் பிறந்து, இராசபோகங்கள் பலவற்றை அநுபவிக்கும் வாய்ப்பும் பெற்றவர். அத்துடன் அக்கால சமூகத்தில் பிராமணர் ஆதிக்கம் தலைதூக்கிய காலகட்டத்தில் புத்தரின் வகுப்பினராகிய சத்திரியர், தமது ஆதிக்கத்தை அரசியல், பொருளாதார, கலாசாரத் துறைகளில் முன்னிலைப் படுத்திச் செயற்பட்ட காலம்கூட. இந்து மதமோவெனில் பல் வகைசூழல்கள் மத்தியிலே தத்தளித்த காலமாகவும் புத்தர் காலம் விளங்கியது. பிராமண குலத்தவரால் முன்னிலைப் படுத்தப்பட்ட இம் மதத்தில் ஆண்டவனின் அநுக்கிரகத்தை அடைவதற்குக் காட்டப்பட்ட மார்க்கம், செலவுகள் நிறைந்த கிரியைகளும், சடங்குகளும், வேள்விகளும் நிறைந்த ஒன்ருகத் திகழ்ந்தது. இதனுல் மக்கள் மத்தியில், மக்களுக்கு நிலையான நிம்மதியைத் தருவதற்கு உருவாகிய மதம், ஒரு சுமையான பொருளாக, தெளிவான சிந்தனையைக் கொடாத ஒன்ருகத் திகழ்ந்தது. இதனுல் திசை தெரியாது சென்று கொண்டிருந்த இந்து மதத்தில் காணப்பட்ட ஒழுங்கீனங்களைக் களையும் அதே நேரத்தில் செலவீனமற்ற ஒரு ஒழுக்க நெறியை மக்கள் முன்வைக்க வேண்டுமென்ற தேவையும் அக்காலத்திலிருந்தது. இதனுல் புத்த மதத்தைச் சமயம் என்று கூறுவதற்குப் பதிலாக, ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒரு வாழ்க்கை நெறி என்று கூடக் கூறிவிடலாம். இம் மதபோதனைகளைப் புத்தர்தான் போதித்தாலும் கூட, இகவாழ்க்கையில் நன்ருக வாழும் முறைகளை அவர், தான் பெற்ற அநுபவ வாயிலாக எடுத்துச் சொன்ஞரே தவிர, பரத்தைப் பற்றிய சிந்தனையில் மக்களை நாட்டம் கொள்ளும்படி தூண்டவில்லை. அவரின் நெறியில் தனி ஒருவனின் கையில் தான் அவனது முன்னேற்றமும் தாழ்வும் உண்டு என்பதும், அவன் தலைவிதியை இன்னெருவர் நிர்ணயிக்க இயலாது என்பதும், தனி ஒருவனின் மனதில் ஏற்படும் மாற்றம் காலக்கிரமத்தில் முழுச் சமுதாயத்தையுமே மாற்றிச் சீர்படுத்திவிடும் என்பதும் விரவிக்காணப்படுகின்றன.

இதனுல் தனிமனிதனின் வாழ்க்கை பற்றி, தான் தவக்கோலம் கொண்ட நாளிலிருந்து அலசி ஆராய்ந்தார். மனிதன் வாழும் உலகிற்கு மூன்று இலக்கணங்களைக் கொடுத்தார். உலகு துன்பம் நிறைந்தது, நிலையில்லாதது, உயிரில்லாதது என்பனவே இவர் கொடுத்த விளக்கங்களாகும். இவற்றைச் சரியாக விளங்கிக் கொள்ள நான்குவகை உண்மைகளையும், எட்டுவித வழிவகைகளையும் எடுத்தியம்பினுர். இந் நான்கு வகை உண்மைகளாவன: உலகம் துன்பமயமானது; இத் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிதல் அவசியமாகின்றது பின்னர் துன்பத்தை

அறுத்தெறிவதற்கு பாடுபடுதலும் அவசிய மாகின்றது. இறுதியாகத் துன்பத்தை அறுப்பதற்கான ஒரு சீரிய வழியைக் கண்டு பிடித்தலாகும். இவைதான் பௌத்தம் போதிக்கும் நான்கு பேருண்மைகளாகும்.

இந்நான்கு பேருண்மைகளைக் கூறிய புத்தர் துன்பத்தை அறுப்பதற்கான சீரிய வழியை சிற்றின்ப அநுபவத்தை நாடுவதனாலோ அன்றித் தன்னைத்தானே வருத்திக் கொள்வதினாலோ அடைய முடியாதெனக் கூறி இவை இரண்டுக்கும் நடுவழியாக அமைந்துள்ள எண்வகை மார்க்கங்களின் மூலமே அடையலாமெனவும் கூறினார். இதனால் புத்தர் போதனைகளை நடுவழிப்போதனைகள் (Middle Path) என்று பெயர் பெற்றன. புத்தர் காட்டிய எண்வகை மார்க்கங்களாவன: நல்ல நோக்கம், நல்ல ஆசை, உண்மைபேசுதல், நல்நடத்தை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கவனம் நற்சிந்தனை ஆகியவையாகும். இதனால் பொதுவாக மக்கள் வாழ்க்கையில் இயல்பாகக் காணப்படும் துன்பத்தை அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள அவாவை அறுப்பதின் மூலம் வெற்றிபெற்று ஒழுக்கத்தின் வழுவாத நல்வாழ்க்கையை நடாத்துவதன் மூலம் ஒருவன் வீடு பேற்றை (நிர்வாணத்தை) அடையலாம் என்றார். இந்து மதத்தில் காணப்படும் கர்மம், மறுபிறப்பு ஊழ்வினை, பாவ புண்ணியம் போன்ற கருத்துக்களும் பௌத்தத்தில் உண்டு. இச் சந்தர்ப்பத்தில் புத்தர் பிறந்து, ஞானம் பெற்று வீடு பேறடைந்த தினமாகிய ''வெசாக்'' தினம் இந்துக்களுக்குப் புனிதமான நாளாகிய வைகாசி விசாகத்தில் வருவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. விசாகத்தில் தான் ஸ்கந்தன் உதயம் பெற்றான். புத்தர் கூட விஷ்ணுவினது பத்து அவதாரங்களில் ஒன்றாக இந்துக்களால் மதிக்கப்படுகின்றார்.

புத்தர் காட்டிய வழி சமூகத்தில் எல்லா மட்டத்தினரின் மனப்பக்குவநிலைக்கேற்ற விதத்தில் அமைந்திருந்தமை இதன் மற்றொரு சிறப்பமிசம் ஆகும். சாதாரண இல்லறத்தாருக்கும், இவ் இல்லறத்தாரில் சற்று உயர்நிலையில் முதிர்ச்சி பெற்றோருக்கும் துறவிகளுக்குமென இப்போதனைகள் கோடிட்டுக் காட்டப்பட்டன. சாதாரணமாக இல்லறத்தார் பஞ்ச சீலங்களை அல்லது ஐந்து ஒழுக்கங்களை அநுசரித்தாற் போதும். அவையாவன: எவ்வுயிர்க்கும் தீமை செய்யாதிருத்தல், களவு செயலைத் தவிர்த்தல், கற்புவழிநின்று சிற்றின்பத்தைத் துய்த்தல், உண்மை பேசுதல், மதுபானத்தை விலக்கல். இல்லறத்தாரில் முதிர்ச்சி பெற்றோர் தமது முதிர்ச்சிக்கேற்ப மேற்கூறிய ஐவகை ஒழுக்கங்களோடு மேலும் மூன்றைச் சேர்த்து ''அஷ்டசீலம், அல்லது எட்டு ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்கும் வண்ணம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இம் மூன்று மேலதிக ஒழுக்கங்களாவன: இரவில் தூய்மையான உணவை மிதமாக உண்ணுதல், பூ, சந்தனம்போன்ற வாசனைப் பொருள்களை நுகர்தலைத் தவிர்த்தல், பஞ்சணை போன்ற வசதிகளை நீக்கித் தரையில் பாயில் துயிலல் என்பனவாம். இவற்றோடு துறவிகளுக்கு மேலும் இரண்டு சீலங்களைச் சேர்த்து தசசீலம் என்னும் பத்து ஒழுக்கங்களை அறிவுறுத்தியுள்ளார். அவையிரண்டும் துறவிகள் இசை நாடகம் போன்ற ஐம்புலன்களுக்கு மகிழ்வைத்தரும் நிகழ்ச்சிகளைத் தவிர்த்தல், பொன், வெள்ளி நாணயங்களைத் தொடாதிருத்தல் என்பனவாகும். பிக்குவானவர் தசசீலங்களின் வழி ஒழுகும்போது ஆசையை அறுத்து உலகியலை வெறுக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டுகின்றது. இத்தகைய வாய்ப்பு அவரைச் சமாதிநிலைக்கு இட்டுச் செல்லும். இச் சமாதி நிலையிற் கூட நிரந்தரமாக மேற்கூறிய ஆசைகள் அகலா. நிரந்தரமாக மேற்கூறிய ஆசைகள் அகன்ற பேரின்ப நிலை, ஞானநிலையிற்றான் கிட்டும்.

பௌத்தத்தின் அச்சாணியாக மும்மணிகள் திகழ்கின்றன, அவையாவன புத்தபிரான், அவர் போதித்த அறநெறி, சங்கம் என்பவையாகும். புத்தரின் போதனைகளைத் தமது அன்றாட வாழ்க்கையிற் சாதனைகளாக்கும் பணி இம்மதக் குருமார்களாகிய பிக்குகளிடம் தான் விடப்பட்டது. ஒரு வருடத்தில்

சட்டுமாதங்களுக்கு நிரந்தரமாக ஓரிடத்தில் தங்காது மக்களைத் தேடி அறப் போதனைகளைப் போதித்து, எஞ்சிய நான்கு மாதங்களில் அஃதாவது மழைக்காலத்திற்றான் ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்கி தர்மம் பற்றி ஆராயவும், தமது சரி பிழைகளை அலசவும் இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மிகவும் எளிமையான வாழ்வே இவர்களது இலட்சியமாகும். உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உறங்கும் இடம் ஆகியவற்றில் மட்டுமன்றி ஏனையவற்றுள்ளும் எளிமையாக வாழ்ந்து உயர்ந்த சீலங்களைக் கடைப்பிடிக்குமாறு இவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பெண்களும் பௌத்த சங்கத்தில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் வாழ்வதற்கெனத் தனியான வசிப்பிடங்களும் உண்டு.

சாதாரணமாகப் பௌத்தர்கள் தமது ஆன்ம ஈடேற்றத்திற்காக மேற்கூறிய மும்மணிகளை இறுகப் பிடித்தல் அவசியமாகின்றது. இவற்றைச் சிக்கெனப் பிடித்து, பஞ்ச சீலங்களின் வழி ஒழுகுதலும் அவசியமாகின்றது. பௌத்தம் ஒருவன் பிறப்பால் அன்றி ஒழுக்கத்தாலே உயர்ந்தவன் ஆகின்றான் எனப் போதிக்கின்றது. இதனால் சாதியில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கோட்பாட்டுக்கே பௌத்தத்தில் இடமில்லாவிட்டாலும் கூட, நிஜவாழ்வில் பௌத்தர்களால் மட்டுமன்றி, பௌத்த சங்கத்தினரால் இந்நெறி கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரிய விடயமாக விளங்குகின்றது. சாதிப்பாகுபாட்டைக் கண்டித்த புத்தர், தாம் ஏற்படுத்திய அமைப்பில் அதனைப் புக அனுமதிக்காவிட்டாலும் கூட சாதிக்கெதிராக எவ்வித போராட்டத்திலும் ஈடுபடவில்லை. இவ்வாறேதான் மிருகபலி, வேள்வி ஆகியனவற்றையும் கண்டித்தார். இதனால் தலைசிறந்த அகிம்சாமூர்த்தியாகப் புத்தர் விளங்குகின்றார் என்றால் அது பிழையாகாது. எவ்வாறாயினும் இன்றைய உலகில் புத்த மதம் செல்வாக்குடன் விளங்கும் ஈழம் தென்கிழக்காகிய நாடுகளில் இரத்தக்களரி நடைபெறுவதை நோக்கும் போது புத்தரின் கருத்துக்கள் ஏட்டளவில் மட்டும்தான் இந்நாடுகளில் காணப்படுகின்றன எனவும், உண்மையிலே மக்கள் மனதை மாற்றவில்லை என்றும் எண்ணத் தூண்டுகின்றது. சுருங்கக் கூறின் மன்னுயிரெல்லாம் தன்னுயிர் போல மதிக்கும் ஓர் ஒழுக்க நெறியே பௌத்த மதமெனலாம்.

பௌத்தம் இந்தியாவில் தோன்றினாலும் இன்று அது உலக மதங்களில் ஒன்றாகிவிட்டது. ஆனால் அதே இந்தியாவில் இன்று பௌத்தம் வீழ்ச்சி அடைந்து விட்டது. புத்தர் தமது எண்பதாவது வயதில் வீடு பேறாகிய பரிநிர்வாணத்தை அடைந்தார். இருபத்தொன்பது வயதிலே துறவு பூண்ட இவர் ஆறு ஆண்டுகள் மேற்கொண்ட கடுந்தவத்தினால், புத்தகயாவில் அரச மரத்தடியில் ஞான ஒளியைப் பெற்றார். புத்தர் என்றால் ஞான ஒளியைப் பெற்றவர் எனப் பொருள்படும். இவரின் இயற்பெயர் சித்தார்த்தர் என்பதாகும். ததாதர் என்பதும் இவருக்களிக்கப்பட்ட இன்னொரு பெயராகும். இதுவும் உண்மையை அறிந்தவர் எனப் பொருள் தந்து நிற்கின்றது. இவரது இன்னொரு பெயராகிய சாக்தர் என்பது சகலகலாவல்லுநர் எனப்பொருள் தருகின்றது. எவ்வாறாயினும் 45 ஆண்டுகள் மக்கள் மத்தியிலே புத்தர் தமது போதனைகளைப் பரப்பினார். இவரது முதற் போதனை இவரது ஐந்து சகாக்களுக்குக் காசிக்கு அருகிலுள்ள சாரநாத்தில் மான் பூங்காவினுள் அருளப்பட்டது. இது தான் தர்ம சாஸ்திர பரிவர்தன சூத்தமாகும்.

புத்தர் பரிநிர்வாணம் அடைந்ததும், அக்காலத்தில் வட இந்தியாவின் தலைநகரமாகிய ராஜகிருகத்தில் மகா கபிசப்ப என்ற குருவானவர் தலைமையில் 500 பௌத்த குருமார் கூடினர். இதுதான் பௌத்த மதத்தின் முதற் சங்கமாகும். இதில் பௌத்த போதனைகள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டன. ஒன்று தர்ம போதனைகள், மற்றது விநய போதனைகள் அல்லது வாழ்வில் அனுஷ்டிக்க வேண்டிய

நெறிவகைகள். இக்குருமாரே தேரவாதிகள் என அழைக்கப்பட்டனர். தேரவாதிகள் என்றால் முதிய பிக்குகளால் அளிக்கப் பட்டவை எனப் பொருள்படும். பிற் காலத்தில் மகாயானம் என்ற பிரிவும் பௌத்தத்தில் தோன்றியது. இச் சங் கத்தின் பின்னர், சமயத்தில் ஏற்பட்ட சலசலப்புக்களைக் களைய இரண்டாவது பௌத்த சங்கம் இந்தியாவில் வைசா லியில் சில நூற்றாண்டுகளின் பின்னர் நடைபெற்றது. மூன்றாவது சங்கம் அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் பாடலி புத்திரத்தில் கூடியது. இச்சங்கமே இந் தியாவின் ஏனைய பகுதிகளுக்கு மட்டு மின்றி வெளி உலகுக்கும் பௌத்தத்தைப் பரப்பும் முயற்சிகளை மேற்கொண்டது. பௌத்தம் இந்தியாவில் இன்று அழிந் தாலும் கூட இந்நாடுகளில் அது வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஈழத்தில் தேவனம்பிய தீசன் காலத்திற் பௌத்தம் கால் வைத்தது. அப்போது இங்கு நிலவிய மதம் இந்து மதமே. பௌத்தம் இந்து மதத்தை அழிக்கவில்லை. மாறாக இந்து அனுஷ்டானங்களைத் தன்னு டன் இணைத்தது. இதற்கு ஒருசில உதார ணங்களைக் கூறலாம்.

பௌத்தர்கள் கடவுளில் நம்பிக்கை அற்றவர்கள். எனினும் சாதாரணமாகச் சிங்கள மக்கள் இந்துக் கடவுளரை வழிபடு கின்றதோடு பௌத்த ஆலயங்களிலும் அவற்றின் வழிபாட்டை அங்கீகரித் துள்ளனர். புதுவருடப்பிறப்பு இந்துக் களுக்கும், பௌத்தர்களுக்கும் பொதுவான நாளாகும். இவ்வாறே தான் கண்டியில் நடைபெறும் ஈழத்துப் பௌத்தர்களது தேசிய விழாவான கண்டிப் பெரகரா கூட, முன்பொருகால் இந்துக்களின் விழாவா கவே இருந்தது. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்திற்றான் (கி.பி 1747 - 1780) இவ் இந்து விழாவிற் பௌத்த சின்னம் உலாவுக்கு வந்தது. காலகதியில் இது பௌத்தரின் பெருவிழாவாகவே மாறியது. எனினும் பௌத்த தந்தம் விழாவிற் கலக்க முன்னர் இவ் விழாவில் விஷ்ணு, ஸ்கந்தன், நாதன் (சிவன்) பத்தினி (அம்பிகை) ஆகிய தெய்வங்களே முக்கிய பங்கெடுத்தனர். இன்று இவ்விழாவில் இவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண் டாலும் கூட முக்கியத்துவம் தந்த தாது விற்கே அளிக்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சி ஒன்றே, எவ்வாறு பூர்வீக இந்துக்கள் பௌத்தர்களாக மாறினர் என்பதை எடுத்தியம்புவதோடு, பௌத்தம் இம் மாற்றம் பெற்ற பின்னர் படிப்படியாகத் தனது செல்வாக்கை இந்து மதமீது திணித்ததையும் எடுத்துக் காட்டுகின்றது. பெரகரா என்பது "வீதிஉலா" என்ப தனையே குறித்து நிற்கின்றது.

பௌத்தமதம் இன்று சர்வதேச மத மாகி விட்டது. எனவே இது ஒரு மொழி மட்டும் பேசுவோர்க்குரிய மதமன்று. சிங்கள மக்களைப் போல் தமிழ் மக்களும் ஒரு கால் பௌத்தர்களாக இருந்ததற் கான சான்றுகள் உள. தமிழகத்தில் நாயன் மார்களும், ஆழ்வார்களும் ஏற்படுத்திய பக்தி இயக்கம் தான் அங்கு பௌத்தத்தை நிலை கொள்ளாது தடுத்தது. தமிழ்நாட்டில் பௌத்தம் நிலைபெற்றிருந்ததற்கான இலக்கிய, கல்வெட்டு, கட்டிடச்சான்றுகள் உள. மணிமேகலை, சிலப்பதிகாரம், குண்டலகேசி, நீலகேசி போன்ற நூல்களில் பௌத்த கோட்பாடுகள் பேசப்படுகின்றன. தமிழகத்தின் மிகப்பழைய கல்வெட்டுக்க ளான பிராமிக்கல்வெட்டுக்களில் பௌத்தம் பற்றிய குறிப்புண்டு. தமிழ் நாட்டிலுள்ள காஞ்சிபுரம், காவேரிப்பூம்பட்டினம், நாகபட்டினம் ஆகியவற்றில் பௌத்த வழி பாடுகள் உள. ஈழத்துப் பௌத்த குருமார் இவ்விடங்களோடு கொண்டிருந்த தொடர்பினை மகாவம்சம் உரைக்கின்றது.

ஈழத்திலுள்ள மிகப்பழைய கல் வெட்டுக்களானபிராமிக் கல்வெட்டுக்களி லும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் பௌத் தர்களாக வாழ்ந்ததற்கான தடயங்கள் உள. இங்கு ஆட்சி செய்த தமிழ் மன்னர் களிற் சிலர் பௌத்தர்களாக விளங்கியதை சூளவம்சம் கூறுகின்றது. இதற்கான கல்வெட்டுச் சான்றுகள் அநுராதபுரத்தில்

மட்டுமன்றி கதிர்காமத்திலும் உள. இவர் களில் ஒருவர் — புத்ததாஸ — புத்தரின் அடிமை எனவும் தம்மை அழைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களின் காலம் கி.பி 5 ஆம் நூற்றுண்டாகும்.

ஈழத்தில் இற்றைவரை நூற்றைம் பதிற்குமதிகமான தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களிலும் பிறமாவட்டங்களிலும் உள்ளன. இக் கல் வெட்டுக் களில் கணிசமானவை திருக்கோணமலை மாவட்டத்திலுள்ளவை. இங்கே சோழர் காலத்தில் ''இராஜராஜ பெரும் பள்ளி'' என்ற பௌத்த விகாரை சோழ மன்னர் களால் போஷிக்கப்பட்டதை இக் கல் வெட்டுக்கள் உணர்த்துகின்றன. அதுமட்டு மின்றி திரியாயில் சோழ தமிழ் இராணுவப் பிரிவாகிய வேளைக்காரப் படையினரின் தலைவனுகிய கணபதியால் பௌத்த விகாரை போஷிக்கப்பட்டதற் கான கல்வெட்டுச் சான்றுமுள. சோழரின் பின் பொலநறுவையில் ஆட்சி செய்த முதலாவது விஜயபாகு காலத்தில் பௌத் தர்களின் புனிதப் பொருளாகிய தந்த தாதுவைப் பாதுகாக்கும் பணி சோழ இராணுப் பிரிவாகிய வேளைகாரப் படை யிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அநுராதபுரத்திலுள்ள கி.பி 8ஆம் 9 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இக் கல்வெட்டில் ''நான்கு நாட்டார்'' எனப்பட்ட தமிழ் வணிகர் அமைத்த பௌத்த பள்ளியாகிய மாக்கோதைப் பள்ளி குறிப்பிடப்படு கின்றது. ஈழத்திற் கிடைத்த மிகப்பழைய கல்வெட்டாக இது இருப்பதோடு, இப் பழைய கல்வெட்டுக்கூட வெண்பாவில் அமைந்திருந்ததால் அப்பாவைக் குறிப் பிடுவது அவசியமாகின்றது: அஃதாவது.

போதி நிழலமர்ந்த புண்ணியன்போ
லெவ்வுயிர்க்குந்
தீதில் அருள்சுரக்குஞ் சிந்தையான்-ஆதி
வருதன்மம் குன்றுத மாதவன் மாக்கோதை
ஒருதர்ம பால னுளன்

இதுவரை கூறியவற்றுற் பௌத்த பாரம்பரியம் சிங்கள மக்களின் பாரம் பரியம் மட்டுமன்று என்பது புலனுகின்றது அல்லவா? இதனுல் வட கிழக்கு மாகாணங் களிலே தமிழரின் பாரம் பரிய பிரதேசத்தில் காணப்படும் பௌத்த வழிபாடுகளைச் சிங்கள மக்களின் வழிபாடுகள் எனச்சிலர் கூறுவது விதண்டாவாதம் ஆகும்.

—O—

''காஞ்சிமாநகர் பௌத்தப் பேரறிஞர்களது அறிவுக் களஞ்சியமாகப் பேர் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. உலகம் போற்றும் சென் பௌத்தம் அல்லது தியான பௌத்தம் காஞ்சிநகர் கண்டதேயாம். சீனுவிலும் அதனைவிட ஜப்பானிலும் பேரும் புகழும் பெற்று விளங்குவதான இது, பௌத்தமதப் பெரும் பிரிவேயாம், அந்த நாடுகளில் இதை நிலைநாட்டியவர் அங்குக் கி. பி. 6 ஆம் நூற்றுண்டில் சென்ற காஞ்சியரசரின் பிள்ளைகளில் ஒருவரான போதி தருமராவர். இந்த மதத்தினைச் சீனு வில் மேலும் வளர்த்தவர், நரசிங்க வன்மபல்லவன் காலத்தவரான மற்றொரு தமிழர். இவர் பெயர் வச்சிர போதி *( 166 — 730 )* இவரும் காஞ்சியில் பௌத்தர்களின் தலைவராக விளங்கினர்''.

— தெ. பொ. மீ.

# கத்தோலிக்க மதம்

**திரு. சாமுவேல் பெனடிக்ற்**
ஆசிரியர்

## கிறீஸ்து – இறைமக்கள்

கத்தோலிக்கம் எனில் பொதுவான, எல்லா இனத்தவருக்கும் உரிய எனப் பொருள்படும். இறைவனால் எல்லோருக்கும் உரியதாக உண்டாக்கப்பட்ட கத்தோலிக்க மதத்தின் வரலாற்றை முதலில் நோக்கு வோம்.

## உலக உருவாக்கம்

இயற்கை அழகு நிறைந்த இந்த இனிய உலகை இறைவன் தமது வல்லமையால் உண்டாக்கினார். பின்தம் உருவில் மனிதனை உருவாக்கினார். தம் சொந்த வாழ்வை அவனுக்கு அளித்தார். இறைவனுக்கே உரிய அறிவு, சுதந்திரம், முடிவில்லாவாழ்வு ஆகிய வல்லமைகளையும் தந்தார். தாம் அவனது தந்தையாகவும், அவன் தனது மகனாகவும் என்றும் உரையாடி, உறவாடி இன்புற்றிருப்பது இறைவனின் அன்புத் திட்டம்.

## மனிதனின் வீழ்ச்சி

உலகம் என்ற அந்த இன்பப்பூங்காவில் ஆடிப்பாடி, அகமகிழ்ந்து, தந்தையாம் இறைவன் வழிச்செல்ல வேண்டிய மனிதன் அந்தோ! தன் சுதந்திரத்தை தவறான வழிச்செலுத்தினான். ஆறறிவை அறவழியி லிருந்து மாற்றினான். அருள் வாழ்விலிருந்து விலகிச்சென்றான். பாவத்தால் தந்தை மகன் உறவு பிரிந்தது. மனிதன் இறை யின்பத்தின் உரிமையை இழந்தான். இறைவனின் அன்புத்திட்டத்தைப் புறக்க ணித்ததால் மனிதன் துன்பம், வேதனை மரணத்துக்கு அடிமையானான். மோட்ச பேரின்பத்தையும் இழந்தான்.

## இறைவனின் இரக்கம்

தன்னிடமிருந்து விலகிச்சென்ற மனி தனைத் தன்னி விடுவதைத் தந்தையாம் இறைவன் விரும்பவில்லை. இரக்கத்துடன் அவனை நோக்கினார். அவனது அவல நிலையை அனுதாபத்துடன் சிந்தித்தார். அவனை மீண்டும் தம்வழியில், அறவழியில் அழைத்து வருவதே அவரது மீட்புத் திட்டம்.

மனிதன் வளர்ந்தான். அவனது குலம் பல்கிப்பெருகியது. அவனது சுதந்திரமும் அறிவும், அளவுக்கு அதிகமாகத் தொழி லாற்றத் தொடங்கின. அவற்றால் பெரு மிதம் கொண்ட மனிதன் தன்விருப்பம் போல் இயங்கினான். பாவம் வளர்ந்தது, அக்கிரமங்கள் அதிகரித்தன. அவற்றுக் குரிய தண்டனைகளும் தொடர்ந்தன.

## அடிமை அகற்றுதல்

பாவத்துக்கு அடிமையான மனிதனை இறைவனின் நிறையன்பு தொடர்ந்தது. மக்களிலிருந்து தெரிந்தெடுத்த தலைவர் களினால் (குலமுதுவர்கள்) இறைவன் அவர்களை நடத்தினார். (உ+ம் (நோவா. ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு) .எகிப்து நாட்டின் அடிமைத் தனையிலிருந்து விடுதலை வீரன் மோயீசன் மூலம் தம் மக்களை விடு வித்தார்.

வல்லபமிக்க கடவுள் மனிதனோடு சீனாய் மலையில் செய்த உடன்படிக்கையில் தந்தை மகன் உறவை மீண்டும் வலியுறுத்தினார். மனிதகுலம் இறைவழியில் வாழ வழி வகுத்துப் பத்துக்கட்டளைகளும் தந்தார். இக்கட்டளைகளுள் முதல் மூன்றும் இறை வனுடன் மனிதன் கொள்ளும் தெய்வீக உறவும் வழிபாடும் பற்றியவை. ஏனைய கட்டளைகள் ஏழும், மனிதன் மனிதனுடன்

கொள்ளவேண்டிய அன்பும், உறவும் பண்பும் ஆகும்.

இறைவனின் அன்பை மனிதகுலம் மதிக்கவில்லை. அழிவுப்பாதையில் சென்ற, மனிதனை இறைவனும் வெறுத்தொதுக்க வில்லை. அரசர்கள், நீதிபதிகள், இறைவாக்கினர்களை மக்களிடையே தெரிந்தெடுத்து

அவர்கள் மூலம் அறியாமையால் அலைக் கழிந்த தம் மக்களுக்கு அறிவுரையும், ஆலோசனையும், ஆதரவும் வழங்க இறைவன் தவறவில்லை.

## எதிர்பார்க்கப்பட்ட மீட்பர்

இறைவன் மனிதனோடு செய்த உடன்படிக்கைகளிலும், கொடுத்த வாக்குறுதிகளிலும் ''மீட்பர் ஒருவர் இறைமக்களுக்கு விடுதலை அளிக்க வருவார்'' என்ற தலையாய செய்தி வற்புறுத்தப் பட்டுள்ளது. இறைமக்கள் இம்மீட்பரை (மெசியா) நீண்ட நாட்களாக ஆவலோடு நம்பிக்கையோடு எதிர் பார்த்திருந்தனர்.

'தாவீதின் மரபில் பிறக்கும் மீட்பர் ஒருவரால் இறைவனின் மீட்புத்திட்டம் செயற்படும்' என கி.மு. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆமோஸ், இசையாஸ் போன்ற இறைவாக்கினர்கள் எடுத்துரைத்தனர். 'இறைவனின் மெசியாமூலம் நீதியும், சமாதானமும், நிறைவளமும் உடைய அரசு உருவாகும்' என நாத்தானின் இறைவாக்கு கூறுகிறது.

எனினும் இறைமக்கள் மண்ணரசு பற்றிச் சிந்தித்தார்களேயன்றி மீட்பர் நிறுவவுள்ள இறையரசு பற்றிக் கருத்தில் கொள்ளவேயில்லை.

## மீட்பரின் முன்னோடி

இறுதியாக வந்த இறைவாக்கினரான அருளப்பர், பழைய புதிய உடன்படிக்கைகளை இணைப்பவரானார். கிறிஸ்தவர்களின் திருநூலான பைபிள் 'உலகம் உருவானது முதல் இறைவாக்கினர் அருளப்பர் வரையிலான காலத்தைப் பழைய ஏற்பாடு' என அழைக்கிறது.

அருளப்பர் ஏனைய இறைவாக்கினரினின்றும் மாறுபட்டுப் பணியாற்றினார், மீட்பரான கிறீஸ்துவின் வருகையை மக்களுக்கு அறிவிப்பவராய் அவர்வழியை ஆயத்தம் செய்பவராய் விளங்கினார்.

தண்ணீரால் திருமுழுக்கு அளித்ததால் 'ஸ்நாபகர்' என்றும் 'திருமுழுக்கு அருளப்பர்' என்றும் அழைக்கப்பட்டார். அவர் அதிகாரத்துடன் போதித்தார். அநீதிகளைக் கண்டித்தார். புதிய சமுதாயக் கொள்கைகளை வலியுறுத்தினார்.

எனவே, அருளப்பரே எதிர் பார்க்கப் பட்ட மெசியா எனப்பலர் எண்ணினர். இது கண்டு அருளப்பர் தாழ்ச்சிமிக்கவராக ''என்னைவிட வல்லவர் ஒருவர் வருகின்றார் அவரது பாதணிகளின் வாரை அவிழ்க்கவும் தகுதியில்லாதவன் நான்'' எனக் கூறினார்.

## மனித மையம்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்கள் இறைவனை மையமாகக் கொண்டு வாழ்ந்தனர். பழைய ஏற்பாட்டின் நிறைவாக்கமான புதிய ஏற்பாட்டிலோ மனிதனே மையப்பொருளாகின்றான். மனிதனைத்தேடி இறைவன் வருவதை இங்கு காண்கிறோம். காலத்துக்குக் காலம் குலமுதுவர்கள், அரசர்கள், இறைவாக்கினர் மூலம் மக்களோடு உரையாடி, உறவாடிய இறைவன் இறுதியில் தனது ஏககுமாரனையே அனுப்பத் திருவுளங்கொண்டார்.

## இரண்டாவது ஏவை

வரவிருக்கும் மீட்பர் அரசராம் தாவீது குலத்திலே பிறப்பார் என எண்ணப்பட்டது. எனவே அவ்வழிவந்த பெண்மணிகள் மெசியாவின் அன்னையாகும் பேறு தங்களுக்குக் கிட்டவேண்டுமென ஏங்கித் தவித்தனர். தமது புதல்வனின் தாயாக, பாவ மாசின்றி அவதரித்த, நற்பண்புகள் நிறைந்த ஒரு குணவதியை இறைவன் தெரிந்தெடுத்தார். அக்கன்னிகையின் பெயர் மரியாள்.

முதற்பெண்ணாகும் ஏவாள், முதல் மனிதன் ஆதாமுடன் சேர்ந்து இறைவனின் திட்டத்தைப் புறக்கணித்தாள். அதனால் மனிதகுல வீழ்ச்சியை, உலகின் அடிமைத் தளையை உருவாக்கியவள் ஆனாள்.

இரண்டாவது ஏவாளான மரியாள், இறைவனின் திட்டத்துக்கு அடிபணிந்தாள். தன் கன்னிமையையும் இறைவனுக்கே அர்ப்பணித்தாள். அதனால் உலக மீட்புக்கு வழிவகுத்தவள் ஆனாள்.

## மீட்பரின் வருகை

இறைவார்த்தை கரு ஆகியது. இறைவனின் ஆவி மரியாள் மேல் நிழலிட்டது. கன்னிமரியாள் கருத்தரித்தாள். மரியாளுக்கு விவாக ஒப்பந்தம் செய்யப்பட்ட சூசை செய்தியறிந்து சிந்தை நொந்தார். வானதூதரால் இறை சித்தத்தையறிந்து சிந்தை தெளிந்தார். காலம் நெருங்கியது. கணக்கெடுப்புக்காக பெத்லகேம் சென்ற சூசையும் மரியாளும், தங்க இடமின்றி மாடடையும் குகையொன்றில் தங்கினர். அங்கு இறைவனின் திருமகன் - எதிர்பார்க்கப்பட்ட மீட்பர் - மெசியா பிறந்தார். அவரே இயேசுக்கிறீஸ்து.

பெத்லகேம் என்ற சிறுகிராமத்தில் பிறந்து, எளிமை, தாழ்மை என்ற கிறீஸ்தவப் பண்பாடுகளைப் பகிரங்கப்படுத்திய இறை மகன் கிறீஸ்து, நசரேத் என்ற கிராமத்தில் அதிகம் அறியப்படாதவராக வாழ்ந்தார். முப்பதாமாண்டில் தந்தையின் இறைவனின், பணியைச் செய்ய (விடுதலைப் பணி)ப் புறப்பட்டார்.

## நோன்பும் சோதனையும்

இயேசு திருமுழுக்கு அருளப்பர் கையால் திருமுழுக்குப் (ஞானஸ் நானம்) பெற்றார். இறைவனின் ஆவி அவர்மேல் புறுவடிவில் இறங்கினார். ''நீரே என் அன்பு மகன், உம்மில் நான் அகமகிழ்கிறேன்'' என்ற பிதாவின் குரல் வானத்திலிருந்து வெளிப்பட்டது. பிதா, சுதன், தூய ஆவி என்ற மூவொரு கடவுளின் ஐக்கியத்துவம் இங்கு வெளிப்பட்டது.

இயேசு நாற்பது நாட்கள் உண்ணா விரத நோன்பு அனுசரித்தார். சாத்தான் இப்புதியவரைச் சந்தேகத்துடன் பார்த்தான். மூவித சோதனைகளால் அவரை மதிப்பீடு செய்தான். உணவை, உலக சுகபோகங்களை, பெரும்புகழ்க் கீர்த்தியைக் காட்டி இறைமகனைத் தன்வழியில் நடத்த முயன்றான். சோதனைகளை வென்ற கிறீஸ்து தம்விடுதலைப் பணியைத் தொடங்கினார்.

## விடுதலைப் பணி

''எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறுவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும் அவர் என்னை அனுப்பினார்'' (லூக் 4 : 18 - 19) என்ற வார்த்தைகளால் பகிரங்கப் பணியைத் தொடங்கிய கிறீஸ்து தம்பணியின் குறிக்கோளை — விடுதலையை — இங்கு சுட்டிக் காட்டுகிறார்.

கிறீஸ்துவின் ஒவ்வொரு சொல்லும் செயலும் விடுதலைக்கு வித்திடுவதிலும், இறையரசைப் பரப்புவதிலும் உறுதுணையாய் விளங்கின என்பதை புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர் ஆகிய நற்செய்தி எழுத்தாளர்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றனர். இவர்களுள் மத்தேயு, அருளப்பர் என்போர் குருகுலமுறையில் இயேசுவின் சீடராயிருந்தவர்கள். மாற்குவும், லூக்காவும் இயேசுவின் சீடர்களது நண்பர்கள்.

## இயேசுவின் போதனைகள்

இறைவனின் தந்தைக்குரிய அன்பையும், பராமரிப்பையும், அவர்தரும் விடுதலை வாழ்வையும் இயேசு வெளிப்படுத்தினார். பாரம்பரியங்கட்கும் பழம் பெருமைகட்கும் சாவுமணி அடித்தார். அநீதியைப் பகிரங்கமாகக் கண்டித்தார். பெரிய மனிதர்களின் அற்பத்தனங்களையும், போலிவேடங்களையும் பகிரங்கப் படுத்தினார்.

இறைவனின் அன்பை, இரக்கத்தை, இறையரசின் தன்மையை உவமைகளால் (கதைகளால்) விளக்கினார். இறையரசு பெறுவதற்குரிய நிபந்தனைகளை மலைப் பொழிவு மூலம் நன்கு எடுத்துக்காட்டினார். கிறிஸ்தவ மதிப்பீடுகளைப் பறைசாற்றும் இயேசுவின் மலைப்பொழிவு உலகப் பேரறிஞர்களினதும் சிந்தனையாளரினதும் பாராட்டைப்பெற்றுளது. அகிம்சாமூர்த்தி மகாத்மா காந்தியும் மலைப்பொழிவைத் தம் தியான உரையாகக் கொண்டார் என்பது தெரிந்ததே.

## இயேசுவின் புதுமைகள்

இறைமகன் இயேசுக்கிறிஸ்து மக்கள்பால்கொண்ட அன்பாலும், தீயசக்தி களிலிருந்து இறைவன் இறைமக்களை விடுவிக்கிறார் என்பதை அறிவுறுத்தவும், தம் தெய்வீகத்தை நிரூபிக்கவும் புதுமைகளைச் செய்தார்.

அவரது புதுமைகளை இயற்கையை வெல்லும் சக்தி, நோய்களைக் குணமாக்கும் சக்தி, மரணத்தை வெல்லும் சக்தி, சாத்தானை வெல்லும் சக்தி என நான்கு வகையாக்கலாம்.

கிறிஸ்துவின் மீட்புப்பணி — விடுதலைப் பணி அவரது புதுமைகளினால் பல கோணங்களில் அறிவிக்கப்பட்டது.

## இயேசுவின் வாழ்க்கை

கிறிஸ்து ஒரு சமுதாயப் புரட்சியாளன். சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் அதை நிரூபித்தார். ஏழைகளோடும் பாட்டாளி மக்களோடும் உறவு கொண்டார். தமக்கென வாழாது கிராமங்கள்தோறும் கால்நடையாகச் சென்று பணி செய்தார். சமூக அமைப்புகளினால் புறக்கணிக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் அனைவரோடும் தொடர்பு கொண்டார்.

''நீதிமான்களையல்லாது பாவிகளையே தேடிவந்தேன். நோயுற்றோருக்கே மருத்துவன் தேவை'' என்ற அவரது கூற்றுகள் இக்கருத்தை வலியுறுத்தின.

கடவுளின் பெயரால் மக்கள் மத்தியில் வேற்றுமைகளை வளர்த்த அமைப்புகளையும், அர்த்தமற்றதும் அன்புக்கு மாறானதுமான சட்டங்களையும் தேவையை நோக்கி எதிர்க்கவும் மீறவும் இயேசு பின் வாங்கவில்லை.

## இயேசுவின் மரணம்

இயேசுவின் புரட்சிகரமான போதனைகளும் அவரது சாதனைகளும் மக்களிடையே மதிப்பும் செல்வாக்கும் பெற்றன. அவரைப் பின்தொடர்வோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்தது. அரசியல் வாதிகளும் ஆன்மீக அந்தஸ்தில் வாழ்ந்தவர்களும் தமது வெளிவேடம் அம்பலமாகி வருவதை உணர்ந்தனர். தக்கநடவடிக்கை எடுத்தனர்.

தேசத்துரோகியாக, மதத்துரோகியாக, இராஜ துரோகியாக இயேசுவைக் குற்றஞ்சாட்டினர். சித்திரவதையும் சிலுவை மரணமும் தந்தனர்.

இயேசு தம்மரணத்தால் உலக மீட்புக்கு விடுதலைக்கு வழிவகுத்தார். தன் நண்பனுக்காக உயிரைத்தியாகம் செய்வதே அன்புசெய்தலின் உச்சக்கட்டம் என்பதை உலகத்தாருக்காக உயிர் கொடுத்து நிரூபித்தார்.

## இயேசுவின் பணி தொடர்கிறது

இயேசு தாம்கூறியபடி, மரித்து அடக்கப்பட்ட மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார். புனிதசின்னப்பர் கூறுகின்றார் ''கிறிஸ்து உயிர்த்தெழாதிருப்பின் எமது விசுவாசம் வீண்''

உயிர்த்தெழுந்தபின் கிறிஸ்து நாற்பது நாட்கள் இவ்வுலகிலிருந்தார். மூன்றாண்டுகள் தம்முடனிருந்து பயிற்சி பெற்ற சீடர்களை 'அப்போஸ்தலர்' ஆக்கினார். (அப்போஸ்தலர் அனுப்பப்படுபவர்) தமது பணியை அவர்களிடம் ஒப்படைத்தார். தாம்நிறுவும் சத்திய திருச்சபையின் தலைமைத்துவத்தைச் சீடர்களுள் ஒருவரான இராயப்பருக்கு அளித்தார். ''இராயப்பா,

உன்பெயர் பாறை, இப்பாறையின்மேல் என்திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா''
(மத்தேயு 16 : 18)

கிறீஸ்து தாம் விண்ணுலகெய்தியபின் தூயஆவியை அனுப்புவதாக வாக்களித்தார். உலகு உள்ளவரை தாம் உருவாக்கிய திருச்சபையுடனிருப்பதாகக் கூறி விண்ணுலகடைந்தார்.

## திருச்சபையின் பிறப்பு

கிறீஸ்துவின் மரணத்தால் அவரைப் பின் தொடர்ந்தோர் சிதறுண்டனர். வெளியே செல்ல அஞ்சிய சீடர்கள், அறையொன்றில் செபித்திருக்க இறைவனின் ஆவி அவர்கள் மேல் இறங்கி அவர்களைத் திடப்படுத்தியது. திடங்கொண்ட அப்போஸ்தலர்கள் பண்டிகைக்காக ஜெருசலேமில் வந்து கூடிய மக்களிடையே சென்றனர்.

இராயப்பர் அஞ்சாநெஞ்சுடன் கிறீஸ்துவின் நற்செய்தியை விளக்கினர். அத்தினத்தில் மூவாயிரம்பேர் திருமுழுக்குப் பெற்று இறைமக்களாயினர். சத்திய (கத்தோலிக்க) திருச்சபையும் ஆரம்பமாகியது.

## வளர்ச்சி

அப்போஸ்தலர்கள் பல்வேறு நாடுகட்கும் சென்று கிறீஸ்துவின் நற்செய்தியை-விடுதலை தரும் இறையரசின் தன்மையைப் போதித்தனர். கிறீஸ்துவின் வாக்குக்கிணங்க எல்லா இனத்தாரையும் இறைமக்களாக்கினர். எனவே அது கத்தோலிக்க திருச்சபை எனப்படுகிறது. ரோமை நகரில் தலைமைப்பீடத்தைக் கொண்டிருப்பதால் ரோமன் கத்தோலிக்க திருச்சபை என அழைக்கப்படுகிறது.

## நிர்வாகம்

திருச்சபையின் முதல் தலைவரான இராயப்பரைத் தொடர்ந்து இடையீடின்றித் தலைவர்கள் தெரியப்பட்டு, கத்தோலிக்கமதம் ஆளுகை செய்யப்படுகிறது. திருச்சபைத் தலைவர் பாப்பரசர் என அழைக்கப்படுகிறார். இன்று போலாந்து நாட்டைச் சேர்ந்த 2ஆம் அருள் சின்னப்பர் பாப்பரசராக உள்ளார்.

அப்போஸ்தலர் என்ற வரிசை பின்னர் ஆயர் என மாற்றம் பெற்றது. ஒவ்வொரு ஆயரும் ஒரு மறைமாவட்டத்துக்குப் பொறுப்பானவர்கள். ஒரு மறை மாவட்டம் பல பங்குகளாகப் பிரிக்கப்பட்டுளது. ஒவ்வொரு பங்கும் ஒரு குருவால் (பங்குத் தந்தை) நிர்வகிக்கப்படுகிறது. ஆயர்களின் தலைவரே பாப்பரசர்.

நிர்வாகம் சம்பந்தமாக பாப்பரசருக்கும் ஆயர்கட்குமிடையில் கர்தினல் என்ற வரிசை உண்டு. திருச்சபைத் தலைமையகத்தில் பல்வேறு திணைக்களங்களின் அமைச்சர்களாக சில கர்தினல்களும், தத்தம் நாடுகளில் பாப்பரசரின் பிரதிநிதிகளாகப் பல கர்தினல்களும் பணியாற்றுகின்றனர். ஒரு தமிழர், ஒரு சிங்களவர் உட்பட எல்லா இனத்தோரும் கர்தினல் சபையில் அங்கம் வகிக்கின்றனர். பாப்பரசரைத் தெரிவு செய்பவர்கள் கர்தினல்மாரே.

## பிரிவும் பிளவும்

கொள்கை வேறுபாடு, சுயநலம், நிர்வாகத் தவறுகள் என்பன மத்திய காலத்தில் திருச்சபையை அலைக்கழித்தன. கொள்கை வேறுபாடு காரணமாக புரட்சிக் குரல் எழுப்பியவர்களுள் மாட்டின் லூதர், கல்வின் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். திருமறைத்தலைவர்கட்கும் இப்புரட்சிவாதிகட்குமிடையே சமரசம் உண்டாகாத காரணத்தால் பிரிவு உண்டாயது. புரட்சிவாதிகள் பிரிந்து சென்று வேறு சபைகளை நிறுவினர். ஒரே குடும்பமாக உரையாடி, உறவாடி கொள்கைகளை அலசி ஆராய்ந்து விட்டுக்கொடுத்து சமரசம் ஏற்படும் நிலை உண்டாகாதது வருந்தத்தக்கது.

தொடர்ந்தும் திருச்சபையில் பிளவுகள், பிரிவினைகள் உண்டாயின. இன்று கிறீஸ்துவை வழிபடும், அவரது போதனைகளைப் பின்தொடரும் சபைகள் பல உண்டு.

## ஆயர் சங்கங்கள்

ஏனினும் சத்திய (கத்தோலிக்க) திருச்சபை சிதறவில்லை. காலத்துக்குக் காலம் ஆயர்கள் அனைவரும் வத்திக்கானில் (ரோம்) ஒருங்கு கூடி பாப்பரசரின் தலைமையில் இறையரசின் நடைமுறைகளை திருச்சபையின் சட்டங்களை, வழிபாட்டு முறைகளை ஆராய்ந்து தவறுகளைத் திருத்தி விடுதலைதரும் இறையரசைப் பரப்ப ஆவன செய்து வருகின்றனர். 1962ஆம் 1963ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற 2ஆம் வத்திக்கான் சங்கம் கத்தோலிக்க மதத்தில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கியுள்ளது.

## கிறீஸ்தவ ஒன்றிப்பு

ஆண்டவர் கிறீஸ்து நிறுவிய திருச்சபை ஒன்றே. துவக்க காலத்திலிருந்தே இந்த ஒரே திருச்சபையில் பிளவுகள் தோன்றியிருக்கின்றன. 'எல்லாரும் ஒன்று யிருப்பார்களாக' (அரு 17; 21) என்று பிரார்த்தித்த கிறீஸ்துவின் உள்ளத்துக்கு முரண்பாடாகவும், உலகுக்கு இடறலாகவும் இது அமைவதுடன் நற்செய்திப் போதனைக்கும் இடையூறுகின்றது.

இப்பிளவுகள் பற்றிக் கத்தோலிக்கரும் கவலையற்று இருக்கவில்லை. பலகாலமாக தை 18 முதல் 25 வரை கிறீஸ்தவ ஒன்றிப்பு வாரம் நடாத்தி ஒன்றிப்புக்காகச் செபித்து வந்துள்ளனர். 13ஆம் சிங்கராயர் காலத்திலிருந்து ஒவ்வொரு பாப்பரசர்களும் கிறீஸ்தவ ஒன்றிப்பில் அக்கறை காட்டி வந்துள்ளனர்.

ஆறும் சின்னப்ப பாப்பரசர், கீழைத் தேச சபையின் தலைவர் அத்தன கோரசை சந்தித்து, கிறீஸ்தவ ஒன்றிப்பியக்கத்தில் ஒரு திருப்பத்தை உருவாக்கினார். 2 ஆம் வத்திக்கான் சங்கத்தில் ''எவ்வகையிலேனும் நாங்கள் (கத்தோலிக்கர்) இப்பிரிவினைகட்குக் காரணமாய் இருந்திருந்தால் தாழ்மையுடன் இறைவனிடம் மன்னிப்பையும், எங்களால் புண்பட்ட எங்கள் சகோதரரின் பொறுத்தலையும் கோருகிறோம்'' (1963 புரட்டாதி 29) என்று வெளிப்படையாகக் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று திருச்சபைத் தலைமையகத்தில் கிறீஸ்தவ ஒன்றிப்புக்காக ஒரு செயலகம் பணியாற்றி வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஏனைய மதங்களோடு தொடர்பு

இன்று மக்களினம் நாளுக்குநாள் நெருங்கி ஒன்றுபட்டுவருகிறது. இன்றைய இளந்தலைமுறையானது உலகில் பரவிவரும் நாசிஸ்த, பாசிஸ்த, கம்மியூனிஸ்த கொள்கைகளின் கவர்ச்சியால் இழுக்கப்படுகின்றது. இன்றைய அரசியல், பொருளாதார, சமூக சீர்கேடுகளும் கடவுளில்லாக் கொள்கைகளை மக்களினம் கட்டித்தழுவக் காரணமாகின்றன.

இந்நிலையில் உலகமதங்களிடையே ஒன்றிப்பும் ஐக்கியமும் வேண்டும் என்ற கருத்தை கத்தோலிக்கமும் வரவேற்றுளது. தனது விசுவாச உண்மைகட்குப் பங்கமில்லாத' வகையில் ஏனைய மதங்களோடு நட்புறவு கொண்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் நற்பணியாற்றுவதில் கத்தோலிக்கம் என்றுமே பின்னடைந்ததில்லை.

## இறையரசின் அமிசங்கள்

கத்தோலிக்க மதம், கிறீஸ்து இறை மக்களைக்கொண்டது. இறையரசின் அங்கத்தவர்களான இறைமக்கள் கிறீஸ்துவில், கிறீஸ்துவாக, கிறீஸ்துவை வாழவேண்டியவர்கள், வாழ்ந்து காட்டவேண்டியவர்கள். கத்தோலிக்க மதத்தின் போதனை இதுவே.

இறையரசின் அங்கத்தவர்கள் கிறீஸ்துதம் வாழ்வில் கடைப்பிடித்த மூன்று அமிசத்திட்டத்தை அனுசரிக்க வேண்டியவர்கள். அவை சுதந்திரம், அன்புறவு, நீதி என்பன.

கிறீஸ்து சுதந்திரமாக வாழ்ந்தார். நாம் பல்வேறு அடிமைத்தளைகளால் அமுக்கப்படுகிறோம். செல்வம், செல்வாக்கு;

அதிகாரம், ஆணவம், சுயநலம், சம்பிரதாயம் என்பன எம்மை ஆட்கொள்ளும் அடிமைத்தனங்களுள் சில. எம்மை முழுமையாக விடுதலை செய்ய இறைவனில் முழு நம்பிக்கையுடன் எம் சுயநலமனைத்தையும் துறந்து வாழும் நிலை உண்டாகவேண்டும்.

கிறீஸ்து சுதந்திரமாக அயலவனுடன் அன்புறவு கொண்டார். அன்பு செய்வதற்காக எம்மையே நாம் அர்ப்பணித்தல் வேண்டும். நாம்பெற்ற சுதந்திரம், எம் சுயநலத்துக்காகவல்ல, பொதுநலத்துக்கே முழுமையாகப் பயன்படுதல் வேண்டும்.

அன்புறவு முழுமையாக இருக்குமிடத்தில் நீதி பிரகாசிக்கும். அநீதி எவ்வுருவில், எந்நிலையில் தொழிற்படினும் அவற்றைக் கண்டும் காணாதவராக இருக்க முடியாது. கிறீஸ்து அநீதியை முழுமூச்சுடன் எதிர்த்தார். அதன்பரிசாக சித்திரவதையும் சிலுவை மரணமும் கிடைத்தபோதும் அவர் அஞ்சவில்லை.

## கிறீஸ்தவனின் பணி

கத்தோலிக்க மதத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவனும் ஒரு கிறீஸ்துவே. பிறர் அவனில் கிறீஸ்துவைக் காண வேண்டும். புளிக்காரம் இடப்படும் மா முழுவதும் புளிப்புக்குணம் பெறுகிறது. உண்மைக் கிறீஸ்தவன் ஒரு புளிக்காரமே. அவனைச்சுற்றியுள்ளவர்கள் அவனது குண நற்செயல்களால் மாற்றம் பெற்று இறையரசில் இணைவார்கள். இது மதமாற்றம் அல்ல மனமாற்றம்.

கிறீஸ்தவன் ஒவ்வொருவனும் கிறீஸ்துவைப் பிரதிபலிப்பவனாக அயலவனுக்காகத் தன்னையே முற்றாக அர்ப்பணித்தவனாக வாழவேண்டும். இதுவே இறையரசு தரும் உண்மையான இன்பவாழ்வு. இதுவே கத்தோலிக்கத்தின் தலையாய தத்துவம் ஆகும்.

கிறீஸ்தவன் கிறீஸ்துவாக, இறைவனுக்கும் நாட்டுக்கும் உகந்தவனாக வாழ்ந்து முடிவில்லாப் பேரின்பம் துய்ப்பதே இறையரசின் இலட்சியமாகும்.

□○□

## பொன்மொழிகள்

- உன் கண்தான் உன் உடலுக்கு விளக்கு; உன் கண் தெளிவாயிருந்தால் உன் உடல் முழுவதும் ஒளியுள்ளதாய் இருக்கும். ( மத் 6:22 )
- கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக்கல்லாய் அமைந்தது. ஆண்டவர் செயல் இது, நம் கண்ணுக்கு வியப்பே. ( மாற். 12:10, 11 )
- பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். ( லூக். 6:31 )
- நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். நாளைய தினம் தன்னைப் பற்றிக் கவலை கொள்ளும். அன்றன்றைய தொல்லை அன்றன்றைக்குப் போதும். ( மத். 6:34 )
- மருத்துவன் நோயற்றவருக்கன்று, நோயுற்றவருக்கே தேவை. ( மத். 9:32 )
- நான் சொல்வதைக் கேட்டு உணர்ந்துகொள்ளுங்கள் வாய்க்குள் நுழைவது மனிதனை மாசுபடுத்துவதில்லை. வாயிலிருந்து வெளிவருவதே மனிதனை மாசுபடுத்தும். ( மத். 15:11 )
- உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான்மீதும் அன்பு காட்டுவாயாக. ( மாற்: 12:31 )

தொகுப்பு : சகோ. அ. றெபேட்

# புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவம்

**திரு. எஸ். ஜெபநேசன், M A., B. D.**
( துணை முதல்வர், யாழ்ப்பாணக் கல்லூரி )

## சொல்லும் பொருளும்

புரட்டஸ்தாந்துத் திருச்சபை என்பது இன்று பொதுவாக ரோமன் கத்தோலிக்கம் அல்லாத (Non RC) திருச்சபைகளைக்குறித்து நிற்கின்றது. ''புரட்டஸ்ட்'' (Protest) என்ருல் எதிர்ப்பு. எனவே ரோமன் கத்தோலிக்க சமயத்தை எதிர்த்துத் தோன்றியமையால் அப்பெயர் அக்கிறிஸ்தவப் பிரிவுக்கு வந்து விட்டதெனச் சிலர் தவருக முடிவு கட்டி விடுகின்றனர். ஆனுற் ''புரட்டஸ்தாந்து'' என்பதன் சொற்பிறப்பை ஆராய்ந்தால் ''ஆணையிடுதல்'' என்ற கருத்தே முதலில் இருந்ததென்பது தெளிவாகும். சாமுவேல் ஜோன்சன் தாம் தொகுத்த ஆங்கில அகராதியில் Protestation என்ற சொல் லுக்கு ''நான் ஒரு கருத்தையோ, உண்மையையோ, சங்கற்பத்தையோ பக்தி சிரத்தையுடன் ஆணையிட்டுக் கூறுகின்றேன்'' என்று வரைவிலக்கணம் கூறினுர்.

பதினும் நூற்ருண்டில் பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட கத்தோலிக்க திருச்சபையை எதிர்த்த ஜேர்மன் கிறிஸ் தவத் தலைவர்கள் முதன் முதலாக இப்பதத்தைப் பயன்படுத்தினர். ஜேர்மன் கிறிஸ்தவத் தலைவர்களுக்கும் கத்தோலிக்க திருச்சபைக்குமிடையில் சமரச உடன்பாடுகாண 1529 இல் ''ஸ்பியேர்'' பேரரசு மன்றம் கூடியது. ரோமன் கத்தோலிக்க ஆயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இம்மன்றத்தில் ஜேர்மன் கிறிஸ் தவர்கள், தமது கருத்தைச், சங்கற்பத்தை, நெறியை உறுதியாகக் கூறினர். இந்த உறுதிமொழியே (Protestation) பின்னர் பிரிந்த சபைகளுக்குரிய காரணப்பெயராகி விட்டது.

## இயேசு கிறிஸ்து

கிறிஸ்த சமயத்தின் அடிப்படையான உண்மை இயேசு கிறிஸ்துவே. அவர் இறைவனின் அவதாரம். ஆனுல் வைணவ சமயம் குறிப்பிடும் அவதாரத்தை விட இயேசு பெருமானின் அவதாரம் வேறுபட்டது. இயேசு, ஜூலியஸ் சீசரின் மருமகனுகிய அகஸ்து சீசர் ரோமப் பேரரசை ஆட்சி செய்த காலத்தில் இஸ்ராயேல் தேசத்தில் பிறந்தார். இவர் இறைவனின் பூரண வெளிப்படுத்தல். அதாவது இவ்வுலகில் கடவுளை மனிதர் எவ்வளவு அறிய வேண்டுமோ அவ்வளவாகக் கடவுளை மனிதருக்கு காண்பித்தார்.

இயேசுபிரானின் அவதாரம் எவ்வாறு வைணவம் குறிப்பிடும் ''அவதாரத்''தை விட வேறுபட்டது என்பதனைப் புரிந்து கொள்ளல் அவசியமாகின்றது. கிருஷ்ணன், பிரம்மம் அல்லது முழுமுதற் கடவுளின் அவதாரமல்ல. நிர்க்குண பிரம்மத்தின் ஆளுமைத் தோற்றமாகிய விஷ்ணுவின் அவதாரம் மட்டுமே. மனுவுருக்கொண்ட அனுதி இறைவனே கிறிஸ்து. இதனுலே தான் இயேசுவை ''அவதாரம்'' என்று குறிப்பிடாமல் ''இறைமைந்தன்'' என்பர்.

## வருகையின் நோக்கம்

அனுதி கடவுள் பூவுலகத்திற்குவந்ததன் காரணம் தமது மக்கள் மீது கொண்ட அன்பேயாகும். உலகத்து மக்கள் அனைவரும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள். உரிமையும் (Free will) தன்னுணர்ச்சியுமுள்ள மக்களைப் படைத்து அவர்கள் தம்மோடு அன்புடன் வாழ்ந்து தமது சித்தத்தைச் செய்து தமது பிள்ளைகளாக வாழவிடுவதே கடவுளின் நோக்கமாக விருந்தது. ஆனுல் மனிதன் கடவுளின் கட்டளைகளை மீறினுன். பாவம் உலகத்திற்குள் வந்தது. பாவத்திற்குள் வீழ்ந்துவிட்ட மனிதனை நீதியும் தூய்மையும் சாவாமையும் கொண்டவனுக நிலைநிறுத்த

இறைவன் விரும்பினார். எனவேதான் மன்னுருவான இறைவன் "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கின்றது; காணுமற் போனதைத் தேட வந்தேன்,, என்று அழைப்பு விடுத்தார். கடவுள் அருளும் மன்னிப்பை எடுத்துக் கூறினார். கடவுளின் தியாக அன்பைத் தமது போதனையினுலும், சாதனையினுலும் தாம் பட்டபாடு, மரணம் என்பனவற்றிலும் வெளிப்படுத்தினார். தமது உயிர் அநேகருக்கு விமோசனத்தை ஏற்படுத்தும் என்றார். இதனால் இயேசு பிரானின் மரணத்தைக் குற்ற நிவாரண பலியாகவும், கடவுள் மனிதரைத் தம்மோடு ஒப்புரவாக்கும் செயலாகவும் கிறீஸ்தவங் கொள்கின்றது.

இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். எனவே இறைவனின் அவதாரம் அவருடைய மரணத்தோடு முற்றுப் பெறுமல் சதாகாலமும் செயலாக்கமுடையதாகத் திகழ்கின்றது. இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின் அவருடைய அடியார்களில் ஒருவரான பவுல் என்பார் பின்வருமாறு எழுதினார்.

"கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டிருக்கக், கோபாக்கினைக்கு நீங்கலாக விசுவாசிகள் அவரால் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயம்" ரோ. 5.9:

நீதிமான்கள் முக்தி அல்லது நித்திய ஜீவன் அடைவார்கள். அது சம்பூரணமான வாழ்வு. அது இப்போதே இங்கே தொடங்கி மறுமையில் முற்றுப்பெறுவது; அதன் தன்மை சொல்லுதற்கரியது. ஆனால் இறைவனுடைய செயல்கள் அவருடைய வாக்குறுதிகளை விட மேன்மையானவையாகவே உள்ளன என்பது கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கை. (Theology of Hope)

## தூய ஆவி

இயேசுபிரான் தமது மரணத்திற்கு முன்னர் தூய ஆவியைப்பற்றித் தமது சீடர்களுக்கு எடுத்துரைத்தார். இதனைத் தேற்றரவாளன் என்று விளக்கினார். இயேசுவின் மானிட வாழ்க்கைக்குப் பின்னர் சீடர்கள் மத்தியிலும் திருச்சபையிலும் அதிக வல்லமை காணப்பட்டது. இந்த வல்லமைக்கு இயேசுபிரான் தமக்கு அருளுவதாகக் கூறிய தூய ஆவிதான் காரணம் என்று நம்பினார்கள். இதனைக் கிறிஸ்துவின் ஆவியென்றும் கடவுளின் ஆவியென்றும் அழைத்தார்கள். தூயஆவி மானிடருக்குள் செயற்படும் கடவுள் என்றும், உள்ளத்திலே குடி கொண்ட கிறிஸ்து என்று கொள்ளப்படுகின்றது.

## திரித்துவம்

அனாதி கடவுள், இயேசுபிரான், தூய ஆவி என்ற நிகழ்வுகள் திரித்துவக் கொள்கைக்கு வழி சமைத்தன. திரித்துவம் என்பது மூன்றுருகும். எனவே பல இந்திய கிறிஸ்தவ அறிஞர்கள் "மும்மூர்த்தி,, "சச்சிதானந்தம்,, என்ற இந்துக் கோட்பாடுகளுடன் கிறிஸ்தவ கடவுட் கொள்கையை இணைக்க முயன்றனர். ஆனால் கிறிஸ்தவம் இறைவன் ஒருவனே என்பதில் உறுதியாகவுள்ளது. புனித அகுஸ்தீனார் அனாதி கடவுளை நேசிக்கிறவரென்றும், இயேசுபிரானை நேசிக்கப்பட்டவரென்றும், தூய ஆவியை நேசம் என்றும் விளங்கினார். வேறு சிலர் இக் கடவுட் கொள்கையை ஐஸ்கட்டி, தண்ணீர் நீராவி, போன்ற உவமானங்களால் விளக்க முனைவர். திரித்துவக் கொள்கையின் எழுச்சிக்கு, கடவுள் தம்மை மக்களுக்குக் காட்டிக் கொள்ள மேற்கொண்ட சிறப்பு வெளிப்பாடுகளும், பொது வெளிப்பாடுகளுமே காரணமாகும்.

## திருச்சபையின் பிரிவு

இயேசு பிரானின் பூவுலக வாழ்க்கைக்குப் பின்னர் கிறிஸ்தவ சமயம் ஐந்து தலங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது. அவை ரோமாபுரி, எருசலேம், அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா, கொன்ஸ்தாந்தி நோபிள் என்பவையாகும். ரோமாபுரியில் இருந்த தலைமைப்பீடம் தம்மீது பரிபாலனம் செய்வதனை விரும்பாத எருசலேம், அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா, கொன்ஸ் தாந்தி நோபிள் பீடத்தலைவர்கள், சிறிது சிறிதாக மேற்கு ஐரோப்பிய சபையிலிருந்து விலகிச் செல்ல

முற்பட்டனர். இந்தப் பிரிவு 1054இல் வலுப் பெற்று நிரந்தரமானதாகி விட்டது. இப்படிப் பிரிந்தவர்களே இன்று கிரேக்க வைதிகசபை (Greek Orthodox Church) என்று அழைக்கப்படுகின்றனர். இச் சபைகள் ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மத்தியதரைப் பிரதேசங் களிலும் காணப்படுகின்றன, இவர்களைக் கத்தோலிக்கர் என்றோ புரட்டஸ்தாந்தவ ரென்றோ எவருங் கூறத்துணியார்.

## புரட்டஸ்தாந்து இயக்கம்

புரட்டஸ்தாந்து இயக்கம் ரோமாபுரியைத் தலைமைப் பீடமாகக் கொண்ட மேற்கு ஐரோப்பிய திருச்சபையில் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். ஜேர்மனியில் வாழ்ந்த மார்ட்டின் லூதர் (1483— 1546) இதன் தளபதியென்றும் பிரான்ஸ் தேசத்தவரான ஜோன் கல்வின் (1509 — 1564) இதன் சிந்தனைச் சிற்பியென்றும் கூறுவர். ஆனால் பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகளில் வேறுபல சிந்தனையாளர்களும் ஆட்சித்தலைவர்களும் இவ்வியக்கத்தில் சேர்ந்து கொண்டனர். லூதர் இனம், கல்வின் இனம், சுவிங்ளி இனம், அங்ளிக்கன் இனம் என்பவை பதினாறும் நூற்றாண்டில் எழுந்த முக்கியமான புரட்டஸ்தாந்து சபைகளாகும். வெவ்வேறு புரட்டஸ்தாந்து திருச்சபைகள் வெவ்வேறு விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்தாலும் மூன்று அடிப்படைகளை அவையாவும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

(அ) விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நற்கதி அடையமுடியும் (Justification by Faith) அதாவது சரியை கிரியை என்பனவல்ல, பக்தியோகமே ஒருவனுக்கு மீட்பைக் கொண்டுவருமென்பர். இயேசு பெருமான் எனது குற்ற நிவாரண பலி என்ற உணர்வே இந்தப் பக்தி யோகத்தின் சாரமாகும். ஆகவே ஒருவனிடத்தில் நற்கிரியைகள் இந்தப் பக்தியுணர்வினாலேயே வருகின்றன. கிரியைகளினால் ஒருவன் நீதிமான் ஆவதில்லை. ஆனால் விசுவாசத்தினால் ஒருவன் நற்கதியடைந்து விட்டால், இயல்பாகவே அவனிடத்தில் நற்கிரியைகள் தோன்றும். நல்லமரம் நல்ல கனியைத்தருகின்றது. புண்ணியம் முத்திப் பேற்றின் அடையாளமேயாகும்.

(ஆ) கிறீஸ்தவ திருமறையான பைபிளே சகல இறை உண்மைகளுக்கும் ஒரே ஆதாரமாக விளங்குகின்றது. திருச்சபையில் வளர்ந்த மரபுகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் திருமறையின் அதிகாரம் கிடையாது.

(இ) சகல விசுவாசிகளும் ஆசாரியக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். (Priesthood of all believers) இது ஒரு மதகுரு மட்டுமன்றிச் சகல கிறீஸ்தவர்களுமே திருச்சபையின் ஆசாரியர்களாக இருக்கின்றனர் என்பதனை வலியுறுத்துகின்றது.

புரட்டஸ்தாந்து சபைகளின் கருத்துக்களுக்கு அதன் அடிப்படை எண்ணப்பாங்கே காரணமாகும். புரட்டஸ்தாந்தியின் சமயநிலையை, நிலைக்குத்து (Vertical) எனலாம். இறைவனுக்கும் தனக்கு மிடையில் நேர்வழித் தொடர்பு கொள்ளமுடியும் என்பது அவன் அடிப்படை நம்பிக்கை. இது கிடைக்கூறு (Horizontal) நிலைக்கு முரணானது. திருச்சபை என்ற விரிந்தகன்ற அமைப்பின் செயற்பாடுகளுக்கும் சடங்குகளுக்கும் அமிழ்ந்து போகாமலும் கடவுளுடன் நேரடித்தொடர்பு கொள்ளலாம் என்ற எண்ணமே இந்த நிலைக்குத்து மனப்பான்மையின் வெளிப்பாடாகும்.

## புரட்டஸ்தாந்து சபையின் பிரிவுகள்

புரட்டஸ்தாந்து சபைகளின் இரண்டாவது அடிப்படை நம்பிக்கையான திருமறையே சகல இறை உண்மைகளுக்கும் ஒரே ஆதாரம் என்ற கருத்து அச்சபையில் பலவித உட்பிரிவுகள் தோன்றுவதற்கு வழி வகுத்துவிட்டது. கத்தோலிக்க திருச்சபையார் இறையியல் உண்மைகளை விளக்கும் அதிகாரம், பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட திருச்சபைக்கே உண்டென்பர்.

புரட்டஸ்தாந்து வாதிகள் பைபிளை இறை உண்மைகளின் ஒரே ஆதாரமாகக் கொண்டமையால், பல சீர்திருத்தவாதி களும் ஆராய்ச்சியாளர்களும் பைபிள் உண்மைகளுக்கு வேறுபட்ட விளக்கங்களைக் கூற முற்பட்டனர். இதனாலேதான் புரட்டஸ்தாந்து கிறீஸ்தவத்தில் பல உட் பிரிவுகள் தோன்றியுள்ளன.

இங்கிலாந்தில் மெதடிஸ்த சபை பப்டிஸ்ற் சபை, கொங்றிகேஷனல் சபை என்பவை அங்ளிக்கன் சபையிலிருந்து பிரிந்தவை. இவைகள் யாவும் மிஷனரி சங்கங்களை அமைத்துப் பிற நாடுகளில் மதப்பிரசாரம் செய்தன. கொங்றிகேஷனல் திருச்சபையாரில் ஒரு பகுதியினர் பின்னர் அமெரிக்காவிற்குப் புடைபெயர்ந்து வாழ்ந்தனர். அவ்வணியைச் சேர்ந்த சிலரே 1816 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றவந்தனர். இதனாலேதான் அவர்கள் அமெரிக்கன் மிஷன் என்று அழைக்கப்பட்டனர்.

தற்காலத்தில் நூற்றுக்கணக்கான புரட்டஸ்தாந்து இயக்கங்கள் உலகின் பல பாகங்களிலும் உதயமாகின்றன. யேகோவாவின் சாட்சி, பெந்தேகோஸ்து, அசெம்ளி ஒப் கோட், ஏழாம்நாள் அட்வென்டிஸ்ட் என்பன முக்கியமானவை.

இலங்கையிலே பழம்பெரும் புரட்டஸ்தாந்து சபைகளான டச்சு கல்வின் சமயம், அங்ளிக்கன், மெதடிஸ்ற், அமெரிக்கன் மிஷன் (C. S. I) பப்டிஸ்ற் ஆகியவற்றிடையே பொதுவாக இணக்கம் காணப்படுகின்றது. பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இவற்றை ஒரே அமைப்பிற்குள் கொண்டுவரவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

O—O

---

## இறைவழிபாட்டு நூலிலிருந்து....

எங்கள் நிமித்தமாகத் துக்கத்தையும், தரித்திரத்தையும், மரணத்தையும், சகித்த அருள்நிறைந்த ஆண்டவரே, நாங்களும் எல்லா இரக்கங்களிலும் தன்னல மறுப்பிலும் உம்மைப் பின்பற்ற உமது ஆவியை அருளும். உமது மட்டற்ற அன்பினால் எங்களைத் தூண்டி நாங்களும் துன்பப்படுவோருக்கு உதவவும், வறியோர் திக்கற்றோருக்கு ஆறுதலையும் சுகத்தையும் கொடுக்கவும், பாரம் சுமக்கிறவர்களின் பாடுகளில் பங்குபற்றவும், ஏழைகள் அந்தரித்தவர்களில் உம்மையே காணவும் எங்களுக்குக் கிருபை கூர்ந்தருளுமென்று பணிவாய் வேண்டுகிறோம். ஆமென்.

---

# இஸ்லாம் ( சாந்தி வழி )

**ஜனாப். M. S அப்துல் றஹீம், B. A. Dip-in-Ed.**
*சேவைக்காலக் கல்வி ஆலோசகர் (சமூகவியல்)*
*யாழ் / வைத்தீஸ்வர வித்தியாலயம்.*

மதங்கள் அனைத்தும் மக்களை நல் வழிப்படுத்துவதையே தமது இலக்காகக் கொண்டுள்ளன. காலத்துக்குக் காலம் சில சுயநலவாதிகள் மதங்களைத் தமது சொந்தச் சுரண்டல் நலன்களுக்குப் பயன்படுத்தித் தவறாகப் பிரயோகிக்கும் போதுதான் ஏனைய மதங்களுடன் மோதல்கள் உருவாகியிருக்கின்றன என்பதற்கு வரலாறே சான்றாகும், இஸ்லாம் எந்த மதத்தையும் வெறுப்பதுமில்லை. எந்த இனத்தார் மீதும் பகைமை கொள்வதுமில்லை. மாறாக மனித சமுதாயம் தொடங்கிய காலமுதலாக நிலவி வருகின்ற அனைத்து மதங்களையும் அது கௌரவிக்கின்றது.

இஸ்லாம் என்ற அறபுப் பதத்துக்குச் சாந்தி என்பது பொருள். முற்றிலும் இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தல், வழிபடுதல் என்றும் இப்பதம் பொருள் தரும். இஸ்லாம் மூதாதையர் வழிவந்த உடைமையல்ல. அதன் கொள்கைகளை யார் யாரெல்லாம் பின்பற்றுகின்றார்களோ அவர்களுக்கெல்லாம் உரிமையானது அது.

## தோற்றம்

மனித வரலாற்றில் இஸ்லாத்தை ஸ்தாபித்தவர் முஹம்மத் (ஸல்) என்றுதான் அநேகர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இறைவனுக்கு முன்னே மனிதன் முழுமையாக அடிபணிதல் வேண்டும் என்ற ஒரே வழிமுறையைத் தான் தொடக்க காலத்திலிருந்து இறைவன் வழங்கினான் என்பதை இறைமறையாம் திருமறை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. நூஹ் (அலை) நோவா - இப்றாஹீம் (அலை) ஏப்ரகாம் - மூஸா (அலை) மோஸஸ் - ஈசா (அலை) யேசு - ஆகியோரும் ஏனைய இறை தூதர்களும் உலகின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டார்கள். ஒரே நெறியினைத்தான் அவர்கள் எல்லோரும் போதித்தார்கள். இதே சங்கிலித் தொடரில் இறுதியாக வந்த தூதரே முஹம்மத் (ஸல்) அவர்கள். எனவே, இஸ்லாம் காலத்தால் பிந்தியமதம் என்ற கூற்றுத் தவறானது. பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்களின் இடைச் செருகல்கள் - சுயகருத்துப் புகுத்தல்கள் - மூலக் கொள்கையினைக் கறைப்படுத்தி விட்டதனால் அவை யாவற்றையும் களைந்து, மூல நெறியான இஸ்லாத்தைத் தூய்மையான மூலவடிவில் வழங்கும் பணியைத் தான் முஹம்மத் (ஸல்) அவர்கள் செய்தார்கள்.

இஸ்லாம் என்றால் நிறைவான சாந்தியிலிருத்தல், நற்குணங்கள் நிறைந்து நேர்மையாக வாழ்வதற்கு உண்மையாக உழைத்தல் என்பதே பொருள். இஸ்லாமிய வாழ்க்கை முறை எல்லாக் காலங்களுக்கும் எல்லா இனத்தாருக்கும் பொருத்தமான முறையில் அமைந்துள்ளன. குழப்பமான மறைமுகமான விடயங்கள் எதுவும் அதில் இல்லை. இஸ்லாம் மார்க்கத்தின் விரிந்த நோக்கமும் அதன் தரும சிந்தனையும் வேண்டுமென்றே மதவெறி பிடித்த சிலரால் மறைக்கப்பட்டு விட்டன.

திருமறையின் 5 ஆம் அத்தியாயத்திலும், வேறு நூறு வசனங்களிலும் ஒரு விடயம் தெளிவாக எடுத்துக் கூறப்படுகின்றது. மோட்சம் என்பது, முஹம்மது நபியைப் பின்பற்றுவோருக்கு மட்டும் ஒதுக்கி வைக்கப்படவில்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

"மெய்யாகவே விசுவாசிகளும் (முஸ்லிம்களும்) யூதர்களும், கிறிஸ்தவர்களும்,

ஸாபிகளும், எவர் இறைவன் மீதும் இறுதி நாளின் மீதும் விசுவாசம் கொண்டு, நற் செயலும் செய்கின்றார்களோ அவர்களுக்கு, அவர்களுடைய இறைவனிடம் சன்மானம் உண்டு. அவர்களுக்கு அச்சமும் துக்கமும் இல்லை.'' - ( மாயிதா 5 : 69 )

இஸ்லாம் ஒரு மதம்மட்டுமன்று. அது ஒரு வாழ்க்கை முறையுமாகும். ஒரு சில சடங்குகளைச் செய்து விடுவதனால் ஒருவன் முஸ்லிம் ஆகிவிடமுடியாது. வாழ்வின் அனைத்துத் துறையிலும் (அரசியல் பொருளாதாரம், சமூகவாழ்வு, குடும்ப வாழ்வு) அது விரவியுள்ளது.

ஆண்டவனின் பாதையில் அனைவரும் சமமானவர்களே! மனிதகுலம் முழுவதையும், அகில உலகங்களையும் இயற்கையின் ஒரே அரசாகவும், அதை ஒரே நோக்குள்ளதாகவும் இஸ்லாம் கருதுகின்றது. இஸ்லாம் மார்க்கத்தில் பிறந்த ஒருவனுக்கும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய ஒருவனுக்கும் இடையில் எவ்வித வேறுபாடுமில்லை. இஸ்லாம் எவரையும் தீண்டாதவன் என்று ஒதுக்கி விடுவதில்லை. நிறமும், மொழியும், இரத்தமும் காரணமாக யாரையும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பிரிப்பதற்கு இஸ்லாம் இடம் தருவதில்லை.

## அடிப்படைக் கொள்கைகள்

1. மனித சமுதாயம் முழுமையும் ஒரே இனம். மனிதகுலம் முழுமைக்கும் ஒரு பொதுவான இயற்கையுண்டு. இப் பிரபஞ்சம் அனைத்தும் இயங்குவது, ஒரே சட்டத்துக்கமையவே! பூமியும், அதிலுள்ளவை அனைத்தும் மனிதனுக்கு நலன் புரியப் படைக்கப்பட்டவைகளே. ஆண்டவனாகிய மூலப் பரம்பொருளின் சட்டத்துக்கு மனிதன் கீழ்ப்படிந்து நடக்கும் போது அவனுக்கு உயர்வு இருக்கிறது. சன்மானம் பெறுவதிலும், தண்டனை பெறுவதிலும் எல்லா மனிதர்களும் சமமானவர்களே!

2. உலகம் தோன்றிய கால முதலாக வந்துள்ள அனைத்து நபி மார்களும் ஒரே பொதுவான சகோதரத்துவத்தின் அங்கத்தினர்களே, அத்துடன் ஒரே தூதையே அவர்கள் கொண்டும் வந்தனர்.

3. முற்கால நபிமார்களையும், வேதங்களையும் போற்றி அவர்கள் கொண்டு வந்த உண்மையில் நம்பிக்கை கொள்வதும் கடமையாகும்.

4. எல்லா மதத்தாருடைய வணக்க ஸ்தலங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றில் ஒவ்வொருவரும் தத்தம் முறைப்படி வணங்குவதற்கு உரிமை இருக்க வேண்டும்.

5. மக்களுக்கான பணியைச் செய்தலே வாழ்க்கையின் மிக மேலான குறிக்கோளாகும்.

6. தேவையாளர், வறுமையாளர், கடன்பட்டோர் ஆகியோருக்கு உதவி செய்தல். அடிமைகளை விடுதலை செய்வித்தல், ஒவ்வோர் ஆண்டிலும் தனது சொத்தில் நாற்பதில் ஒரு பங்கை ஏழை வரியாகக் கொடுத்தல், ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். இதுதான் இஸ்லாமிய சகோதரத்துவத்தின் சட்டத் தொகுப்பும் அடிப்படைக் கொள்கைகளுமாகும்.

## சமய நம்பிக்கைகளும் செயற்பாடும்

1. இந்தப் பிரபஞ்சத்தையும் உலகத்தின் அனைத்துப் பொருள்களையும் படைத்தவன், பரிபாலிப்பவன், உருவமற்ற அநாதியான சக்தி — ஆண்டவன் — என்று நம்புதல் முதலாவது நம்பிக்கை ஆகும். அந்த ஆண்டவனை முஸ்லிம்கள் அல்லாஹ் என அழைக்கின்றனர். அவன் ஒருவன். இணை, துணை இல்லாதவன். பெற்றோரும் இல்லை. பிள்ளைகளும் இல்லை. ஆணுமல்லன். பெண்ணுமல்லன். தனித்தவன், நிலையானவன், உருவம் இல்லாதவன், ஐயறிவுகளால் அறிய முடியாதவன், கருணையாளன், அன்பானவன். என்றும் உலகத்தின் அனைத்து நிகழ்வுகளுக்கும் காரணமானவன் என்று மனத்தாற் பரிபூரணமாக நம்பிச் செயற்படுதல் முதலாவது சமய நம்பிக்கையாகும்.

2. மலக்குகள் என்னும் தேவதூதர்கள் அல்லாஹ் விடமிருந்து வருகின்ற கட்டளை களுக்கு முற்றிலும் அடிபணிபவர்கள். தத்தமக்குச் சாட்டப்பட்ட பணிகளை நிறைவேற்றுவார்கள். அல்லாஹ் இட மிருந்து நபிமார்களுக்குத் தூது கொண்டு வருபவரும் இவர்களுள் ஒருவரே. இவர்கள் ஆண்களுமல்லர், பெண்களுமல்லர் என்றும் நம்புதல்.

3. உலகம் படைக்கப்பட்ட கால முதலாக தன்னால் படைக்கப்பட்ட மனிதனை நல்வழியில் நடத்த லட்சக்கணக் கான நபிமார்களை முன்மாதிரியாக அனுப்பி அவர்களுக்கெல்லாம், காலத்திற் கேற்ற கட்டளைகளையும் வேதங்களையும் அனுப்பி வைத்தான் அல்லாஹ். அவ்வாறு வந்த அத்தனை வேதங்களையும் நம்புதலும் அனைத்து வேதக் கருத்துக்களினது திரட் டாக இறுதியில் வந்த திருக்குர்ஆனைப் பூரணமாக நம்பி செயற்படுத்தலும் அடுத்த நம்பிக்கையாகும். ஏனைய வேதங்களைப் போல எவ்விதமான மாற்றம், செருகுதல் என்பன எதுவுமின்றி இன்று வரை உலகம் எதிர் நோக்கியிருக்கின்ற அனைத்துப் பிரச் சனைகளுக்கும் தீர்வு தரவல்லதாகவும் இருக்கின்றது.

4. நபிமார்களை நம்பி அவர்கள் காட்டிய முன்மாதிரிகளைப் பின்பற்றி ஒழுகுதற்கு மனிதர்களை நல்வழிப்படுத்தும், மனித சிரேட்டர்களை அந்த மனிதர்க ளிடம் இருந்து தான் அல்லாஹ் தெரிந் தெடுத்தான். அவர்களும் சாதாரண மனிதனின் ஆசாபாச உணர்வுகளை நன் குணர்ந்து வாழ வழிகாட்டினர்.

5. உலகிலுள்ள அனைத்துச் சிருட்டி களும் முற்றாக அழிக்கப்படும் ஒரு நாள் வரும். அந்த நாளின் பின் அனைவரும் எழுப்பப்பட்டு விசாரணை ஒன்று நடை பெற்று அவ்விசாரணையின் பின்னர் உரிய கூலி வழங்கப்படும் என நம்புதல்.

6. நமது செயல்கள் யாவும் நம் எண்ணப்படி நடப்பதில்லை. நமது நாட்டமும் கூட அவ்வாறே! அனைத்து எண்ணங்கள். செயல்கள், நிகழ்வுகள் ஆகியவற்றுக்கும் காரணமானவன் அல்லாஹ்வே என நம்புவதும் இஸ்லாமி யரின் நம்பிக்கையின் ஓர் அமிசமாகும். இந்த அடிப்படையிலே தான் முஸ்லிம் ஒருவனின் செயற்பாடும் அமைந்திருக்கும். அவன் முற்றிலும் அல்லாஹ்வுக்கு வழிப் பட்டு நடப்பான். தன்னைப் படைத்து வாழ்வளித்த இறைவனுக்கு நன்றியாகத் தினமும் ஐந்துவேளை தொழுவான்; ஏழை களின் பசித்துயர் அறியவும் பிறர் அறியாது உள்ளார்ந்த ரீதியாக இறைவனை உணர்ந்து அடிபணிந்து தனது சகல உடல் இச்சைகளான பசி, தாகம், மோகம் ஆகியவற்றைத் துறந்து ஒரு மாதம் நோன்பு நோற்பான். சமுதாய அமைப்பில் ஏற்பட்டுவிட்ட இல்லாமையை அடியோடு இல்லை எனும் படியாகத் தனது சொத்தில், உழைப்பில் 1/40 ஐ ஏழைவரியாகக் கொடுப் பான். நிற, இன, மொழி, வர்க்க, தேசிய உணர்வுகளுக்கப்பால் உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாகத் திரளும் மக்காவுக்கு வாழ்வில் ஒருமுறை சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றுவான்.

## சகோதரத்துவம்

இஸ்லாமியன் ஒருவனுக்கு மற்றைய வர்கள் எல்லோரும் சகோதரர்களே! அன்றாட வாழ்வில் தொழுகையின் போது பணக்காரனும், ஏழையும், எஜமானனும், வேலைக்காரனும் எத்தகைய வேறுபாடு மின்றி இறைவன் முன் நிற்கிறார்கள். அல்லாஹ்வின் பார்வையில் அனைவரும் சமமே. தொழுகை சிறந்த உளப் பயிற்சி யாகவும், உடற் பயிற்சியாகவும் மாறு கின்றது. அழுக்குடன் இருப்பது தான் மனித வாழ்வின் அடையாளம் என்று கருதிய உலகத்துக்கு உடலும், உடையும், இடமும் சுத்தமாக வைத்திருக்கும் பழக் கத்தைத் தொழுகை ஏற்படுத்தியது. இஸ்லாத்தில் தர்மம் செய்தல், விதவை, அநாதை, உதவியற்ற ஏழை ஆகியோரை ஆதரித்தல் என்பன மதக் கடமைகளாக்கப் பட்டுள்ளன. எல்லா மனிதர்களும் ஒரே தாய் தந்தையரின் சந்ததிகளே. நிறம், இனம், குலம், நாடு, மொழி, கலாசாரம்,

தொழில் இவைகாரணமாக ஏற்றத்தாழ்வு உண்டு என்ற கருத்துக்கு இஸ்லாத்தில் இடமில்லை. இறைவன், இடம் திசை போன்ற கட்டுப்பாடுகளை விட்டுத்தூய்மை யானவனாய் இருந்தும், தொழுகையில் புனித மக்காவிலுள்ள கஃபா என்னும் இறையில்லத்தை முன்னோக்கியேமுஸ்லிம்கள் தொழுகின்றார்கள். இறையில்லமான கஃபா, உலகளாவிய சகோதரத்துவக் கொள்கையை ஏற்றிருக்கும் முஸ்லிம்கள் எனும் இலட்சிய சமுதாயத்தின் கேந்திர மாகவும் அச்சாணியாகவும் திகழவேண்டும். உலகளாவிய ஒருமைப்பாடு தோன்ற அது வழிவகுக்கின்றது.

## சமூக அமைப்பு

மனித இனம் என்பது ஆண், பெண் இரு பாலாரையும் குறிக்கும். பெண்பாவத்தின் வடிவமல்லள். வெறுத்து ஒதுக்கத் தக்கவளோ தீண்டத்தகாதவளோ அல்லள், இஸ்லாம் துறவறத்தை எதிர்க்கின்றது. திருமணம் மனிதனின் இயற்கைத்தேவை. எனவே, இல்லற நெறியை விட்டுப்பிறழ்ந்து செல்வது மனித இயற்கையையே எதிர்த்துக் கலகம் புரிவதற்கு ஒப்பானது என இஸ்லாம் கருதுகின்றது. திருமணத்தினால் ஆண், பெண் இருபாலாரினதும் ஒழுக்கம் பாதுகாக்கப்படுகின்றது. இதனால் குழந்தைகளுக்குத் தாய் தந்தையரின் பராமரிப்பும், கண்காணிப்பும், பாதுகாப்பும், ஒழுக்கப் பயிற்சியும் கிட்டுகின்றன.

நெருங்கிய உறவினர் தவிர்ந்த எவரையும் துணையாகத் தெரிந் தெடுக்க இஸ்லாம் அனுமதிக்கிறது. கணவனும், மனைவியும் மனமொத்து வாழ முடியாத சந்தர்ப்பத்தில் கணவனோ, மனைவியோ தமது சொந்த விருப்பின் பேரில் பிரிந்து செல்லும் உரிமையை வழங்குகிறது. இவ்வாறே இருவரும் இரண்டாவது முறையாக வேறு எவரையேனும் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கின்றது. விதவை உயிருடன் வாழவும் இரண்டாவதுதிருமணம் செய்து கொள்ளவும் கூட இஸ்லாம் அனுமதிக்கின்றது. விதவைகளுக்கு வாழ்வளிப்பதை இஸ்லாம் நற்செயலாகவே கருதுகிறது. இவ்வாறு விதவைகள் மறுமணத்தால் விதவைகளின் அநாதைக் குழந்தைகள் புகலிடம் பெறுகின்றன; அவள் வாயிலாக சமூகத்தில்தீயநடத்தை பரவுவதையும் இஸ்லாம் தடுக்கின்றது. சில குறிப்பிட்ட நிலைமைகளில் மட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணம் செய்து கொள்ள அனுமதிக்கும் இஸ்லாம் அவர்களிடையே நீதி செலுத்த வேண்டும் என்று வற்புறுத்துகின்றது. மணபந்தமின்றி ஆண் பெண் இருபாலாரும் சுதந்திரமாகப் பாலியல் உறவில் ஈடுபடுவதை இஸ்லாம் தடை செய்கின்றது; கடுமையான தண்டனை அளிக்கின்றது.

எவனாவது ஒரு மனிதனுக்குத் தீங்கிழைக்கப்பட்டால் தீங்கிழைக்கப்பட்டவன் மன்னித்தாலன்றி இறைவன் மன்னிக்க மாட்டான் என்று வலியுறுத்துவதன் மூலம் தனி மனித உரிமை எவ்வளவு தூரம் மதிக்கப்படுகிறது என்பது புலனாகும். இறைவனுக்கு மாறு செய்வது தவிர்ந்த பெற்றோரின் பிற கட்டளைகள் அனைத்துக்கும் முற்றிலும் பணிந்து நடக்கும்படி திருமறை கட்டளையிடுகின்றது.

அண்டை வீட்டார். நண்பர்கள் ஆகியோரின் உரிமைகள் அவர்கள் முஸ்லிமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், விதவைகள், அநாதைகள் ஏழை எளியவர்கள் தேவையுள்ளவர்கள், பிரயாணிகள் என மனிதர்கள் அனைவரதும் உரிமைகளையும் நிறைவேற்றுவது முஸ்லிம் ஒருவரின் கடைமையாகும். "நீங்கள் பூமியில் இருப்போர் மீது கருணைகாட்டுங்கள் வானத்திலிருப்பவன் (இறைவன்) உங்கள் மீது கருணை காட்டுவான்". —(நபிமொழி)

## பொருளாதாரம் :

மக்களிடையே திறமைகளிலும், ஆற்றல்களிலும், வேறுபாடும் ஏற்றத் தாழ்வுகளும் நிலவுகின்றன. இதனால் அவர்களிடையே இயற்கையாகவே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. இந்த இயல்பான ஏற்றத் தாழ்வினால் வெறுப்புணர்வும், பகைமையும், அநீதியும் ஏற்படாமலிருக்க

இஸ்லாம் பல கட்டுப்பாடுகளையும், விதி முறைகளையும் ஏற்படுத்துகின்றது. எனவே நீதியும் சமநிலையும் மிக்க சமூக பொருளாதார அமைப்பை நிலைநாட்டுகிறது. எடுத்துக் காட்டாக 'சக்காத்' (ஏழைவரி) 'உஷ்ரு' ஆகியவற்றை இஸ்லாம் கட்டாயமாக்கியுள்ளது. செல்வநிலையினால் கர்வம் கொள்வதையும், இல்லாமையால் ஆசைக்குப் பலியாவதையும் இஸ்லாம் தடுக்கிறது. பொருளாதார அமைப்பை வட்டி, லஞ்சம் அளவை நிறுவையில் குறைப்பு, மோசடி, ஏமாற்று, பித்தலாட்டம், சதி, சுரண்டல், பதுக்கல், வீண்விரயம் முதலிய தீமைகளை மாசுபடுத்தாவண்ணம் இஸ்லாம் தூய்மைப்படுத்துகின்றது. எந்தத் தொழில் முறைகளால் தனிமனிதனின் அல்லது சமூகத்தின் ஒழுக்கம் சீர் கெட வாய்ப்பு உள்ளதோ, நாட்டின் செல்வம், வளம் ஒரு சிலரின் கரங்களில் குவிந்து விட வாய்ப்பளிக்கிறதோ அவற்றையெல்லாம் இஸ்லாம் தடை செய்து விடுகிறது.

**அரசியல்**

இறைவனே இப்பிரபஞ்சத்தின் ஆட்சியாளன். அவனே சட்டம் இயற்றுபவன். மனிதன் சர்வ அதிகாரங்களும் கொண்ட ஆட்சியாளன் அல்லன். ஆட்சியிலிருக்கும் பிரதி நிதியும் இறைசட்டத்திற்குக் கட்டுப்பட்டவரே.

நீதித்துறைச் சுதந்திரம் இஸ்லாமிய அரசியலின் இன்றியமையாத அம்சமாகும். மேலும் இஸ்லாமிய அமைப்பில் நீதி மன்றமும் இறைச் சட்டத்திற்கு கட்டுப்பட்டதே. ஆட்சியமைப்பை நடத்திச் செல்ல ஒழுக்கமும் நீதி நேர்மையும் இறையச்சமும் கொண்ட இறைவனின் நல்லடியார்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இஸ்லாத்தில் மன்னராட்சி முறையோ சர்வாதிகாரமோ கிடையாது. அறிஞர் பெருமக்களின் ஆலோசனைகளின் படி நடத்தப்படும் ஆட்சி, அநீதியை அகற்றி, நீதியை நிலைநாட்டி, நன்மைகளைப் பரப்பி தீமைகளை வேரறுக்கும்.

ஏழைகள் பலவீனர்களைப் பாதுகாத்தல், அவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல், மக்களின் உயிர் உடைமை, மானம் மரியாதை, ஆகியவற்றைக் காத்தல் என்பன இஸ்லாமிய அரசின் பொறுப்பாகும்.

சுருங்கக் கூறின் ஒரே இறைவனின் மீதும் எல்லா இறை தூதர்கள் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்வதும் இறைவனுக்கும், இறை தூதருக்கும் உள்ளத் தூய்மையுடன் அடிபணிந்து நடப்பதும்தான் இஸ்லாம் ஆகும்.

O-O-O

---

''ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம் — பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு''  — நாலடியார்

O-O-O

பல்வேறு இடங்களில் நின்றும் புறப்படும் நதிகள் வெவ்வேறு வழியே ஓடிவரினும் அவை ஒரே கடலில் போய்ச் சங்கமமாவதுபோல், அபிருசி வேறுபாட்டால் மக்கள் பற்றும் மார்க்கங்கள் வேறுபடினும் அவர்கள் முடிவிலே உனது பொற்பாத கமலங்களையே அணைகின்றனர். — இருடிகள்

---

# உலக மதங்களின் ஒருமைப்பாடு

**கலாநிதி. ப. கோபால கிருஷ்ணன்**
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனிதன் தோன்றிய காலந்தொட்டே சமயமும் இருந்து வருகின்றது. மனித வரலாற்றிலே காலங்காலமாக மனிதன், தனது வாழ்க்கைத் தத்துவத்தைப்பற்றியும், அதன் முக்கியத்துவத்தினைப்பற்றியும் இடையறுது சிந்தித்து வந்துள்ளான். தனக்கும் அப்பால் ஒரு சக்தி இயங்கி வருவதை அவன் பூரணமாக நம்பியதன் விளைவாகவே சமய உணர்வுகள் பரிணமிக்கத் தொடங்கின. இவ்வாறு பண்டுதொட்டு மனித இனத்தின் சிந்தனையில் சமயம் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுவந்துள்ளது. இதன் அடிப்படையில் சமயம் மனிதனது வாழ்வாகவே அமைந்து விடுவதோடன்றி அவனது ஆன்மாவுக்கு ஒளியாகவும் பாதைக்குத் தீபமாகவும் விளங்குகின்றது. மனிதன் அடைய முயலும் உள்பொருள் (Reality) பற்றிய அறிவை உறுதிப்படுத்துவதும், அவனை ஆன்மிக வாழ்வில் முழுமை பெறச்செய்வதும் சமயத்தின் பணியென அறிஞர் கருதுவர். சமயமாவது மனிதர்கள் அறிவு விளக்கம்பெற்று உறுதி எய்தி, இன்பவாழ்வு அடைதற்குச் சாதகமாயுள்ளது எனவும் விளக்கம் தரப்படுகின்றது.

தீர்க்கதரிசிகளும் இறைவனடியார்களும் சமயம், வாழ்வின் பகுதியன்று; அது வாழ்வின் முழுமை என விளக்கியுள்ளனர். ஒருமைப்பாடுபற்றிய உள்ளுணர்வே சமய அனுபவத்தின் உச்சக்கட்டமாக அமைகின்றது. தனிமனிதனுக்கும், சார்பற்ற பரம்பொருளுக்கும் இடையேயுள்ள தடைகளைத் தாண்டி வருவதிலேயே சிறந்த மறைஞானியின் வெற்றி அடங்கியிருக்கின்றது. மறைஞானியின் நிலையில் எத்தகைய வேறுபாடுமின்றி நாம் பரம்பொருளோடு ஒன்றுய் விடுகின்றேம். அத்துடன் நாம் ஒன்றுன தன்மை பற்றிய உணர்வும் நமக்கு இருக்கின்றது. இதுவே இட வேறுபாட்டாலும் இன வேறுபாட்டாலும் மாறுபடாமல் என்றும் நிலைத்துவாழும் வெற்றியுடன்கூடிய மறைஞான மரபாகும். சமய அனுபவமும் தத்துவ உணர்வும் கலந்த ஓர் உயர்ந்த அனுபவமே மறைஞான அனுபவமாகும். மறைஞானியின் நிலை பிரமாண அதீத நிலை. அதாவது எத்தகைய பிரமாணங்களோ கட்டுப்பாடுகளோ அவனைப் பாதிப்பதில்லை. காலம், இடம், மதம், சாதி, இனம் போன்ற எத்தகைய வேறுபாடுகளும் அற்று மனிதகுல மேம்பாட்டுக்கெனத் தன்னை அர்ப்பணித்த ஒரு நிலையாகும். இந்நிலையில் — அதாவது மனிதகுல மேம்பாட்டுக்கென அர்ப்பணிக்கும் நிலையிலேயே, உலகில் உள்ள அனைத்து மதங்களும் தம்முள் ஒற்றுமையுற்று விளங்குகின்றன.

இந்துமதக் கொள்கையிலும், பிளேட்டோவின் புதிய கொள்கையிலும், சூஃபிசக் கொள்கையிலும், கிறித்துவ மறைஞானக் கொள்கையிலும் திரும்பத் திரும்ப இதே குறிப்பு வருவதை அவதானிக்கலாம். இது, மறைஞானிகளுடைய கூற்றுக்களிலெல்லாம், நிலையான ஒரே தன்மை இழையோடி நிற்பதைக் காட்டுகின்றது.

சிறந்த உலக சமயங்கள் அனைத்தும் தத்துவ ரீதியில் பொதுமைக்குணம் வாய்ந்தவை. அவற்றுட் சில சமய குரவர்களால் தோற்றுவிக்கப்பட்டவை. மற்றவை பெரும்பாலாரான மெய்யறிவாளர்களுக்கு உய்த்துணர்த்தப்பட்டவையே! இந்துசமயம் தனிமனிதனுல் நிறுவப்பட்ட ஒன்றன்று. பழங்காலஞானிகளின் பணி, ஏனைய சமயங்களில் போலன்றி, வேறுவிதமாக அமைகின்றது. அத்தகைய ஞானிகள், சமய உண்மைகளை, மனித குலத்திற்கு எடுத்துச்செல்லும்

வாய்க்கால்களாகவே பயன்பட்டனர். என லாம். சமயங்களிற் பல, மனிதனுள் உறை யும் ஆன்மாவுடன் தொடர்பு கொண்டுள் ளன. இவற்றுள் ஒன்றுவது எல்லா மனித ராலும் தழுவப்படவில்லை. எனினும் மனி தனை முழுமை பெறச் செய்வதிலேயே உலக சமயங்களின் ஒருமைப்பாடு அடங்கியுள்ளது. ஒவ்வொரு சமயத்திற்கும் முறையான சடங்குகள் உண்டு. அவை அவ்வச் சமயத் தைப் பின்பற்றும் மனிதரது உள்ளத்திலே சமய உணர்வையும், சமய அனுபவத்தினையும் வளர்ப்பன. மனிதன் அறநெறியில் முழுமை பெறுவதற்கு வேண்டிய அறிவியற் கோட் பாடுகளை ஒவ்வொரு சமயமும் தன்னளவிற் கொண்டு விளங்குகின்றது. அவை ஆன்மிகப் பிரயாணியை இறைவனுகிய இலட்சியத்தை நோக்கி நடத்திச் செல்லும் வழியையோ வழிகளையோ உடையனவாயிருக்கின்றன.

விஞ்ஞானத்தின் பயனுய் ஏற்பட்ட தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியாலும் தொழில் நுட்பவியலின் மேம்பாட்டினுலும் உலகம் மிகவும் சுருங்கிய நிலையில் அனைவோ ராலும் எளிதில் அணுகக்கூடியதொன்றுக அமைகின்றது. விஞ்ஞான வளர்ச்சியினுல் மனிதன் இயற்கை சக்திகளை வெற்றிகொண் டுள்ளான். ஒரு பொறியை அழுத்துவதன் மூலம் உலகின் மூன்றில் இரண்டு பகுதியை அழித்துவிடும் ஆற்றல் பெற்றுள்ளான். அழிக்கும் ஆற்றல் இன்று எவரும் அஞ்சும் அளவுக்கு மனிதனது கைகளில் உள்ளது. உலக ஒற்றுமை இன்று உடனடித் தேவை யானதொன்றுகவுள்ளது. உலகியல் பொரு ளாதார அரசியல் அமைப்புகளின் அடிப் படையில் உலகின் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. உண்மை யில் இத்தகைய உலகியல் ரீதியான ஒருமைப்பாடு ஏற்பட வேண்டுமாயின் மக்களது சிந்தனையில் உளவியல் ரீதியான ஒற்றுமை ஏற்படுதல் வேண்டும். அத்துடன் ஆன்மிக ஒருமைப்பாடு மிகவும் தேவைப் படுகின்றது. இதற்குச் சமயங்களின் பங்கு இன்றியமையாது வேண்டப்படுகின்றது. நாளாந்தம் வருகின்ற புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடியதும் மக்களை ஒற்றுமை வளையத்தினுள் கொண்டுவரக் கூடியதுமான சமயமே இன்றைய தேவை. மனிதனது துயர்களைத் துடைப்பதற்கும் சமூக இன்னல்களைக் களைவதற்கும் துணை புரிய வேண்டும். சமயம்இன்றைய நவீன யுக மனிதனை எவ்வகையிலும் திருத்திப்படுத்து வதொன்றுக அமையாது. வேற்றுமைகளை உருவாக்கும் கொள்கைகளைக் கொண்ட சமயம் ஒருமைப்பாட்டுக்குப் பொருத்த மற்றதாகும். உலக சமயங்களின் ஊடே காணப்படும் ஒருமைப்பாடு உலக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வித்திட வல்லது. உலகமே ஆற்றல் வாய்ந்த புதிய தொரு வாழ்க்கைக்குரிய களம்; அனைத்து சமயங்களும் அனுபவபூர்வமானவை என்ற காரணத்தால் அவற்றின் ஒருமைப்பாடு நற்பயனை அளிக்கவல்லது என்பது டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் போன்ற மேதை களின் கருத்தாகும்.

சிந்துவெளி நாகரிக அகழ்வுகளினின்றும் வெளிக்கொணரப்பட்ட சிவனது வடிவம் அக்கால மக்களது உள்ளார்ந்த நிலையின் மேம்பாட்டுக்குத் துணை செய்திருக்க வேண் டும். அக்கால மக்களின் ஆன்மிகஉணர்வைப் புரிந்துகொள்ள இத்தகைய சின்னங்கள் துணைபுரிய வல்லன. உபநிடதங்கள் பிரம வித்தையை அல்லது ஆத்ம வித்தையை அறிதல் வேண்டும் என வற்புறுத்துகின் றன. மனிதன் தனது புலன்களை வெளி விடயங்களில் ஈடுபடுத்துவதனுல் தனது உள ரீதியான தொடர்பினை அறுத்துவிடு கின்றுன் எனவும் தன்னையே இழந்தவனுக உள்ளான் என்றும் கடோபநிடதம் கூறு கின்றது. அவனது ஆன்மா வெளிவிடயங் களிலும் உடைமைகளிலும் அதிகாரத் திலும் மாத்திரமே ஈடுபடவல்லது. மனிதன் ஆன்மிகத்திற்கான நேர்வழியைக் காண விழைவானுகில் அவன் தனது புலன்களை உள்நோக்கிய நிலையில் வைத்திருக்க வேண்டும். ஆன்மா இழந்த அந்த உயர் பேரின்பத்தை அடைய இதுவே வழி. ஜைனன் ஒருவன் தன்னைத்தானே வென்ற வன் எனக் கருதப்படுகின்றுன். அவன் மகா வீரன் எனப்படுகின்றுன். உள்ளத்தின் எதிரி களை எதிர்த்து வென்றவனுவான். புத்தர் ஒருவரின் சிந்தனைசக்தியைப் பயன்படுத்தி தெளிவாக கருத்துக்களைச் சமர்ப்பிப்பதன்

மூலம் தமது கருத்துக்களை புரிந்து கொள்ளச் செய்தார். ஒருவனது தருமத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளச் செய்து அவருக்கு இறுதியான நிருவாண சுகத்தை அடையத்தகுந்த சூழ்நிலையை அமைப்பதில் புத்த பகவான் ஒரு சிறந்த ஆசாஞக விளங்கிஞர். புத்த மதமானது மனிதனைப் பற்றிய பூரண ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆத்மிகமான மஞேதத்துவமான ஒழுக்கமொன்ருகும். அது ஒரு வாழ்க்கை மார்க்கமாகும். மனிதனின் ஆத்மிகத்தையும் ஒழுக்கத்தையும் வளர்க்க, மனதைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமாக வளர்க்க வேண்டிய அறிவைப் பெறுவதற்கும் நிர்வாணம் என்ற இறுதி எல்லையை வெல்லுவதற்கும் அது வழி காட்டுகின்றது. பாவத்தை விலக்கி புண்ணியங்களைச் செய்து மனதைத் தூய்மைப் படுத்தும் வழியை அது கற்பிக்கின்றது. கற்றல், கற்றுக்கொண்டவாறு நடத்தல், பயன் பெறுதல் என்ற மூன்று லட்சணங்களும் புத்த மதத்தில் உள்ளன. கற்றல் பற்றி பௌத்தம் கூறும் இக்கருத்து கற்றல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்தோடு இயைபுடையதாகத் தென்படுகின்றது. 'இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக' என்ற பிருகதாரண்ய உபநிடதக் கருத்தோடும் இது உடன்படுகின்றது.

புத்த நூலாகிய தம்மபதம் கூறும் சில சிந்தனைகள் இந்துக்களின் பிரஸ்தானத்திரயத்தில் ஒன்ருகிய பகவத்கீதை தரும் உபதேசங்களுடன் உடன்பாடு கொள்ளுகின்றன. 'நன்கு வேயப்படாத வீட்டுக்குள் மழைநீர் ஒழுகுவதுபோல நன்கு பயிற்றப் படாத மனத்துள் ஆசைகள் புகுந்து விடுகின்றன' என்றும் ''ஓயாத ஊக்கத்திஞலும் விழிப்பிஞலும் ஆர்வத்திஞலும் புலனடக்கத்திஞலும் அறிஞன் வெள்ளத்தில் மூழ்கிவிடாத தீவைத் தனதாக்கிக் கொள்கின்ருன்'' என்றும் ''இரவு நீண்டது கண் துயின்றவனுக்கு; ஒரு யோசனை நெடுந்தூரம் களைப்புற்றவனுக்கு; நல்லறத்தைத் தெரிந்து கொள்ளாதவனுக்கு பிறப்பிறப்பாகிய சம்சாரம் நீண்டது'' என்றும் தம்மபதம் கூறும் கருத்துக்கள் கீதையோடு ஒப்பிடத்தக்கன. ''நெருப்பானது புகையிஞலும், கண்ணடி அழுக்கிஞலும் சிசு கருப்பையிஞலும் மூடப்பட்டிருப்பது போன்று ஞானம் ஆசையிஞல் மூடப்பட்டிருக்கின்றது'' எனவும் சிரத்தையுடையவன் ஞானத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பவன், புலன்களை வென்றவன் ஞானத்தைப் பெறுகின்ருன். ஞானத்தைப் பெற்று விரைவில் மேலாம் சாந்தியடைகின்ருன். எனவும் ''பெரும் முயற்சியுடைய யோகி பாபங்களற்றுப் புனிதவாஞய், பல பிறவிகளிற் பக்குவமடைந்து பரகதியைப் பெறுகின்ருன்; எனவும் கீதை தரும் சிந்தனைகள் பௌத்த சிந்தனைகளோடு ஒப்பிடத்தக்கனவாகவுள்ளன. தன்னைத் தூய்மைப் படுத்துவதில் சிரத்தையுடையவஞக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையில் இவ்விருமதங்களும் உடன்பாடு கொள்கின்றன. அத்துடன் மனிதனிடத்தே உள்ள அவித்தையாகிய அறியாமையை நீக்கி வித்தையாகிய போரறிவு பெறவேண்டுமென வற்புறுத்துகின்றன. சமயம் என்பது வெறுமனே சமயசாஸ்திரங்களைக் கற்பதிஞலோ அன்றி, சமயக் கிரியைகளை ஆற்றுவதஞலோ நிறைவுபெறுவதில்லை. உண்மையில் அது அனுபவ பூர்வமான ஆத்மிக நாட்டமாகும். சாதனைகள் மூலமே அது அடையப் படத்தக்கதாகும். சமயத்திஞல் மனிதனது வாழ்வு நிறைவு பெற்று, அதன் மூலம் பெறப்படும் அனுபவத்திஞல் அவனது வாழ்வின் ஒவ்வொரு அமிசமும் உயர் நிலையையடைவதற்கு வழி பிறக்கின்றது. எனவே உலகில் உள்ள அனைத்து சமயங்களின் நோக்கம் மனிதனது நிலையையும் உணர்வுகளையும் உயர் நிலையடையச் செய்வதாகும். மனிதன் என்றும் குறைவுள்ளவனே. எனவே நற்குணங்கள் அவன் மூலம் வெளிக்கிளம்புவதற்கேற்ற வகையில் சமயம் உறுதுணையாக அமைதல் வேண்டும். தமது சாதனைகளால் நிறைவு பெற்றவர்கள் மனிதகுல மேம்பாட்டுக்குத் தலைமையேற்கும் தகைமை பெறுகின்றனர். மனிதர்களுக்கு உதாரணபுருடர்களாய் விளங்குபவர்கள்- இவர்களை மகான்கள் எனவும் அனுபூதி நெறியாளர் என்றும் ஞானிகள் என்றும் போற்றுவர்.

கிறிஸ்தவ சமயத்திலும் மனிதன் தன்னை புதிய மனிதனாக உருவாக்கும் வகையில் ஈடுபடுதல் வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. எமது உள்ளத்தில் உள்ள நற்குணங்களுக்கேற்பவே எமது செயல்களும் நல்ல செயல்களாக அமைதல் வேண்டும் என்பது அச்சமயத்தின் போதனையாகும். இயேசு கிறிஸ்து தமது உள்ளத்தை நன்கு அறிந்தவர் என்ற காரணத்தினால் அனைவராலும் போற்றப்படுகிறார். இவ்வாறாக உலகிலுள்ள அனைத்து சமயங்களும் வாழ்க்கையை ஆத்மிக விழிப்புணர்வுக்குரிய ஒரு சந்தர்ப்பமாக வற்புறுத்துகின்றன. கடவுள் சத்தியத்திற்கும் சத்தியமானவர். இனமத வேறுபாடின்றி நாமனைவரும் அவரது குழந்தைகள் என்ற நிலைப்பாட்டினைப் பல சமயங்கள் வற்புறுத்துகின்றன. கடவுள் பற்றிய உள்ளுணர்வு அனைவரது உள்ளங்களிலும் உள்ளது. அதனை ஆர்வத்துடன் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மனித இனம் இந்த உயர் உண்மையை நோக்கிச் செல்லும் போது அனைத்து நிலையிலும் சகோதரத்துவ உணர்வு பரிணமிக்கின்றது. இந்து, அல்லது இஸ்லாம் அல்லது பௌத்தம் அல்லது கிறித்தவம் ஆகிய எம்மதத்தினின்று நோக்கினாலும் எமது உள்ளத்தில் நேர்மையும் எமது முயற்சியில் ஊக்கமும் இருப்பின் அந்த உயர் நிலையை அடைதல் கூடும். சாந்தி வழியையும் சகோதரத்துவத்தையும் உலகிற்குப் போதிப்பதில் இஸ்லாத்தின் பங்கு அளப்பரியதாக அமைகின்றது.

உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் அனைத்துச் சமயங்களிலும் ஆக்கபூர்வமான குழுவினர் சமய மேம்பாட்டுக்கு அயராது உழைத்து வருகின்றனர். பல்வேறு நிறுவனங்கள் இதற்காகப் பணிபுரிந்து வருகின்றன. நம்பிக்கைக்கான உலக நிறுவனம் (**World Congress of Faith**)- *1936;* சமயம் மற்றும் தேவாலய சமாதான சங்கத்தின் மூலம் உலக நட்புரிமை அமைப்பு (**World Alliance for Friendship through Religion and Church Peace union**) - *1914*, உலக சகோதரத்துவம் (**World Brotherhood**) - *1950*, உலக ஆத்மிக சபை (**World Spiritual Council**) - *1946*, சமய ஆய்வுக்கான சங்கம் (**Society for the study of Religions**) - *1924* - போன்றவை இவ்வகையிற் குறிப்பிடத்தக்கன.

சமயங்களுக்கிடையிலான பொறையும் விளக்கமும் இந்தியாவைப் பொறுத்தவரை புதிதான தொன்றல்ல. அசோகமன்னன் தனது 12 ஆவது கற்சாசனத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான். தான் பின்பற்றும் சமயத்திற்கு மதிப்பளிக்கும் ஒருவன் தனது சமயத்தின் பெருமைக்காக ஏனையோரது சமய நெறிகளை இழித்துரைப்பானாயின் அத்தகைய செயலினால் தனது சமயத்திற்கே பெரும்பாதகத்தை ஏற்படுத்தியவனாவான். எனவே சகிப்புத் தன்மை மிகவும் சிறந்ததாகும். என்ற கருத்து சமயங்களுக்குரிய மதிப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

மகாத்மாகாந்தி அனைத்துச் சமயங்களின் ஒருமைப் பாட்டினைப் பின்வருமாறு வற்புறுத்துகின்றார், உலகில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மிகவும் அன்புடன் சமயங்களின் திருநூல்களை(**Scriptures**) வாசித்தல் வேண்டும் என்பதை மனதார விரும்புகின்றேன். உலகிலுள்ள சமயங்களைப் பற்றி நட்புரிமையுடன் ஆய்வு செய்தல் புனித கடமைகளுள் ஒன்றாகும்'' என்பது மகாத்மா காந்தியின் கருத்தாகும்.

டாக்டர். இராதாகிருஷ்ணன் ''பல்வேறு சமய மரபுகளின் சிறப்பு மிக்க கருத்துக்களை செல்வமாகக் கருதவேண்டும். எமது நாட்டுக்கோ சமயத்திற்கோ மாத்திரமன்றி நாமனைவரும் முழுமனித குல பாரம்பரியத்தினதும் வாரிசுகளாகும் எனக் கூறுகின்றார். - இக்கருத்து மேற்கத்தைய சமய வட்டத்திலும் நிலவுகின்றது. மனித குலத்தின் ஆத்மிக வாழ்வுக்கு ஊட்டமளிப்பதாக இருப்பின் உலகில் உள்ள அனைத்துச் சமயங்களையும் நட்புரிமையுடன் நாம் பேணுவதையே எமது உயரிய பணியாகக் கொள்ளுதல் வேண்டும். ஒன்றையொன்று வளர்ப்பதற்கு இப்பணி நன்கு துணைபுரிவதாகும். அத்துடன் உலகம் விமையும்

ஆன்ம வலுவையும் இப்பணியின் மூலம் பெறலாம் என்பது டாக்டர் இராதாகிருஷ்ணனின் கருத்தாகும்.

வடஇந்திய பக்தி இயக்கத்தில் கபீர் தாஸ் குறிப்பிடத்தக்கவர். கபீர் தாஸ் ராமபத்த சிரோன்மணியாவார். பெற்றோர்கள் இன்னாரென்றே தெரியாத ஒரு குழந்தையை ஒரு முஸ்லிம் தம்பதியர் காப்பாற்றி ஆளாக்கினர். இவரது ஆத்மாவில் ராமபத்தி இருந்து வந்தது. சிறுவன், ராமானந்தர் என்ற பத்தரை அணுகி, தனக்கு ராமதாரகமந்திர உபதேசம் செய்யும்படி வேண்டினன். இவனை ஒரு முஸ்லிம் சிறுவன் என எண்ணி, இவனுக்கு உபதேசம் செய்ய ராமானந்தர் மறுத்தார். சிறுவனே தன் விடா முயற்சியைக் காட்டியதால், ராமானந்தர், ராமநாம தாரக மந்திர உபதேசம் செய்தார். உபதேசம் பெற்ற கபீர் மேலானதோர் ராமபத்தனுக விளங்கினர். தன் உடைமைகளை விற்று ராமபத்தர்களுக்குப் பணிவிடை செய்வதில் கழித்தார். இரு சமயங்களுக்கிடையிலான ஒருமைப்பாடு இவர் மூலம் ஏற்படலாயிற்று. இவர் மறைந்த பொழுது முஸ்லிம்களும் இந்துக்களும் 'இவர் எங்கள் இனத்தவர்' என்று போட்டி போட்டுக்கொண்டு கௌரவம் அளித்தமை இதற்குச் சிறந்த சான்று.

மதங்களின் ஒற்றுமை பற்றிக் குறிப்பிடுமிடத்து ஸ்ரீ இராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறுகின்றார். 'எல்லா மார்க்கங்களின் வாயிலாகவும் கடவுளை அடையலாம். சமயங்கள் அனைத்தும் உண்மையானவைகளே' என்றும், மதக்கொள்கையில் ஒரு சார்புடையவன், பக்குவமடையாதவன். ஞான நெறியிற் பக்குவமடைந்தவன், சமயங்கள் அனைத்தும் ஒரே குறிக்கு வழி காட்டுகின்றன என்பதை அறிகின்றான் என்றும், ஹிந்து மதம் இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம் ஆகியவைகளையெல்லாம் நான் அனுஷ்டித்துப் பார்த்திருக்கிறேன். அவை யாவும் ஒரே பரம்பொருளிடத்துச் சாதகனை எடுத்துச் செல்கின்றன என்பது எனது அனுபவம். ஆனால் ஒவ்வொரு மார்க்கத்திற்கும் அதனதன் தனி இயல்பு உண்டு எனவும் கூறும் கருத்துக்கள் உலக மதங்களின் சமரசத் தன்மையையும் ஒருமைப்பாட்டினையும் எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

ஸ்ரீ இராமகிருஷ்ண நல்லியக்கத்தினை நிறுவுவதில் முன்னோடியாக விளங்கிய சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்களும் சமயங்களின் ஒருமைப்பாட்டினை வற்புறுத்த வல்லன. **1893** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிகாகோ நகரில் சர்வசமய ஆராய்ச்சிப் பெருங்கழகத்தில் செய்த விரிவுரைகள் சமய மேம்பாட்டினை எடுத்துக் கூறுவன. இந்திய நாட்டின் சமய ஒருமைப்பாட்டு உணர்வை வெளி உலகுக்குத் தனது இயக்கத்தின் வாயிலாக வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியவர் சுவாமி விவேகானந்தர். தமது சிகாகோ பிரசங்கத்தில்,

'பிறருடைய கொள்கையை வெறுத்தொதுக்காத பண்புடைமை அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற பொது நோக்கு என்னுமிரண்டினையும் உலகிற்குக் கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமைபாராட்டுகின்றேன். எல்லாச் சமயங்களையும் அன்பினோடு நோக்குகின்ற பண்புடைமையிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அதுமாத்திரமல்ல நாங்கள் எல்லாச் சமயங்களையும் உண்மை மார்க்கங்களென ஏற்றுக் கொள்ளுகிறோம்.'

எனக் கூறியவை சமய ஒருமைப்பாட்டு உணர்வுக்குச் சிறந்த சான்றாகும். அத்துடன் 'ஒரு மதத்தின் இறைவன் எல்லா மதங்கட்கும் இறைவனுவான்' என்ற கருத்தும், 'ஒரு மதம் உண்மையானால் அப்போது மற்றவையெல்லாம் உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஆக, இந்து மதம் எனக்கு உடைமையாகும் அளவிற்கு உமக்கும் உடைமையாகும் என்றசிந்தனையும், 'உங்கட்கு முன்னல் இந்த வாக்கியத்தை எழுதி வைத்துக் கொள்ளுங்கள் : 'பொது மக்களது மதத்தைக் கெடுக்காது அவர்களை உயர்த்தல் என்பதை' - என்ற கூற்றும் அவரது சர்வ மத ஒருமைப்பாட்டுக்கு நல்ல உதாரணங்களாகும்.

இவ்வகையில் உலகில் இன்று நடைமுறையில் உள்ள அனைத்து மதங்களும் தத்தமக்கேயுரிய சிறப்பான வழிமுறைகளைக் கொண்டு விளங்கியபோதும் அனைத்து மதங்களின் இறுதி இலட்சியம் மனிதகுல மேம்பாடாகவே அமைகின்றமை குறிப்பிடத் தக்கது. மனிதனை நிறைமனிதனாக ஆக்க முயல்வதே சமயங்களின் உயர் இலட்சியமாக அமைகின்றது. அனைத்துச் சமயங்கள் ஒவ்வொன்றையும் நன்கு புரிந்துணரும் பொழுது ஒருவனுக்குத் தான் சார்ந்துள்ள சமயத்தின் உண்மைகளை நன்கு உணரக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

— O —

## உதவிய நூல்கள்


### தமிழ் நூல்கள்

*அமரதாச, கே. ஜீ.* **''வெசாக் மலர்''** -
*கலாசார அலுவல் அமைச்சு, கொழும்பு, 1984*

*சுப்பிரமணியன், ஏ. வி.* **ஆன்மீக விளக்கு,**
*கலைஞன் பதிப்பகம், சென்னை, 1980*

*சுவாமி விவேகானந்தர்,* **சிகாகோ பிரசங்கம்,**
*ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், 9 ஆம் பதி. சென்னை, 1975*

*சுவாமி விவேகானந்தர்,* **எனது வாழ்வும் பணியும்**
*ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை, 1956*

*மகாதேவன், டி. எம். பி -* **இந்து சமயத் தத்துவம்**
*தமிழாக்கம் : ஞா. இராஜாபகதூர், தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழ்நாடு, 1964.*

*வெங்கட்ராவ், கே.* **கடவுளைக் கண்டேன்**
*மாருதி பதிப்பகம், சென்னை, 1983*

*ஸ்ரீமத் பகவத் கீதை, தபோவனப் பிரசுராலயம், திருச்சி, 1966*
*ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி, 1976*

### ஆங்கில நூல்கள்

David Stent, **Religions Studies Made Simple**, Heinemann, London 1983

Radhakrishnan, S. **Religion and Culture** Orient Paperbacks. New Delhi 1968

Radhakrishnan, S. **Our Heritage** Orient Paperbacks New Delhi. 1973

# சமணம்

திரு. க. உமாமகேஸ்வரன்

**"ஜைனம் (சமணம்) பாரத நாட்டின் பழம்பெருஞ் சமயம். மரம், செடி, கொடிகளுக்கு உயிர் உண்டு என்ற உண்மையை உலகுக்குணர்த்திய பெருமை ஜைனத்துக்குரியது. ஜைனம் கூறும் அவ்வுண்மையை நிரூபிக்கும் கருவி ஒன்றைக் கண்டறிந்தது மட்டுமே யான் ஆற்றிய பணி."**

மரஞ்செடி கொடிகளுக்கு உணர்ச்சியுண்டென்பதை விஞ்ஞானக் கருவி மூலம் அகிலஉலக விஞ்ஞான (ஜெர்மனி) மகாநாட்டில் விளக்கிக் காட்டிய பாரத விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திரபோஸ் மிகுந்த தன்னடக்கத்துடன் கூறிய வார்த்தைகள் இவை. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இச்சம்பவம் சமணத்தின் உலகளாவிய பெருமையை உணர்த்தி நிற்கிறது.

சமணக்கொள்கைகளைப் பரப்பவெனத் தீர்த்தங்கரர் என்னும் அறவோர் அவ்வப்போது உலகிலே தோன்றுவர் என்பது சமணசமய நம்பிக்கைகளில் ஒன்று. இதுவரை இருபத்துநான்கு தீர்த்தங்கரர் தோன்றியுள்ளனர்; இனிமேலும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர் தோன்றுவர் என்பது சமண ஐதிகம். புலன்களையும் கன்மங்களையும் வென்றவர் ஆதலின் தீர்த்தங்கரர்களை ஜினர் (வென்றவர்) எனல் மரபு. எனவே ஜினரை வழிபடும் மதம் ஜைனம் என வழங்குகிறது.

துறவு நெறி நின்றே வீடு பேற்றினை எய்த முடியும் என வலியுறுத்தும் மதம் ஜைனம் ஆதலின் துறவு எனப் பொருள் தரும் சமணம் (ஸ்ரமணம்) என்ற பெயரும் ஏற்பட்டுவிட்டது. சமண சமயத்துக்கு ஆருகதம், நிகண்டம், அநேகாந்தவாதம் (ஸியாத்வாதம்) முதலிய பிற பெயர்களும் உண்டு.

பாகவத புராணம், பகவான் விருஷபதேவர் (முதலாவது தீர்த்தங்கரர்) ஜைனதர்மஸ்தாபகர் என்கிறது. யஜுர் வேதம், பகவான் விருஷபதேவர், அஜிதநாதர் (இரண்டாவது தீர்த்தங்கரர்), அரிஷ்டநேமி (இருபத்திரண்டாவது தீர்த்தங்கரர்) ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. எனவே "வேதங்கள் எழுதப்படுவதற்கு முன்னரே ஜைனதர்மம் இருந்ததென்பதிற் சிறிதும் ஐயமில்லை" என டாக்டர் இராதாகிருஷ்ணன் தமது இந்திய தத்துவம் என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

முதன் முதல் எழுதுக்களையும் எழுதுங் கலையையும் பகவான் விருஷபதேவரே தோற்றுவித்தார். பிராமி எழுத்துக்களைக் கண்டுபிடித்தவரும் அவரே என வரலாற்றுத்துறைப் பேராசிரியர் என். என். பாசு, இந்தி விசுவகோசா என்னும் நூலிற் கூறுகிறார். வரலாற்றாசிரியர் சிலரோ, பார்சுவநாதர் (இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர்) சமணமதத்தை உண்டாக்கினார். பின்வந்த ஞாதிபுத்திர வர்த்தமான மகாவீரர் (இருபத்து நான்காவது தீர்த்தங்கரர்) சமணசமயத்தைச் சீர்திருத்தி அமைத்தார் என்று கருதுவர்.

கி.மு ஆறும் நூற்றாண்டு உலக வரலாற்றிலேயே முக்கியமானதொரு நூற்றாண்டு. உலக மதங்களின் போக்கில் மாபெரும் மாறுதல்களைத் தோற்றுவித்த பெரியோர் தோன்றிய காலம் அது. யூதமதத்துக்குப் புத்துயிர் அளித்த இசையா, சீனப்பேரறிஞரான கன்பூசியஸ், லூட்ஸு கிரேக்க அறிஞர் ஸோலன் என்போர் இக்காலத்தில் வாழ்ந்தனர். சமணசமயத்தைப் பரப்பிய மகாவீரர் (ஏ: 540 - 467) வாழ்ந்ததும் இக்காலத்திலேதான். பௌத்தத்தை நிறுவிய கௌதமபுத்தரும் ஆசீவகமதத்தைத் தோற்றுவித்த மற்கலியும் மகாவீரர்

காலத்தவரே. மற்கலி மகாவீரருடன் ஆறு ஆண்டுகள் இணைந்திருந்தார்; பின் பிரிந்தார்; ஆசீவகமதம் பிறந்தது. பௌத்தம் ஆசீவகம் ஆகிய மதங்களுக்கு முற்பட்ட மதம் சமணம்.

சமணம் பிற்காலத்தில் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து விட்டது, சுவேதாம்பரம், திகம்பரம், ஸ்தானகவாசி என்பனவே அவை. வெண்ணிற ஆடை தரிக்கும் சமணத்துறவிகளே சுவேதாம்பர சமணர் ஆவர். இவர்கள் வழிபாடியற்றும் தீர்த்தங்கரர் திருவுருவங்களுக்கும் வெண்ணிற ஆடைகளையே அணிவிப்பர். திகம்பர சமணத்துறவிகள் ஆடை எதுவும் அணிவதில்லை. இவர்கள் வழிபாடியற்றும் தீர்த்தங்கரர் திருவுருக்களுக்கும் ஆடை உடுத்துவதில்லை. சுவேதாம்பர சமணர் போலவோ திகம்பரசமணர் போலவோ ஸ்தானகவாசி சமணர் உருவவழிபாடியற்றுவதில்லை. இவர்கள் சமண ஆகம நூல்களை தீர்த்தங்கரராகவும், அருகனாகவும் பாவனை செய்து வழிபடுவர். சுவேதாம்பர, ஸ்தானகவாசி சமணர் வட இந்தியாவில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டில் இன்றும் வாழும் சமணர் திகம்பரசமணரே. திகம்பரசமணர், ஸ்தானகவாசி சமணர், பெண்கள் வீடுபேறெய்த இயலாது. தவமியற்றிப் பெண்பிறவி நீங்கி அடுத்த பிறவியிலே ஆணாய்ப்பிறந்துதான் வீடுபேற்றினை அடையமுடியும் என்ற கொள்கையினர். மல்லி என்ற பெண் அப்பிறவியிலேயே தீர்த்தங்கரரானார் என்பர் சுவேதாம்பர சமணர். திகம்பர சமணரோ மல்லி தவஞ்செய்து அடுத்த பிறவியில் மல்லிநாதர் என்ற ஆணாகப் பிறந்து வீடெய்தித் தீர்த்தங்கரரானார் என்பர்.

வேதகால சிந்தனைகளுக்கெதிராகக் கற்பிக்கப்பட்ட பல நாத்திகக் கொள்கைகளில் இன்றுவரை இந்தியாவில் எஞ்சிநிற்பது சமணம் ஒன்றே. வேதத்தை அளவையாக ஏற்க மறுத்தல், வாழ்க்கை பற்றிய துன்பியல் நோக்கு, கடவுள் ஒருவர் உண்டென நம்பாமை என்னும் அமிசங்களிற் சமணம் பௌத்தத்தை ஒத்துளது. ஆன்மா, சடம் முதலாம் நிலையான பொருள்கள் உண்டென ஏற்றுக்கொள்வதில் பிராமணக் கொள்கையை அது ஒத்துளது. எனவே பிராமணக் கொள்கைக்கும், பௌத்தத்துக்கும் சமய சித்தாந்த இடைநிலை (theological mean) தான் சமணம்'' என இந்திய மதங்கள் என்னும் நூலிற் பேராசிரியர் ஹொப்கின்ஸ் (Prof. Hopkins) கருதுவார்.

இவ்வுலகம் ஆதியும் அந்தமும் அற்றது; அணுத்திரள்களால் ஆயது. எக்கடவுளாலும் படைக்கப்படாதது. இயற்கையின் பாற்பட்டது. நிலம், தீ, காற்று, நீர், வெளி ஆகிய ஐந்தின் சேர்க்கையை உடையது. உலகை இரண்டு பெரும் பிரிவாக நோக்கலாம் ஒன்று ஜீவன் (உயிர்) மற்றையது அஜீவன் (உடலும் ஏனைய சடப்பொருள்களும்) என்ற சமணர் கொள்கை அவர்கள் மெய்ம்மை வாதிகள் என்ற உண்மையைத் துலக்கி நிற்கக் காணலாம்.

நம்புலன்களுக்கு விடயமாகும் பௌதிகப் பொருள்கள் அனைத்தையும் அஜீவன் (புற்கலம்) என்பர் சமணர். சேர்ந்து ஒன்றாகவும் பின்பிரிந்து பல ஆகவும் வல்லனவே புற்கலங்களாம். சேர்ந்து ஒன்றான நிலையிற் புற்கலங்களை புலன்களால் நுகர முடியும். ஸ்கந்தங்கள் என்பது இந்நிலையிலான புற்கலங்களையே, உலகில் நாம் காணும் பொருள்கள் அனைத்தும் ஸ்கந்தங்களே. அண்டம்முழுவதும் சமணர் கருத்துப்படி ஒரு மகாஸ்கந்தமாகும்.

சேர்க்கைப் பொருள்களை மேலும் பிரித்துக் கொண்டே போனால் இனிப்பிரிக்க முடியாத தனிமூலப்பொருள்களை அடையலாம். இது புற்கலத்தின் இரண்டாவது நிலை. இங்ஙனம் பெறப்படும். மிகச்சிறிய அணுக்களிலிருந்தே மிகப்பெரிய இவ்வுலகம் உண்டாயிற்றென்பது சமணர் கருத்து. அணுவாயும் ஸ்கந்தமாயும் உள்ள புற்கலம் மட்டும் உலக உற்பத்திக்குப் போதாதெனக் கண்ட சமணர் அவற்றோடு ஆகாசம், காலம் என்பன சேரவேண்டும் என்பர். எனவே, இவையிரண்டும் அணுக்களையொத்த அநாதிதிரவியமென்பது அவர் கொள்கை.

சமணர்களின் உயிரியல் ஆராய்ச்சி விளக்கம் விரிவானது; அறிவுக்கு விருந்தாய் அமைவது. புலன்களுக்கேற்ப உயிர்களை அவர்கள் பகுத்தறிந்துள்ளார்கள். புலன்களின் எண்ணிக்கைக்கேற்பவே பகுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாவரங்களுக்கும் உயிர்உண்டு என்பதை முதன்முதலில் அறிவித்தவர்கள் சமண அறவோர்களே! உடல்வேறு உயிர்வேறு என்னுந் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது சமணம்.

மண்ணை உடலாக உடைய உயிர்கள், நீரை உடலாக உடைய உயிர்கள், நெருப்பை உடலாக உடைய உயிர்கள், காற்றை உடலாக உடைய உயிர்கள், மரஞ்செடி கொடிகளை உடலாக உடைய உயிர்கள் என உயிர்கள் பல திறத்தவை என்பது சமணரின் கோட்பாடு. எனவே சமணர் பன்மைவாதிகளாகவும் மிளிரக் காண்கின்றோம். இவைதவிரக் கண்களுக்குப் புலனாகாத உயிரணுக்கள் பல உள. இவை உணர்ச்சி என்ற புலன் ஒன்றுமட்டும் உடையவை. உயிர்களில் உயர்ந்த இனத்துக்கு ஐவகைப் புலன்கள் உள. மனித இனம் உயிர்வகைகளுக்கெல்லாம் தலையாயது. இந்திரியத்தின் உருவம் எனப்படும் மனமெனும் ஆறுவது புலனும் படைத்தது மனித இனம் என்பது சமணர் சித்தாந்தம்.

ஆன்மாக்கள் எண்ணிலாதவை. அவை என்றோ ஒரு நாள் தோன்றியவை அல்ல. என்றோ ஒரு நாள் அழிவனவும் அல்ல. உடலோடும் உலகோடும் தொடர்புற்ற நிலையில் (வியவகாரிக நிலை) ஆன்மா தன் இயல்பின் நீங்கிப் பேரறிவு கெட்டுச் சிற்றறிவுற்று அல்லற்படும். சடசம்பந்தம் இல்லாதபோது ஆன்மாவின் சுயரூபம் விளங்கித் தோன்றும் அந்த நிலையில் அவை முற்றுணர்வும் முடிவிலாற்றலும் உடையவை. சாந்தமும் ஞானமுமே அவற்றின் இயல்பான சொரூபம்.

புலன், பொறி அனைத்தும் ஆன்மாவைச் சிறைப்படுத்தும் தளைகள். இக்கட்டுக்களைக் களைந்து விட்டால் ஆன்மா தன் இயல்பாகிய சைதன்ய சொரூபம் ஆகிவிடும். ஆன்மா அடையும் இம் முற்றுணர்வுக்கு - பூரண ஞானத்துக்கு - கேவலக்ஞானம் என்று பெயர். தனக்கென வடிவம் ஏதுமில்லாத ஆன்மா தான் எந்த உடலை எடுக்கிறதோ அந்த உடலின் வடிவத்துக்கு ஏற்பப் பருமனும் அளவும் கொள்ளும் என்பது சமணம் தரும் தனித்துவமானதொரு விசித்திர விளக்கமாகும்.

அறை ஒன்றின் நடுவில் வைக்கப்பட்ட விளக்கு கூடிக் குறைதல் ஆகிய மாற்றம் ஏதுமின்றி அறை முழுவதையும் ஒளியாக்குவது போல உயிர் எந்த உடலிலுள்ளதோ அவ்வுடலுக்குத்தகப் பரவி உயிர்ப்பிக்கும் என்பது சமணக் கொள்கை.

சமண அறவோர் அறிவினால் அறியப்படும் செயலை ஐந்து பிரிவுகளாக வகுத்துள்ளனர். ஐம்புலன்களால் அறியும் அறிவு (புலன் அறிவு) மதிஞானம் எனப்படும். நூல்களாற் பெறப்படும் அறிவு (நூலறிவு) சுருதஞானம் எனப்படும். வெகு தொலைவிலுள்ள பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் அறியும் அறிவு அவதிக்ஞானம் எனப்படும் பிறர் மனசிலுள்ள உணர்ச்சிகளைத் தெரிந்து கூறும் அறிவு மனப்பரியைஞானம் எனப்படும்.

தீர்த்தங்கரர்களும் முனிபுங்கவர்களுமே கேவலக் ஞானத்தைப் பெற்றுவிளங்கினர். மூன்றாவது அறிவாகிய அவதிக்ஞானம் புலன்களால் அறியப்படுவதன்று. மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் தூரமனோ திருஷ்டி என்னும் இவ்வறிவு ஒவ்வொரு மனிதனிடமும் மறைந்து கிடக்கும் ஓர் ஆற்றல் என்றும் கூறுகின்றார்கள். நான்காவதான மனப்பரியை ஞானத்தை அறிவுத்துறை யாராய்ச்சியாளர் ''டெலிபதி'' என்பர். அருமைமிக்க இவ்வறிவை முற்றுந்துறந்த முனிவர்தம் கடுந்தவத்தாலடைந்து கன்மத்தைத் தொலைத்து வீடுபேற்றினை யடைவர்.

நல்லொழுக்கத்தினாலும், தூய தவத்தினாலும் மக்கள் பண்பும் அறிவும் பெற்றுயர்ந்து வினையின் நீங்கி வீடுபேற்றினை

யடையலாம் என்றும் ஆத்மீகக் கலையை சமண அறவோர் உலகுக்கு வழங்கியுள்ளனர். இதனால் ஒவ்வொரு மனிதனும் தன்சொந்த முயற்சியாலும் ஒழுக்கத்தாலும் உயர்ச்சியடைய வேண்டும் என்பதைத் தெளிவாக்கியுள்ளனர்.

"தன்னைச் சிறுவனாகச் செய்வானுந் தானே
தன்னை இறைவனாகச் செய்வானுந் தானே"

என் அறநெறிச்சாரம் இதனைப் புலப்படுத்தக் காணலாம்.

பகவான் விருஷபதேவர் வகுத்தருளிய அறநெறி இல்லறம் துறவறம் என இரு வகைப்படும். இவ்விரு அறநெறிகளும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பவை என்கிறது.

> " நோற்பவர் இல்லவர்க்குச் சார்வாகி இல்லவரும்
> நோற்பவர்க்குச் சார்வா அறம்பெருக்கி – காப்புடைக்
> காழுங் கடுகும்போல் நிற்கும் கலக்கின்றி
> ஆழிசூழ் வையத் தறம்

எனவரும் அறநெறிச்சாரம்.

இல்லற இன்பங்களைப் பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்பதும் பின்னர்த் தலைவனும் தலைவியும் துறவறத்துக்கான ஒழுக்கங்களை இல்லறத்திலேயே பயில வேண்டுமென்பதும் சமண மதத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. ஈற்றிற் துறவறநெறி நின்றே வீடுபேற்றினை அடைய முடியும்.

இவ் அறநெறிகளை முதன் முதல் உலகுக்கு உரைத்தவர் விருஷபதேவரே என்பது சமணரது நம்பிக்கை. விருஷபதேவர் சமயம் அல்லது மதமெனத் தமது அறிவுரைகளைக் கூறவில்லை. அறமென்றே அவற்றைக் குறித்தார். இவரது அறநெறி அன்பின் அடிப்படையில் மக்கள் சமுதாயத்துக்கே உரியதாக அமைந்தது.

இல்லறம் மக்கள் உள்ளத்தைப் பண்படுத்த வல்லது. துறவறம் ஆன்மீக நெறியிற் செலுத்தி வீடுபேறு தரவல்லது. இல்லறத்தைச் செம்மையுற நடத்தியோரே துறவறத்தில் வெற்றிகாண முடியும். இல்லறத்தைப் பண்புடன் ஆற்றுதோர் துறவறத்தை மேற்கொள்ளல் ஆகாது என விருஷபதேவர் எச்சரித்துள்ளார் என்பர்.

## நான்கு சாதனங்கள்

இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டியனவென நான்கு சாதனங்கள் சுட்டப்பட்டுள்ளன. அன்னதானம், அபயதானம், மருந்து தானம், கல்விதானம் என்றநான்கு தானங்களையும் மக்கள் வாழ்க்கை நலத்திற்கு உதவிபுரியும் வகையில் இல்லறத்தார் மேற்கொள்ளவேண்டும்.

## இல்லறத்துக்குரிய 12 அடிப்படைக் கொள்கைகள்

1. உயிர்களை அழித்தல் ஆகாது.
2. பொய்பேசுதல் ஆகாது.
3. பிறர் பொருளை அனுமதியின்றி உபயோகித்தலாகாது.
4. தூய்மையாய் இருத்தல் வேண்டும்.
5. தம் உடைமைகளை ஓரளவிற்கு வரையறை செய்துகொள்ளவேண்டும்.
6. குறிப்பிட்ட திசைகளிற் குறிப்பிட்ட தூரம் போவதென நாடோறும் உறுதி செய்தல் வேண்டும்.
7. பயனற்ற பேச்சையும் செயலையும் நீக்கல் வேண்டும்.
8. பாவச்செயல்களை நினைத்தலும் ஆகாது.
9. அன்றாட உணவு, இன்பம் என்பவற்றை வரையறை செய்துகொள்ளல் வேண்டும்.
10. காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் குறித்த நேரங்களில் வழிபாடியற்ற வேண்டும்.
11. சில நாள்களில் உண்ணா நோன்பு இயற்றல் வேண்டும்.
12. நாள்தோறும் அறிவு பொருள் என்பவற்றைத் தயார் செய்தல் வேண்டும்.

## மும்மூடங்கள்

நல்லறங்கள் மேற்கொள்ளத் தளமாய் இருப்பவை மூடநம்பிக்கைகள். அவை தேவ மூடம், உலக மூடம், பாசண்ட மூடம் என மூவகைப்படும்.

**தேவ மூடம் :** தன்னைத் தெய்வம் வாழ் விக்கும் என அதனை வழிபடல்.

கோபமும் கொடூரமும் வாய்ந்த தெய் வங்கள் உண்டென நம்பி அச்சத்தோடு வழிபடல்.

**உலக மூடம் :** புண்ணியம் பெறலாம் என மலைமீதேறி வீழ்ந்து இறத்தல். உலகிற் கூறப்படும் பல போலிக் கொள்கைகளை ஆராயாமல் நம்பிப்பின்பற்றல்.

**பாசண்ட மூடம் :** துறவிகளுக்குரிய அற நெறிகளைப் பின்பற்றாமல் தியாகம் அறிவு என்பனவின்றித் தன்னலங் கருதி துறவி வேடம் புனைந்து ஏமாற்றும் போலித் துறவிகளை வணங்கி வாழ்த்துதல்.

இம்மூன்று மூடங்களின் நீங்கினவனே அறிவுடையோன், அவனே மயக்கமற்ற மாசறு காட்சியினன். அத்தகையோனே நல்லறங்களை உறுதியுடன் கடைப் பிடிப்போன்.

## மும்மணிகள்

உலகியல் துறையில் மக்கள் வாழ்க் கையைப் பண்படுத்தியது போன்றே ஆன்மீகத்துறையிலும் - துறவறத்திலும் - சாதனைக்கு இன்றியமையாதனவாகிய நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்னும் மூன்றுமணிகளை வழங்கியுள்ளார் சமண அறவோர்.

**நற்காட்சி :** உண்மைப் பொருளை ஆராய்ந் தறிதல்

> **"மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி என்றுரைப்பர் எப்பொருளுங் கண்டுணர்ந்தார்"**

என அருங்கலச்செப்பு அறைகின்றது.

**நல்ஞானம் :** நூற்பொருளில் அறிவைச் செலுத்துதல் நல்ஞானம் எனப்படும்.

**நல்லொழுக்கம் :** அப்பொருள் வழி ஒழுகுதல் நல்லொழுக்கம் எனப்படும்.


உலகியல் வாழ்க்கை சிறப்புற இல்லற நெறியினை சமண அறவோர் எவ்வாறு வகுத் தருளினரோ அவ்வாறே ஆன்மீக வளர்ச் சிக்குரிய துறவற நெறிகளையும் ஊழ்வினை பற்றிய விளக்கங்களையும் சியாத்வாதக் கொள்கைகளையும் சமண அறவோர் உலகுக்கு மெய்நெறியாக வழங்கியுள்ளனர்.

தமிழ் மொழியை வளம்படுத்தியதிற் சமணருக்கும் பெரும் பங்குண்டு. தொல் காப்பியம், இறையனாரகப்பொருள், புறப் பொருள் வெண்பாமாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் பிரயோக விவேகம் தவிர்ந்த ஏனைய இலக்கணப் பரப்பெல்லாம் சமணர் இட்ட பிச்சையே என்பர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.

மேனுட்டார் அகராதி தொடங்குமுன் நிகண்டுகளைப் படைத்துதவியோர் சமணர் களே. மணிமேகலை, குண்டலகேசி தவிர்ந்த பழைய காப்பியங்கள் அனைத்தும் சமணர் படைத்தவையே. காப்பிய வழியினைக் கம்பர் முதலியோர்க்குச் செவ்வனே அமைத் துதவிய முன்னோடிகளும் சமணரே. சமண ரது ஸ்ரீ புராணம் உரைநடைக்காலப் பழைய இலக்கியத்துக்கு எடுத்துக்காட்டாய் அமைந் துள்ளது. தமிழிலக்கியப் பரப்பில் நன்முத் துக்களாய் ஒளிரும் அறநூல்களிற் பல, சமணர் எழுதியவையே. பல்துறையிலும் தமிழ்ப் பணிபுரிந்த சமணரது அருந் தொண்டை மறத்தல் எளிதன்று.

— O —

# எங்கள் கலாலயம்



வண்ணமுறும் கட்டிடங்கள் பலவே ஆக்கி
வனப்புவளம் ஊட்டுவகை கலால யத்தை
அண்ணலவன் அருளாலே ஆக்கித் தந்த
கலாவல்லி ஆறுமுக தாசன் எங்கள்
பண்மகளின் பங்களிப்பை பாருக் கோதப்
பாங்குடனே ஓங்கிநிற்கும் மண்ட பத்தைக்
கண்ணெதிரே காணுகின்றீர்! காட்சி என்னே
கற்பகமாம் 'திரு'வுக்கு எங்கள் நன்றி!